
கல்கி

KALKI 21.4.96 ரூ. 3.00




"பொய்ப் பிரசாரம் செய்கிறார் ஜெயலலிதா!"

- கருணாநிதி பரபரப்புப் பேட்டி

ஸ்தாபிதம் 1989

திரு.வி.க. நகர் பெனிஃபிட் ஃபண்டு லிமிடெட்

தலைமை அலுவலகம்	: 10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யு, (திரு.வி.க. நகர் பஸ் நிலையம் அருகில்), சென்னை - 600 082. போன் : 5378690
பாரீஸ் கிளை	: 8/2, ஸ்ட்ரிங்கர்ஸ் தெரு, சென்னை - 600 108. போன் : 565760
தி. நகர் கிளை	: 20, ரங்கநாதன் தெரு, சென்னை - 600 017. போன் : 4344324
அண்ணா நகர் கிளை	: AC-38, 4வது தெரு, KHM ஆஸ்பத்திரி பின்புறம், அண்ணா நகர், சென்னை-40.



பாதுகாப்பான முறையில் சேமித்து வளருங்கள்

திருமூர்த்தி பாண்டு

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 20,000	5 ஆண்டு	ரூ. 60,000

வசந்தம் பாண்டு

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 7,000	40 மாதம்	ரூ. 14,000

பென்ஷனர் வைப்பு நிதி

முதலீடு	காலம்	வட்டி
ரூ. 10,000	1 ஆண்டு 2 ஆண்டு 3 ஆண்டு	21%

★ பென்ஷனர், ஓய்வு பெற்றோர், முதியோர் (50 வயதிற்கு மேல்), விதவைகள், ஊனமுற்றோர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

★ பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்.

பென்ஷனர் மறுமுதலீட்டு திட்டம்

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 5,000	1 ஆண்டு 2 ஆண்டு 3 ஆண்டு 40 மாதம்	6,157 7,582 9,337 10,000

எக்செல் பாண்டு - A திட்டம்

முதலீடு	காலம்	வட்டி
ரூ. 9,000	2 ஆண்டு	21%

பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்

எக்செல் பாண்டு - B திட்டம்

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 9,000	2 ஆண்டு	ரூ. 13,648

வைப்பு நிதி

முதலீடு	காலம்	வட்டி
ரூ. 5,000	1 ஆண்டு 2 ஆண்டு 3 ஆண்டு 4 ஆண்டு	18% 19% 20% 21%

பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்

மறுமுதலீட்டு திட்டம்

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 1,000	12 மாதம் 24 மாதம் 36 மாதம் 42 மாதம்	1,195 1,455 1,810 2,000

★ சேமிப்பு திட்டம் 12% வட்டி நாள் கணக்கில் வட்டி கணக்கிடப்படும்.

★ தங்க நகைகள் பேரில் ஒரு சவரனுக்கு ரூ. 2400 வரை கடன் வழங்கப்படும். மாத வட்டி 2%.

★ சென்னை மாநகர வீடு/ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும். குறைந்த வட்டி. கடன் மிக விரைவாக வழங்கப்படும்.

★ பங்குதாரர்களுக்கு மட்டும்

★ ரூ.10 செலுத்தி பங்குதாரர் ஆவீர்.

வேலை நேரம்

தலைமை அலுவலகம் : 9 முதல் 5. ஞாயிறு 9 முதல் 1

கிளைகள் : 10 முதல் 5. ஞாயிறு 10 முதல் 1

உணவு இடைவேளை இல்லை. செவ்வாய் விடுமுறை.

தொழில் நுட்பம் :

வாக்காளர்களுக்கு அடையாள அட்டை கொடுப்பதென்பது மிகவும் சுலபமான ஒரு விஷயம். ஒரு வாக்காளர் வோட்டுப் போட்டு விட்டு வெளியே வருவதற்குள்ளாகவே அவர் கையில் அடையாள அட்டையைக் கொடுத்து விட முடியும். சில விநாடிகளே போதும்! எப்படி? மேற்கொண்டு படியுங்கள்....



சந்திரசேகரன்

"கள்ள வோட்டுக்களைத் தவிர்க்கிற வகையில் ஒவ்வொரு வாக்காளருக்கும் அடையாள அட்டை கொடுக்க வேண்டும். இந்தியா முழுவதும் அடையாள அட்டை கொடுத்து முடிப்பதற்கு ஒரு வருடத்திற்கு மேல் ஆகலாம்' என்று தேர்தல் கமிஷன் அறிக்கை விட்டது. நான் உடனே தேர்தல் கமிஷனுக்குச் சென்றேன். 'அடையாள அட்டை கொடுப்பதற்கு இவ்வளவு காலம் ஆகாது. மிகவும் சுலபமாக அடையாள அட்டை கொடுப்பதோடு, நூற்றுக்கு நூறு சதம் கள்ளவோட்டையும் தடுத்து விடலாம்' என்று என் திட்டத்தைக் கூறினேன். இப்பொழுது அந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது!" என்று தமது திட்டத்தை விளக்கினார், 'பென்ட்டா ஃபோர்' (PENTA FOUR) நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டர் வி. சந்திரசேகரன்.

"ஓட்டுப் போடும்போதே அடையாள அட்டை தந்து விட முடியும்!"



"அடையாள அட்டை கொடுப்பது பற்றி வாக்காளர்களுக்கு முன்கூட்டியே சொல்ல வேண்டிய அவசியம் கூட தேர்தல் கமிஷனுக்கு இல்லை. இந்தப் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்தால் தேர்தல் அன்றைக்கு ஒவ்வொரு பூத்திலும் ஒரு ஸ்பெஷல் கேமராவை பொருத்தி விடுவோம். வோட்டுப் போட வருகிறவர்களை உடனே அந்தக் கேமரா படம் பிடித்து விடும். கூடவே வாக்காளர் பட்டியலில் உள்ள அந்த நபரின் பெயர், வயது, மற்றும் முகவரி எல்லாவற்றையுமே அந்த போட்டோவுடன் ஒரே நிமிடத்தில் பதிவுசெய்து விடவும் முடியும்.

"கேமராவுடன் கேபிள் மூலமாய் இணைக்கப்பட்ட கம்ப்யூட்டரும் அதனுடன் இணைக்கப்பட்ட பிரிண்டரும் இந்த 'விரைவு சாகசத்தை'ச் செய்யும். வோட்டு போட்டு விட்டு, வெளியில் வரும் வாக்காளர் கையிலேயே அவரது அடையாள அட்டையைக் கொடுத்து விட முடியும்" என்று கூற, நாம் நம்பிக்கையின்றி அவரைப் பார்த்தோம். அதைப் புரிந்து கொண்ட அவர், அவர்கள் நிறுவனத்தில் உள்ள ஓர் அறைக்குக் கூட்டிச் சென்று, குறிப்பிட்ட இடத்தில் ஒரு செகண்ட் நின்று விட்டு திரும்பி வரச் சொன்னார். அப்படியே செய்தோம்.

அந்த அறையை விட்டு வெளியே வந்த போது... நம் கையில்... நமது போட்டோவுடன் ஒருசில விவரங்கள் அடங்கிய அடையாள அட்டையைத் திணித்தார்! அதிசயமாகத்தான் இருந்தது. இருப்பினும் நமக்கு மேலும் பல சந்தேகங்கள் எழ ஆரம்பித்தன.

"ஓர் அடையாள அட்டையை மட்டும் பரிசோதனைக்காக செலவு பார்க்காமல் எடுத்துக் கொடுத்தீர்கள். ஆனால் இதே போலத் தேர்தல் சமயத்தில் நாடு முழுக்க உள்ள ஒவ்வொரு பூத்திலும் போட்டோக்கள் எடுப்பது சுலபமா? இதற்கு நிறையச் செலவாகுமே?" என்றோம்.

"இல்லை! 'நெட்ஓர்க்' மூலம் இப்போதைய கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்வதால் செலவு மிக மிகக் குறைந்த அளவே ஆகும். இந்த ஸ்பெஷல் கேமராவில் பிலிம் கூட இல்லை. 'ரிப்பன்'தான். இது ஆயிரக்கணக்கான போட்டோக்களை ரொம்பக் கம்மியான செலவில் எடுத்துக் கொடுத்து விடும். இந்தச் செலவு கூட, தேர்தல் கமிஷனுக்குப் பெரிதாகப்படவில்லை. அவர்கள் பயப்படுவதெல்லாம் ஒரே ஒரு பிரச்னைக்குத்தான். அதுதான், பூத்தில் இருக்கிற கேமராக்களை, கள்ளவோட்டுப் போட முடியாத கும்பல் உடைத்துவிட்டால் என்ன செய்வது என்கிற பயம்.

"அப்படிப்பட்ட வன்முறை கும்பலையும் எங்கள் கேமரா உடனே படம்பிடித்து, நெட்ஓர்க்கில் இருக்கிற மாஸ்டர் கேமராவுக்கு அனுப்பி விடும். எனவே கேமராவை அடித்து நொறுக்கியவர்கள் அந்த இடத்தை விட்டுப் போவதற்குள்ளேயே சுலபமாக அடையாளம் கண்டு கைது செய்யவும் முடியும்" என்றார் சந்திரசேகரன்.

சந்திப்பு : **எஸ். குணா**



இவர் தொட்டதெல்லாம் இனிக்கிறது!

மைதாஸ் தொட்டதெல்லாம் தங்கமானதாகக் கதை. ஆனால், பூனா அருகில் உள்ள கிராமம் ஒன்றில் வசிக்கும் பானுதாஸ் மாருதி கெய்க்வாட் தொடுவதெல்லாம் இனிப்பாகிறது. நம்ப முடியாததாக இருக்கும். பானுதாஸின் இந்த அற்புதச் செயல் – விஞ்ஞானிகளுக்குக் கூடப் புதிராக இருக்கிறது.

'இத்தகைய செயல் ஓர் ஏமாற்று வேலை' என்று பூனா நகரப் பகுத்தறிவுக் கழகத்தின் தலைவரான டாக்டர் நரேந்திர தபோல்கர் குற்றம்சாட்டினார். அந்தக் கழகத்தின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு முன் பானுதாஸ் இச் செயலைச் செய்து காட்டிய போது, அவர்களால் ஏமாற்று வேலை என்று ஒதுக்கவும் முடியவில்லை; அற்புதம் என்று ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை! தர்மசங்கடமான நிலை!

அது சரி, தொட்டதையெல்லாம் இனிக்க வைப்பது எப்படி சாத்தியமாயிற்று இவருக்கு?

''என் கிராமத்தில் தனிமை விரும்பியான எனக்கு, பைத்தியக்காரன் என்றே பெயர். எல்லோரும் என்னைக் கேலி செய்வார்கள்; கல்லெறிந்து காயப்படுத்தியதுமுண்டு. ஒருநாள் வயலில் உழைத்துவிட்டு, மரத்தடியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு கனவு கண்டேன். கனவில் ஒரு வெள்ளைப் பூ வந்தது. உடனே யாரோ என்னை எழுப்புவது போல இருந்தது. எழுந்து பார்த்தால் யாருமில்லை. இது நடந்தது 1981-ல். அதன்பின் நான் தொட்டதெல்லாம் இனிக்க ஆரம்பித்தது. நான் சாப்பிடுவதற்காக எதையாவது கையில் எடுத்தால் கூட, அதுவும் இனித்தது. ஆனால் மறுநாள் முதல், நான் தொடுபவை எனக்கு இனிக்காமல் மற்றவர்களுக்கு இனித்தது. இன்றுவரை அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு மேல் எனக்கு எதுவும் தெரியவில்லை'' என்கிறார் பானுதாஸ்.

மௌஷ்மி

சுஜாதா பக்கம்



ரைன்ஹோல்டு நீப்பூர் (REINHOLD NIEBUHR) என்னும் மதஇயலாளரின் ஒரு பிரார்த்தனை எனக்குப் பிடிக்கும்:

"இறைவா, என்னால் மாற்ற முடியாததை ஏற்றுக் கொள்ளும் மன அமைதியையும், மாற்ற முடிவதை மாற்றும் தைரியத்தையும் இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை அறியும் விவேகத்தையும் எனக்கு அளி."

இந்த உருக்கமான சாரணைப் பிரார்த்தனை, தேர்தல் சமயத்தில் நமக்கெல்லாம் தேவைப்படுகிறது. நம் ஒருவனால் — ஒருத்தியால் இந்த தேசத்தை மாற்ற முடியுமா? அதற்கு எப்படிப்பட்ட தைரியம் தேவை?

அய்ன் ராண்ட் (AYN RAND) என்னும் அமெரிக்க பெண் எழுத்தாளர் தம் நாவல்களில் அப்ஜெக்டிவிசம் என்னும் தத்துவத்தைச் சொல்லியிருக்கிறார். 'மற்றவருக்கு உதவி செய்யத்தான் நாம் உயிர் வாழ வேண்டும் என்று சொல்வதெல்லாம் அபத்தம். அந்தத் தியாகத்தின் காரணத்தை இதுவரை எனக்கு யாரும் சரியாகச் சொல்லவில்லை. உலகில் அறிவாளிகளும் அறிவற்றவர்களும் சமமல்ல..'

இவை போன்ற சர்ச்சைக்குரிய அவர் கருத்துக்களுடன் நாம் ஒத்துப் போகாவிட்டாலும் சாதாரண மக்கள் எப்படி உலகை மாற்ற முடியும் என்பதைப் பற்றிய "WHAT CAN ONE DO" என்னும் அவர் கட்டுரை, தற்கால ஹவாலா இந்தியாவுக்கு மிகவும் பொருத்தம்.

தனி மனிதனால் இவ்வளவு பெரிய தேசத்தை எப்படி மாற்ற முடியும் என்கிற சந்தேகத்தை முதலில் விட்டுவிட வேண்டும். முடியும். ஊர் பூரா காலரா அல்லது ப்ளேக் பரவியிருக்கிறது; நான் ஒருவன் என்ன செய்ய முடியும் என்று எந்த டாக்டரும் கைவிட்டு விட மாட்டார். முடிந்த சிகிச்சையை அளிப்பார்.

அதுபோல்தான், மாற்ற விரும்புமுன் பிரச்னை பற்றி உங்கள் மனத்தில் தெளிவு வேண்டும். நம் நாட்டில் பிரச்னை அரசியல் அல்ல; சிந்தனைப் பற்றாக்குறையும் அலட்சியமும்தான் அரசியல் விளைவு. சிந்திக்காதது காரணம். இது உங்கள் மனத்தில் தெளிவாகப் பதிந்த பின்தான் மாற்றத்தை முயற்சி செய்ய வேண்டும். எல்லோரையும் மாற்ற இயலாது. சரித்திரம் சிறுபான்மையினரால் ஏன் சில சமயம் தனிமனிதர்களால் (ஏகநாதர், மார்க்ஸ், காந்தி, மண்டேலா, கிங்) செய்யப்பட்டது. முதலில் உங்கள் கருத்தைப் புரிந்து கொள்ளக்கூடியவர்களிடம் சொல்ல வேண்டும். கருத்து சரியானதாக, ஆழமானதாக இருந்தால் தானாகப் பரவும். இன்று பலர் விடைதெரியாமல் தவிக்கிறார்கள். அவர்கள் கேள்விக்குப் பதில் உண்டா பாருங்கள், இது அரசியல் போராட்டமல்ல, தத்துவப் போராட்டம்.

முதலில் உங்கள் மனத்தில் தெளிவும் கட்டாயமும் சுயநலமற்ற யோக்கியமும் வேண்டும். பின் நீங்கள் செய்ய வேண்டியது என்ன? பேசுங்கள், எல்லோருக்கும் சொல்லுங்கள். பொது மேடையிலோ ரேடியோ டீவியிலோ பேசக் காத்திருக்க வேண்டாம். நண்பர்களிடம், சிறு சிறு குழுக்களில், பெட்டிக் கடைகளில், தெருமுனைகளில் விளக்கிப் பேசுங்கள். எப்போது எந்த மனம் பற்றிக் கொண்டு எப்படிப் பரவும் என்று சொல்ல முடியாது. பிள்ளையார் பால் குடித்த மூடக் கருத்து எப்படிப் பரவியது? அதுபோல் நல்ல கருத்தும் பரவ வாய்ப்புள்ளது. மக்கள் நலனைப் பாதிக்கும் விஷயங்களில் உங்கள் கருத்தைச் சொல்லத் தயங்காதீர்கள்.

யோசித்துப் பார்த்தால் அதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. பஸ் நிலையம், முடிவெட்டகம், கெரோசின் க்யூ, சினிமா க்யூ, சாலை அடைப்பில் மந்திரி அல்லது எழுச்சிப் பேரணிகள் கடக்கக் காத்திருக்கும் நேரம். யாரேனும் எந்தவித சவாலும் இன்றி கேனத்தனமான ஒரு கருத்துச் சொன்னால் சும்மா இராமல், 'எனக்கு உங்கள் கருத்துடன் உடன்பாடில்லை' என்று சொல்லி விட வேண்டும். அதுவே போலிக் கருத்துக்கள் பரவுவதை கணிசமாகக் குறைக்கும். உங்கள் கருத்துக்கள் தாக்கப்படும் போது சும்மா இருக்காதீர்கள்.

பிரசாரம் செய்யாதீர்கள். வீண்வாதம் வேண்டாம். உலகை உங்களால் காப்பாற்ற முடியாது. முக்கியம், தப்பான குழுக்களில் சேர்ந்து விடாதீர்கள். பிரிவினைவாதிகள், மொழி வெறியர்கள், வன்முறைக் கலாசாரிகள் இப்படிச் சேராமல் பாரபட்சமற்ற பொதுநலக் குழுக்களுடன் சேரலாம். அறிவொளி இயக்கம், சமாதான இயக்கம், பகைமைப் போராட்டம் சுற்றுச் சூழல் இயக்கம், அறிவியல் கழகம், சனநாயக அமைப்புகள் இப்படி.

எழுதும் வாய்ப்புள்ளவர்கள் நிச்சயம் எழுத வேண்டும். ஆசிரியருக்குக் கடிதமாகவோ, கட்டுரையாகவோ, துணுக்காகவோ சுவரொட்டியிலோ, சிலேட்டில் எழுதித் தொங்கவிடப்பட்ட ஒற்றை வாக்கியமாகவோ எப்படியும் எழுதுங்கள். இதையெல்லாம் ஒத்திப் போடாமல் செய்ய வேண்டும்.

ஒரு சர்வாதிகாரி வராத வரை இந்த நாட்டைத் திருத்த முடியும். நாம் சும்மா இருந்தால்தான் சர்வாதிகாரி வருவான்.

யார் யாருடன் குலாவப் போகிறார்கள் என்பது இறுதிவரை குழப்பமாக இருந்து, சந்தர்ப்பவாத அரசியல் மேலோங்கி நிற்கும் இந்தத் தேர்தலில் நீங்கள் வோட்டுப் போடாமல் இருப்பது பாவம். போடுங்கள். வேட்பாளரின் அறிவு, படிப்பு, தொகுதியைச் சேர்ந்தவரா, சாதி வோட்டுக்காக விதைக்கப்பட்டவரா, கடந்த காலம் எப்படி? லஞ்சம் வாங்காதவரா, ஒரே மனைவியா, தொகுதிக்கு என்ன செய்வார்? எல்லாம் விசாரித்து கட்சி பேதமின்றி வாக்களியுங்கள். உங்கள் தீர்மானத்தை எல்லோரிடமும் சொல்லுங்கள். அப்படிச் செய்தால் தகுதியுள்ளவர், தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது. இதுதான் மாறுதலின் ஆரம்பம்!

(மீண்டும் அடுத்த வாரம்)



• ஆட்டிஸம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பயிற்சி...



• டாக்டர் ஜெயந்தினி

காரணமே தெரியாமல் ஒரு நோய்!

ராஜ்குமார் தம்பதிக்கு முதல் குழந்தை ரவி பிறந்த போது ஒரே சந்தோஷம். ஆனால் அந்தச் சந்தோஷம் வெகு சில நாட்களே நீடிக்கப் போகிறது என்று அவர்களுக்கு ஆரம்பத்தில் தெரியவே இல்லை.

குழந்தை ரவி, யாரையும் நேரடியாகப் பார்ப்பதைத் தவிர்த்தான்; இலக்கே இல்லாமல் எங்கோ வெறிச்சென்று பார்த்தான்.

அம்மாவிடம்கூடத் துளியும் ஒட்டாமல் இருந்தான். பேச்சு சுத்தமாக இல்லை; அரை வார்த்தை, ஒரு வார்த்தை என்று எப்போதாவது வாயிலிருந்து வந்தால் கூட, அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தான். தன்னைச் சுற்றி ஓர் உலகம் இயங்கிக் கொண்டிருப்பதையே மறந்த நிலையில் இருந்தான். திடீரென்று தட்டாமாலை சுற்றுவான்; சோர்ந்து போய் விழுவான். மனிதர்களைப் பார்ப்பது கூட ஏதோ ஜடங்களைப் பார்ப்பது மாதிரியான பார்வை. திடீர் திடீரென்று வலிப்பும்கூட வந்தது ரவிக்கு. அவன் வயதுடைய குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடாமல், ஒதுங்கி வீட்டுக்குள்ளேயே இருந்தான். மேலே மின்விசிறி சுழல்வதைப் பார்க்க மட்டும் ஆர்வம்!

ராஜ்குமாரின் இளம் மனைவிக்கு இது அதிர்ச்சியாய் இருந்தது; ராஜ்குமாருக்கோ தாங்க முடியாத வேதனை.

ஆரம்பத்தில், பேச்சு வரவில்லையே என்று நினைத்தபோது, 'சில குழந்தைகள் அப்படித்தான்... மெதுவாகத்தான் பேச ஆரம்பிப்பார்கள்' என்று பலரும் சொன்னார்கள்.

ஒரு நாள் ராஜ்குமாரின் அண்ணா, அமெரிக்காவிலிருந்து வந்தார். ரவியிடம் ஆர்வத்துடன் போய்க் கொஞ்சினார். குழந்தை ரவியிடமிருந்து எந்த வித 'ரெஸ்பான்'சும் இருக்கவில்லை.

பிற்பகல் உணவு உண்ணும்போது, ராஜ்குமாரிடம் ரவி பற்றிச் சொன்னார் அவர் அண்ணா.

"இதை ஆட்டிஸம் சின்ட்ரோம் என்பார்கள் அமெரிக்காவில்.

'மென்டலி ரிடார்ட்டட்' எனப்படும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளைவிட இவர்கள் நிலை பரிதாபமானது. காரணம், இவர்களுக்கு பேச்சு சுத்தமாக வருவதே இல்லை. பிறர் பேசுவதும் இவர்களுக்குக் கேட்பதில்லை. சொந்தத் தாயாரிடம்கூட இவர்களால் பாசம் காண்பிக்க முடிவதில்லை. ஏனென்றால் இவர்கள் யாரையும் ஏறிட்டுப் பார்ப்பதே கிடையாது. நேராகக் கண்ணோடு கண்பார்க்கும் சுபாவமே இவர்களுக்குக் கிடையாது. மனிதர்களைவிட, ஆசையாய் பொருட்கள்' ஈ மீதுதான் இவர்கள் பார்வை அதிகமாகப் படுகிறது. அதனாலேயே, இவர்கள் உலகம் தனியானது. செய்ததையே திரும்பத்திரும்ப ஒரே மாதிரி செய்து கொண்டே இருப்பார்கள்.

"ஆனால், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளிடம் மேற்சொன்ன பாதிப்புக்கள் இல்லை. அவர்களிடம் பேச முடிகிறது. அவர்களாலும் பிறரிடம் பேச முடிகிறது. நம்மை நேரிட்டுப் பார்க்கிறார்கள். செய்ததையே திரும்பத்திரும்பச் செய்யும் மெக்கானிகல் சுபாவம் இல்லை.

"எனவேதான், அமெரிக்காவில் இவர்களுக்கு என்று ஒரு சங்கம் கூட இருக்கிறது. இவர்களுக்குப் படிக்கச் சொல்லிக் கொடுக்கவும், பழகச் சொல்லிக் கொடுக்கவும் தனியே பயிற்சி பெற்றவர்கள் தேவை. பெற்றோருக்குப் பொறுமை வேண்டும்..."

பெங்களூரில், ஆட்டிஸம் பாதிப்பு உள்ள குழந்தைகளின் மையம் ஒன்றில் போய்ப் பார்த்தபோது, ரவியைப் போலவே சுமார் பதினைந்து குழந்தைகள் இருந்தார்கள்.

மையத்தின் செயலர் விஜயகுமாரிடம் இப்படி ஒரு பயிற்சிக்கூடம் அமைக்க யார் காரணம் என்று கேட்டபோது, அவரது பதிலே நம்மைத் தாக்கியது : "என் மகன்!"

"இந்தக் குறைபாடு எதனால் வருகிறது என்பதை இதுவரை யாரும் கண்டுபிடிக்கவில்லை. பிரசவத்தின்போது எதிர்பாராமல் ஏற்படும் சிக்கல்கள், அல்லது கர்ப்பகாலத்தில் உட்கொள்ளும் சில ஹார்மோன் மருந்துகள் என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், விஞ்ஞானரீதியான காரணங்கள் ஏதும் இன்னும் அறியப்படவில்லை!" என்கிறார் விஜயகுமார்.

"நான் அறிந்தவரை பத்தாயிரம் குழந்தைகளில் மூன்று அல்லது நாலு குழந்தைகளுக்கு இந்த ஆட்டிஸம் குறைபாடு இருக்கிறது. இப்போதுதான் இந்தப் பயிற்சி மையத்தைத் தொடங்கி இருக்கிறோம். ஸ்பாஸ்டிக் சொசைடியின் இயக்குநர் ருக்மணி கிருஷ்ணசாமி, டெவலப்மென்டல் நியூரோ மருத்துவர் மகாதேவையா, டாக்டர் ஷோபா ஸ்ரீநாத், டாக்டர் ஸ்ரீகலாபரத், டாக்டர் நளினி மேனன் இவர்கள் அளிக்கும் உதவியும், ஆலோசனைகளும்தான் இந்த மையத்துக்குப் பெரிய பலம். இந்தக் குறைபாட்டைப் பற்றிய விழிப்புணர்வு நம் நாட்டில் குறைவாக இருக்கிறது. இம்மாதிரியான குழந்தைகளின் பெற்றோர், இந்தக் குறைபாட்டைப் பற்றி அறியாமலே இருக்கவும் கூடும். இப்போதைக்கு இந்த மையத்துக்கு நிதி உதவியும் தேவைப்படுகிறது!" என்றார் விஜயகுமார்.

ஆட்டிஸம் நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் பற்றி முழுதுமாக ஆராய்ச்சி செய்து தீஸிஸ் தயாரித்து வருகிறார் சென்னையில் உள்ள டாக்டர் ஜெயந்தினி. கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஆட்டிஸம் தாக்கிய சுமார் முப்பது குழந்தைகளைத் தாம் பார்த்து விட்டதாக அவர் சொன்னபோது சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

"இந்தக் குறைபாடு பற்றிய தகவல்கள் 1958 வாக்கிலேயே அறியப்பட்டாலும், 1970ல் தான் இந்தியாவில் தெரிய வந்தது. அமெரிக்காவில் சான்டிகோவில் உள்ள மையத்தில், சுமார் 20,000 அமெரிக்கக் குழந்தைகளைப் பற்றிய விவரங்கள் பதிவு செய்திருக்கிறார்கள்" என்றார் டாக்டர் ஜெயந்தினி.

"இந்தக் குறைபாடு மூன்று வயதுக்கு முன்னாலேயே தோன்றி விடுகிறது. அர்த்தம் ஏதும் இல்லாமலே, ஏதாவது ஒரு சொல்லையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கும் குழந்தை. தனக்குள்ளேயே

* ஆட்டிஸம் பாதிக்கப்பட்ட குழந்தைகள்...



ஒடுங்கிப் போன மாதிரி இருக்கும். வெளியுலகப் பாதிப்பு கிஞ்சித்தும் இருக்காது. அதனால் இவர்களுக்குக் கண் பார்வை இல்லை; காது கேட்கவில்லை என்று தவறாகப் பெற்றோர்கள் கணித்து விடக் கூடும். தனியே இருக்கவே இவர்கள் விரும்புவார்கள். சில குழந்தைகளுக்கு அசாத்திய நினைவாற்றல் இருக்கக் கூடும். சில விஷயங்களினால் தீவிரமாக பாதிக்கப்படுவார்கள்; வேறு சில விஷயங்களினால் அவர்களுக்குத் துளியும் பாதிப்பே இருக்காது!"

"வெளிநாட்டில்– குறிப்பாக அமெரிக்காவில் என்ன மாதிரி சிகிச்சை கொடுக்கிறார்கள்?"



"நீ பெரியவனானதும் நல்லவர்களுக்குத் தான் வோட்டுப் போடணும்."

"அப்ப எனக்கு வோட்டுப் போட வாய்ப்பே கிடைக்காதுன்னு சொல்லுங்க!"

— பா. ஜெயக்குமார்.

"இதற்கு என்ன காரணம் என்று அறியப்படாததால் சிகிச்சை எப்படி இருக்க வேண்டும் என்பதே பிடிபடாமல் இருக்கிறது. பாதிப்பு அதிகமாக இருக்கும் சமயங்களில் அமைதிப் படுத்த ட்ராங்க்விலைசர் மாத்திரைகள் கொடுக்கிறார்கள். மெகா வைட்டமின் தெரபி என்று - சூப்பர் நியோ தெரா, டி.எம்.ஜி. போன்ற போஷாக்குச் சக்தி நிறைந்த மருந்துகளை கலிபோர்னியாவில் கொடுத்து வருகிறார்கள். இவற்றுக்குப் பக்க விளைவுகள் ஏதும் இல்லை. ஆனால் முழுவதும் குணப்படுத்த இயலவில்லை. ஆட்டிஸம் பாதித்த குழந்தைகளை விரைவில் அடையாளம் கண்டு, பிரச்னையைப் பொறுமையுடன் புரிந்து கொண்டு, மருத்துவர்கள் மற்றும் மனவியல் நிபுணர்கள் உதவியுடன் சிறப்புப் பயிற்சி அளிக்கலாம். குழந்தைகள் அடிப்படைத் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ள பயிற்றுவிக்கலாம். இதற்கு மேலாக அதிகம் செய்ய முடியாது!" என்றார் டாக்டர் ஜெயந்தினி.

சென்னையில் 'மதுரம் நாராயணன் டிரஸ்ட் ஃபார் எக்ஸப்ஷனல் சில்ட்ரன்' இந்தப் பணியில் மிகச் சிறந்த சேவை செய்து வருகிறதாம். பேராசிரியர் ஜெயசந்திரன் ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்காக 'விஜய் ஹ்யூமன் சர்வீசஸ்' என்ற இரண்டு பயிற்சி மையங்களை ராயப்பேட்டை, சேத்துப்பட்டு ஆகிய இடங்களில் நடத்தி வருகிறாராம்.

ஆட்டிஸம் பாதிப்பு உள்ள பெரியவர்களுக்கான நிலையம் ஒன்று சென்னையை அடுத்த முட்டுக்காட்டில் இயங்கி வருவதாகவும் தெரிவித்தார் டாக்டர் ஜெயந்தினி. இங்கு எளிய வேலைகளுக்கான பயிற்சி அளிக்கப்படுகிறதாம்.


- சாருகேசி

மே கோகுலம் வந்தாச்சு
முதலில் வாங்கிடப் பறந்தாச்சு!

கோகுலம்

மே இதழில்....

- **கோடை விடுமுறைப் போட்டி**
- **சிறுகதைப் போட்டி**
- **நீங்களாக இருந்தால்?** - போட்டி
- **தும்பிலி** - வண்ணப்படக்கதை
- **வலமும் இடமும்** - அறிவியல் சித்திரமடல்



- **ஓடினால் குள்ள வாத்து என்னவாகும்?**

+


வழக்கமான எல்லாம்

96 பக்கங்கள்
ஐந்தே ரூபாய்க்கு!

கோகுலம், ஈக்காடுதாங்கல், சென்னை - 97


®

டிட்டி



பனியன்கள்
ஜட்டிகள்
பேண்டீஸ்
மற்றும்
T. ஷர்ட்ஸ்





குழந்தைகளுக்கென்றே
பிரத்யேகமான ஆடை வகைகள்!

H.O.	:	DITTY HOSIERIES, P.B. NO. 410, TIRUPUR. Ph : 21611
Madras	:	DITTY KNITTERS, STN Road, West Mambalam. Ph : 483 9816
Madurai	:	DITTY HOSIERIES , 157 South Masi St., Madurai - 625 001
Bangalore	:	DITTY KNITTERS, Cubbonpet, Bangalore - 2. Ph : 2216208


திருமணம்

"சூட்மார்னிங் மம்" என்றவாறே, மாடியிலிருந்து இறங்கி வந்த என் பெண் ஸ்மிதாவைப் பார்த்தேன். நல்ல உயரம், அழகு, கலர் எல்லாம் அமையப் பெற்றிருந்தாள். சென்ற வருடம் நடந்த தேசிய அளவிலான அழகுப் போட்டியில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். இப்பொழுது மிகப் பிரபலமான ஒரு மாடல். பரபரப்பான வாழ்க்கை.

"மம், நான் கிளப்பிற்கு ஸ்விம்மிங் போய் விட்டு, அப்படியே விஷ்ஷுடன் லஞ்ச் சாப்பிட்டு விட்டு, பூனா போகிறேன். இரவு வர வெகு நேரமாகும்; டாடியிடம் சொல்லி விடு!" என்று சொல்லிவிட்டு, அவளுடைய இருபதாவது பிறந்த நாளுக்கு, நாங்கள் பரிசாகக் கொடுத்திருந்த மாருதி எஸ்டீமில் கிளம்பிச் சென்று விட்டாள்.

விஷ் என்னும் விஸ்வனாதன் பெரிய விளம்பரக் கம்பெனியின் சொந்தக்காரன். தொழில் நிமித்தமாக, இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள்.

அப்பப்பா, நான் வளர்ந்ததற்கும், என் மகள் வளர்வதற்கும், எத்தனை வித்தியாசம். மன்னார்குடியில் கோவில் அர்ச்சகர் அப்பா. நாங்கள் நான்கு சகோதரிகள். மூத்தவளான கங்காவை, சொந்தத்தில் மாமாவிற்குக் கல்யாணம் செய்து கொடுத்ததில், சிரமமில்லாமல் சுலபமாகப் போய் விட்டது. எனக்காக வரன் தேடிக் கொண்டேயிருந்தார் அப்பா. இரண்டாமவளான யமுனாவான நான், பார்ப்பதற்கு மிகவும் நன்றாகவே இருப்பேன். என்னைப் பெண் பார்க்க வருபவர்களுக்கு, என்னைப் பிடித்திருந்தாலும், அவர்கள் கேட்கும் அளவுக்குத் தன்னால் செய்ய முடியாது என்று என் அப்பா சொல்வது பிடிக்காததால், என் கல்யாணம் தள்ளிப் போய்க் கொண்டேயிருந்தது. நானும், பக்கத்து வீட்டில் டீ.வி. பார்த்துக் கொண்டும், புத்தகங்கள் படித்துக் கொண்டும், மனத்தில் ஆயிரமாயிரம் கற்பனைகளை வளர்த்துக் கொண்டு,



வஸந்தா கிருஷ்ணன்



வரப்போகும் ராஜகுமாரனுக்காக காத்துக் கொண்டிருந்தேன். எனக்குப் பின்னால், நர்மதாவும் காவேரியும் கிழூவிலிருந்தார்கள்.

கோவிலுக்குப் பெரிய அபிஷேகம் செய்ய வருபவர்களை, வீட்டிற்கு காப்பி சாப்பிட அழைத்து வருவார் அப்பா. அவர்கள் போகும் போது, நைவேத்ய பிரஸாதங்களை, பாக் செய்து கொடுப்போம். அம்மாவிற்கு ரொம்பவும் உடம்பு முடியாததால், ஸ்கூல் பைனல் முடித்ததிலிருந்து இவையெல்லாம் என் வேலைகளாயிற்று.

அப்படி ஒருநாள், காரில் வந்தவர்தான் ராஜாராமன். பம்பாயில் மிகப் பெரிய தொழிலதிபர். வயது நாற்பத்தைந்து இருக்கும். எங்கள் ஊர்தான் அவருக்கும் பூர்வீகமாம்.

எல்லோரையும் வழக்கமாக உபசரிப்பது போல்தான், அவருக்கும் காப்பி கொண்டு வந்து கொடுத்தேன். அப்பொழுதுதான், எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வரும் கல்யாணத் தரகரும் வந்திருந்ததைக் கவனித்தேன்.

அவர்களை வாசல் வரை சென்று அனுப்பி விட்டுத் திரும்பி வந்த அப்பா, தயக்கத்துடன் என்னிடம், ''யமுனா,



''இப்ப வர்ற படங்களெல்லாம் மனைவியோடு சேர்ந்து பார்க்கிற மாதிரி கூட இல்லை!''

''டைப்பிஸ்டுடன் ஏன் சினிமாவுக்குப் போனீங்கன்னு கேட்டதுக்கு, நல்லாயிருக்கு... நீங்க சொல்ற சமாதானம்!''

-ஞா. ஞானமுத்து

●●●●●●●●●●●●●●●●●●●●●●

இப்பொழுது வந்திருந்தாரே, அவர் மிகவும் பணக்காரராம், பெரிய தொழிற்சாலை இருக்கிறதாம். அவருடைய முதல் மனைவியும், ரொம்பவும் பணக்காரியாம். ஆனால் ஏனோ இருவருக்கும் ஒத்துக் கொள்ளாததால் டைவர்ஸ் ஆகிவிட்டதாம். குழந்தைகள் ஒன்றும் இல்லையாம். ஆகையால், சாதாரணமாக, அந்தஸ்தில் குறைவான, ஒரு ஏழைமையான குடும்பப் பெண்ணாகப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாராம். ரொம்பப் படிப்பெல்லாம் தேவையில்லையாம். தன்னையும் வீட்டையும் கவனித்துக் கொண்டால் போதும் என்று நினைக்கிறாராம். தரகர் மூலம் உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டு, இன்று இங்கு உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறார். அவருக்குச் சம்மதமாம். அவர் சம்மதம் தெரிந்த பின்பே உன்னுடன் பேச நினைத்திருந்தேன்!'' என்றார் அப்பா.

ஓகோ, இவர் வந்ததெல்லாம் முன்னேற்பாட்டுடன்தான் போலிருக்கிறது என்று தெரிந்தவுடன் ஆத்திரமாக வந்தது. எனக்குக் கோபம், அழுகை, ஆத்திரம், சுயபச்சாதாபம் என்று எல்லா உணர்ச்சிகளும் மாறி மாறி வந்தன. ஏழையாகப் பிறந்து விட்டால் அவர்களுக்கு மனதே கிடையாதா என்ன?

"ஏன் அப்பா, என்னை விட இருபத்தைந்து வயது பெரியவரைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்ல, உங்களுக்கு எப்படி மனது வந்தது?'' என்று கதறினேன். என் கற்பனை ராஜகுமாரன் மெல்ல மெல்ல மறைந்து போனான்.

அப்பாவோ, "நான் இருக்கும் நிலையில் உங்கள் மூவரையும் கரை சேர்ப்பேன் என்ற நம்பிக்கை போய் விட்டது. உன்னைக் கல்யாணம் செய்து கொண்டால், உன் இரு தங்கைகளையும் அவரே நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுப்பதாகச் சொன்னார். அப்புறம் உன் இஷ்டம். உன்னை நான் வற்புறுத்தவில்லை. பிறகு அம்பாள் விட்ட வழி!'' என்றார்.

அம்மாவும், ''உனக்கு நாங்கள் கெடுதல் செய்வோமா என்ன? வயதில் என்ன வந்தது? நல்ல வாழ்க்கைதான் முக்கியம். அவரைப் பார்த்தாலும் வயதானவராகத் தோன்றவில்லை'' என்று போதனை செய்தாள், தன்னால் வேறு ஒன்றும் செய்ய இயலாததால்.

இரண்டு, மூன்று தினங்கள் தீர்க்கமாக யோசனை செய்ததில், நம் ஒருத்தியால், இவ்வளவு பேருக்கு நன்மை நடக்கும் என்றால், அது போதும் என்ற தியாக மனப்பான்மையுடன் சம்மதித்தேன்.

ஒரு நல்ல நாளில் மிஸஸ். ராஜாராமன் ஆனேன். அதன்பின் என்னை இவர் அருமையாக, அன்பாக நடத்தியதும், ஸ்மிதா பிறந்ததும், என் தங்கைகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் ஆனதும் பழங்கதைகள்.

நான் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று கற்பனையில் நினைத்துக் கொண்டிருந்தேனோ, அவ்வளவு அருமையாக ஸ்மிதாவை வளர்த்தேன். இவரும் ஸ்மிதாவை ரொம்பவும் நேசித்தார். இவருக்குத் தொழிற்சாலையை கவனிக்கவே நேரம் சரியாக இருந்ததால், ஸ்மிதாவின் முழுப் பொறுப்பும் என்னுடையது ஆனது. நான் ஒருபோதும் அவளுடைய சுதந்தரத்தில் குறுக்கிட்டது இல்லை.

ஸ்மிதாவிற்கு படிப்பில் அதிக நாட்டமில்லாததாலும், சிறு வயதிலிருந்தே உடைகள், அலங்காரங்களில், உள்ள விருப்பத்தாலும், படிப்பை நிறுத்திவிட்டு, அவள் இஷ்டப்படி மாடல் ஆகிவிட்டாள். இன்று அவள் மிகப் பிரபலமான மாடல்.

இரவு வெகு நேரம் சென்று வந்த ஸ்மிதா, எங்கள் அறைக்கு வந்து, ''குட்நைட் மம், குட்நைட் டாட்!'' என்று சொல்லிவிட்டு, ''காலையில் ஒரு முக்கியமான சமாசாரம் சொல்லப் போகிறேன்'' என்று கூறி மாடியிலுள்ள தன் அறைக்குச் சென்று விட்டாள்.

இரவு முழுவதும் என்னவோ, ஏதோ என்று மண்டையைக் குடைந்து கொண்டிருந்தேன். அவர் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்.

காலையில் காப்பி குடித்துக் கொண்டே ஸ்மிதா, "மம்மீ... நானும் விஷ்ஷும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம்!" என்றாள்.

நான் திடுக்கிட்டவாறு, "ஏன் ஸ்மிதா, அவர் உன்னைவிட இருபத்தைந்து வயது பெரியவனாயிற்றே?" என்றேன்.

"ஸோ, வாட்? மம், வயதில் என்ன இருக்கிறது. நல்ல வாழ்க்கைதான் முக்கியம். விஷ் என்னை விரும்புகிறான், நான் அவனை விரும்புகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே மாடி ஏறிப் போய்க் கொண்டிருந்த என் மகளைப் பார்த்து வாயடைத்து நின்றேன்.

உலகக் கோப்பையில் விரிசல்?



அடுத்த உலகக் கோப்பைப் பந்தயம் தொடர்பாக இப்போதே சில பிரச்னைகள் தொடங்கி விட்டன!

ஏற்கெனவே எடுத்த முடிவின்படி 1999, ஏழாவது உலகக் கோப்பைப் பந்தயங்கள் இங்கிலாந்தில் நடைபெற வேண்டும். "அப்படி நடைபெற வேண்டுமானால் இங்கிலாந்து சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே ஆகவேண்டும்" என்று சமீபத்தில் கூறியிருக்கிறார் அரீப் அலி கான் அபஸி. பாகிஸ்தான் கிரிக்கெட் குழுவின் முக்கியச் செயல் அதிகாரியான இவர், மிகுந்த செல்வாக்கு உள்ளவர்.



• அரீப் அபஸி

என்ன நிபந்தனைகளுக்கு இங்கிலாந்து உட்பட வேண்டுமாம்? எல்லாம் பண விஷயம் தான். சமீபத்திய உலகக் கோப்பைப் பந்தயங்களில் கலந்து கொண்ட எட்டு முக்கிய நாடுகளும் தலா இரண்டரை லட்சம் டாலர்களும், (கென்யா, யு.ஏ.ஈ., ஹாலந்து போன்ற) அஸோஸியேட் உறுப்பினர்கள் ஒரு லட்சம் டாலர்களுமாக ஐ.சி.சி.க்கு (உலகக் கோப்பைப் பந்தயங்களை நடத்தி வரும் சர்வதேச கிரிக்கெட் கூட்டமைப்புக்கு) அளித்துள்ளன. தவிர, இந்தியா – பாகிஸ்தான்-ஸ்ரீலங்கா ஆகிய நாடுகள் தங்கள் நாடுகளில் இந்தப் பந்தயங்களை நடத்துவதற்காக ஐ.சி.சி.க்கு மொத்தம் ஐம்பது லட்சம் டாலர்களை அளித்திருக்கின்றன.

இப்படி பிரம்மாண்டமான தொகைகளையெல்லாம் இதுவரை ஐ.சி.சி. வசூலித்ததேயில்லை. சுவை கண்ட ஐ.சி.சி., இனி சும்மாயிருக்கப் போவதில்லை. இதைவிட அதிகத் தொகையைத்தான் இனி வற்புறுத்தும். இந்த வற்புறுத்தலுக்கு இங்கிலாந்து உடன்படவில்லையென்றால்?... "அப்படி ஒரு நிலை வந்தால் ஐ.சி.சி.யுடன் பண விவகாரத்தில் ஒத்துப் போகும் நாட்டுக்குத்தான் அடுத்த உலகக் கோப்பைப் பந்தயத்தை நடத்தும் உரிமை உண்டு என்று வாதாடுவேன்" என்கிறார் அபஸி.

பெயரைக் கொண்டு, ஐ.சி.சி. என்பது ஓர் அஸோஸியேஷன் என்றே பலரும் எண்ணியிருந்தாலும் அது உண்மையில் ஒரு கம்பெனி! கிரிக்கெட்டில் பிரபலமடைந்துள்ள நாடுகள் அதன் முக்கியப் பங்குதாரர்கள். கிரிக்கெட்டில் வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகள், சிறிய அளவில் இதன் பங்குகளை வாங்கியிருக்கின்றன. பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டும் இதில் ஒரு முக்கியப் பங்குதாரர் என்பதால் அதன் குரலுக்கு நிச்சயம் மதிப்பு இருக்கும். இதை மீறி "இங்கிலாந்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது முடிவான விஷயம். பண விஷயத்துக்காக அதை மாற்ற முடியாது" என்று ஐ.சி.சி. முடிவெடுத்தால் அதற்கெதிராக அபஸி கொடி பிடிப்பார்!

போதாக்குறைக்கு அப்படி ஒரு முடிவை எடுக்கும் தார்மிக உரிமையை இழந்திருக்கிறது ஐ.சி.சி. அது முதலில் ஒப்பந்தம் போட்டுக் கொண்டது இங்கிலாந்து கிரிக்கெட் போர்டுடன். ஆனால் சமீபத்தில் பந்தயங்களை நடத்தும் உரிமை இங்கிலாந்தின் 'டெஸ்ட் அண்ட் கவுண்ட்டி கிரிக்கெட் போர்டு' என்ற அமைப்புக்கு அளிக்கப்பட்டிருக்கிறது! அதாவது, தான் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தைத் தாமே முதன் முறையாக மீறியதன் மூலம் ஐ.சி.சி. பல பிரச்னைகளுக்குப் பிள்ளையார் சுழி போட்டிருக்கிறது.

இந்த நிலையில் எட்டாவது உலகக் கோப்பைப் பந்தயங்களை நடத்தவுள்ள தென் ஆப்பிரிக்காவுக்குக் கவலை ஏற்பட்டிருக்கிறது. ஐ.சி.சி. எக்காரணம் கொண்டும் தங்களுக்கு அளித்துள்ள வாக்குறுதியை மீறக்கூடாது என்று வற்புறுத்தியிருக்கிறது.

உலகக் கோப்பை தொடர்பாக இப்படிப்பட்ட பிரச்னைகளெல்லாம் வருவதற்குக் காரணம், ஐ.சி.சி.யின் பணவெறி மட்டுமல்ல, அதற்கு அஸ்திவாரம் அமைத்துக் கொடுக்கும் நமது கிரிக்கெட் வெறியும்தான்!

- ஜி.எஸ்.எஸ்.

சென்ற வாரம்....

தீவிரமும் உத்வேகமும் இலட்சியநோக்கும் கொண்ட இளைஞன் பால்ச்சாமி. கம்யூனிஸக் கொள்கைப் பிடிப்புள்ளவன். கட்சி நடவடிக்கைகளில் தீவிரமானவன். மாநில அளவில் நடந்த ஒரு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறை சென்று வருகிறான். அவனது தியாகத்தைப் பாராட்டி, ஒரு தொழிற்சங்கம் அவனுக்குப் பாராட்டு விழா நடத்துகிறது....

ஆகாயச் சிறகுகள்

2

வாலிபர் சங்கத்தில் சேர்வதற்கு முன்பு, பால்ச்சாமி தீவிரமான கமல் ரசிகன். ஒரு டூரிங் தியேட்டரில் அவன் முதன் முதலாகப் பார்த்த கமல் படம், 'சலங்கை ஒலி'. திருவேங்கடத்தில் ஒற்றையாளாக நின்றான். சைக்கிளும் இல்லை. ஊர் போக வழியுமில்லை. ஊர் - மூன்று மைல் எப்படிப் போக? 'சினிமா தியேட்டருக்கு நம்ம ஊர் ஆட்கள் யாரும் வந்திருக்கக்கூடும்' என்ற நினைப்பில் வந்தான். ஆள் துணைக்காகத்தான் தியேட்டருக்கு வந்தான்.

வந்து பார்த்தால் தியேட்டர் காற்றாடியது. கூட்டமேயில்லை. சும்மா பத்துப் பதினைந்து பேர்கள்தான். அழுக்கான குண்டு பல்ப் வெளிச்சத்தில் உலவினர். இத்தனைக்கும் படம் நேற்றுதான் போட்டிருக்கிறார்கள்.

ரெண்டாம் நாளிலேயே, கூட்டம் இல்லாமற் போய் விட்டது. 'அப்படீன்னா... படம் படு குப்பையாயிருக்குமோ...?'

இருந்த ஆட்களில் யாரும் இவன் ஊரைச் சேர்ந்தவர்களில்லை. 'அடச்சே' என்றாகி விட்டது.

கற்றையாக வந்து தாக்கிய ஏமாற்றம். அத்துடன் ஒரு குப்பைப் படத்துக்கு வந்து சிக்கிக் கொண்டோமே என்கிற எரிச்சல் வேறு.

முள் மேலே உட்கார்ந்திருப்பது போல, கூட்டி வைத்திருந்த மணலில் உட்கார்ந்திருந்தான். குண்டு பல்பும் கண்ணை மூட... அறுந்து அறுந்து ஓடிய நியூஸ் ரீல். மந்திரிகள் வருகைகள். அடிக்கல் நாட்டு விழாக்கள். தையல் மிஷின் வாங்கும் அபலைகள். பட்டா வாங்கும் வேட்டிகள்.

படம் துவங்கியது. எரிச்சல் போன இடம் தெரியவில்லை. 'சலங்கை யொலி'யின் ஆரம்பமே களை கட்டியது. தண்ணியடித்து விட்டு வயோதிக முதுமையோடு தடு



மாறிய கமல். நடன நிகழ்ச்சி பற்றிய பத்திரிகை விமர்சனம். சொன்ன குறை தாளாமல், கொதித்துப் போய் வந்த நாட்டியப் பெண்ணிடம் தொண்டை செருமச் செருமப் பேசிய கமல். சீண்டப்பட்ட ஆவேசத்தால் பாட்டு வரிகளுக்குரிய பாவனைகளை ஆடிக்காட்டிய ஆவேசம். நிஜமான நடனக் கலைஞனின் ஆத்மதுடிப்பாக இருந்த



மேலாண்மை பொன்னுச்சாமி

அந்த நடனத்தின் அசலான உயிர்ச்சுடர்.

படம் முடிந்த போது... இவன் படத்திலிருந்து மீள முடியவில்லை. ஊர் திரும்ப மனமுமில்லை. வழியுமில்லை. 'ரெண்டாவது ஷோ'விற்கும் உள்ளே போனான். மனசுக்குள் கொஞ்சுகிற சலங்கையொலிகள்.

கொட்டும் மழை. வட்டக் கிணற்றின் விளிம்பில் நின்று நடனமாடிய முதிய கமல். போதையின் தள்ளாட்டத்திலும் பாவனையோ - முத்திரையோ பிசகாத நடன நளினம். குறுக்கில் கிடக்கும் கம்பியிலும் நடனம். நடனம் மட்டுமில்லை, நடிப்பும் மனசைப் பின்னியது.

பால்ச்சாமிக்குள் பிரமிப்பு. 'கமல்... சராசரி நடிகனல்ல. அதையும் தாண்டியவர்' என்ற பிரமிப்பு.

கமல் ரசிகனாகவே மாறிவிட்டான். 'கமல், கமல் கமல்'தான். மூச்சு முழுக்க கமல்தான். அவனுக்கேயுரிய தீவிரத்தில் - வேகத்தில் - ஆர்வப் பரபரப்பில் கமல் ரசிகனானான்.

ரசனையோடு பார்க்கத் துவங்கிய பிறகுதான்... கமலின் அருமையே தெரிந்தது. நடிப்புக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற சிறப்பையும், நடிப்புக்காக நடிப்பிலிருந்த இமேஜ்களை உடைத்து வந்த துணிச்சலையும் உணர்ந்தான்.

அப்புறமென்ன...

கமல் நின்றால் அழகுதான். நிமிர்ந்தால் வீரம்தான். திரும்பினால் ஸ்டைல்தான். நடந்தால் நடனம்தான். ஒவ்வொரு அணுவிலும் அசைவிலும் மயங்கினான். 'உடல் மண்ணுக்கு, உயிர் கமலுக்கு' என்றாகி விட்டது.

எப்பப் பார்த்தாலும் கமலைப் பற்றித்தான் பேச்சு. டீக்கடைகளில் - மடத்தில் - நண்பர்கள் கூடுமிடமெல்லாம்... கமல் உச்சாடனம்தான். கமலுக்கான வாதாட்டம்தான். பால்ச்சாமி வாதாடினால்... தீப்பொறி பறக்கும்.

தேடாமல் வார்த்தைகளை அள்ளி வீசுவான். வார்த்தைகள் மட்டுமா? புள்ளி விவரமும்தான்.

கமல் நடித்த படம் எத்தனை...? எந்தெந்தப் படம் எந்தெந்த நாளில் வெளியேறிற்று? எந்தெந்த நகரில் என்னென்ன தியேட்டர்? தியேட்டர்களின் அமைப்பு? ஓடிய நாட்கள்? காட்சிகள்? வசூலான தொகை பைசா உட்பட!

இன்னும் ஏராளமான கேள்விகளுக்கு நாக்கு நுனியில் துல்லியமாக விவரங்கள் வைத்திருந்து, வீசியெறிவான். ஊரில் பால்ச்சாமிக்கு ஒரு பட்டமே கிடைத்து விட்டது. 'கமல் கிறுக்கன்'.

அவன் தீவிரத்துக்குக் கிடைத்த கிரீடம்.

ஆனால், பால்ச்சாமிக்கு 'கட்டவுட்'க்கு பூஜை பண்ணுவது... சூடம் கொளுத்துவது... பிற நடிகரின் ரசிகர்களுடன் வெட்டு, குத்து நடத்துவது... மூடத்தனமாய் கிறுக்கு பிடித்துப் போய் கமல் பஜனை செய்வதெல்லாம் உள்ளூரப் பிடிக்காது. மனசுக்குள் வெறுத்தான்.



''நான் ஜோக் எழுத்தாளரா இருக்கிறதுல இப்படியெல்லாம் கூட தொல்லை இருக்கு பாருங்க...''

''என்ன தொல்லை?''

''கீழே விழுந்ததுல தான் கை முறிஞ்சிதுன்னு சொன்னா யாரும் நம்ப மாட்றாங்க; ஜோக் எழுதறதை நிறுத்தி வைக்க யாரோ முறிச்சிட்டதா நினைக்கிறாங்க!''

– சீர்காழி. வி. ரேவதி

அவ்வப்போது, கமல் விடுகிற அறிக்கைகள் – விழாக்களில் ரசிகப் பண்பு குறித்து பேசுவது – 'கண் மூடிய ரசனை கூடாது' என்று கூறுவது – ரசிகர்களின் குடும்பக் கடமையையும், சமுதாயக் கடமையையும் வலியுறுத்துவது... இதெல்லாம், இவனது ஆத்ம பிரதிபலிப்பாகவே இருக்கும். இவன் உள்மனத் துடிப்பாகவே ஒத்துப் போகும்.

அப்படித்தான்...

'கமல் ரசிகர் நற்பணி மன்றம்' சமுதாயக் கடமையாக ரத்ததானம் வழங்கலாம் என்று முடிவு செய்தது. மும்முரமாக அந்தப் பணியில் தீவிரமானான்.

அந்தச் சமயத்தில்தான்... வாலிபர் சங்கச் செயலாளர் ராஜேந்திரன் வந்து, பால்ச்சாமியைப் பார்த்தான்.

ராஜேந்திரனைப் பற்றி பால்ச்சாமிக்கு நன்கு தெரியும். கட்சத்தில் டைரியை இடுக்கிக் கொண்டு திரிவான். டைரியும் வெறும் டைரியாக இருக்காது. கர்ப்பஸ்திரி மாதிரி புடைத்துக் கொண்டு இருக்கும். ஊரில் அகப்பட்ட எல்லா பிரச்னைகள் குறித்தும் விண்ணப்பக் காகிதங்கள்... கார்டுகள்... கணக்கு விவரங்கள்... வாலிபர் சங்கப் பதிவு போன்ற விவரப் பேப்பர்கள் என்று கத்தை கத்தையாக காகிதங்கள், டைரிக்குள் கர்ப்பமாய் இருக்கும்.

ராஜேந்திரன் இளமையான ஆள்தான். அலைச்சலில் – ஓட்டபாட்டத்தில் – சளைக்காத இளமை இருக்கும். ஆனால் இளைஞனுக்குரிய பாமரத்தனம் இருக்காது. துள்ளல் இருக்காது. வெள்ளந்தித்தனம் இருக்காது.

ஒரு முதிய மனிதருக்குரிய கனிந்த பேச்சு. காரியார்த்தமான அணுகுமுறை. ஆழ்ந்தமைந்த நிதானத்துடன் கூடிய பழக்கவழக்கம். சாமர்த்தியமான நடைமுறை.

தீவிரம் இருக்காது. பரபரப்பு இருக்காது. இளமைக்குரிய வெடிப்பும் துடிப்புமான வேகம் இருக்காது.

ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு தலைமை தாங்கிச் செல்வான். தர்ணா போராட்டங்களில் வாழ்த்திப் பேசிக் கொண்டிருப்பான். மத்திய, மாநில அரசுகளை வார்த்தையால் கொத்திக் குதறுவான்.

போலீஸ் ஸ்டேஷனில் அதிகாரிகளுடன் காரசாரமாய் சண்டை போடுவான். தாலுகா பீஸில் பெரும் பெரும் பஞ்சாயத்துகளை நடத்துவான். கலெக்டர் கூட்டுகிற கூட்டங்களில் பிரமுகர்களுக்கு இணையாக உட்கார்ந்திருப்பான்.

ஆங்... அதுதான் விஷயம். இளைஞனுக்குரிய சுறுசுறுப்பில் செயல்பட்டாலும்... செயல்களில் பிரமுகருக்குரிய முதிர்ச்சி இருக்கும். அதுதான் பால்ச்சாமிக்கு நெருடும்.

'இதென்ன... இந்த ஆளு இம்புட்டு வறட்சியாயிருக்காரு...' என்று தோன்றும். நெருங்கவிடாத நெருடல். அந்நியமாக நினைக்க வைக்கிற பிரமுகர்த்தனம்.

இளைஞன் என்றால், வாலிபச் சேட்டைகள் பண்ண வேண்டும். காதல் குறும்புகளில் காலை நுழைக்க வேண்டும். அர்த்தமற்ற கேலி, கிண்டல்களில் ஈடுபட்டு 'கெக்கே, பிக்கே' என்று சிரிக்க வேண்டும்.

பெரிய மனிதர்கள் சற்றே இளக்காரமான அருவருப்போடு பார்க்கிற மாதிரி... கூச்சநாச்சமற்ற துள்ளலில் திரிய வேண்டும்.

இம்மாதிரியான 'இளமைப் பண்புகள்' எதுவுமில்லாமல், பிரமுகர்த்தனமாக அலைகிற ராஜேந்திரனைத்தான்... 'வறட்சியான ஆள்' என்று மதிப்பிட்டிருந்தான். ஒரு சினிமா கிடையாது. கமல் – ரஜினி தெரியாது. கலை புரியாது. கலை இலக்கிய உணர்ச்சியே புரியாது. 'இவரெல்லாம்... மனித ஜென்மமோ' என்றே

பெஸ்ட் பெனிபிட் பண்ட் லிமிடெட்

UNSHAKABLE FAITH

(மத்திய சர்க்காரால் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

தலைமை காரியாலயம் : 3-வது மாடி, சாந்தி காம்ப்ளெக்ஸ், 26, ரங்கநாதன் தெரு,
(விடுமுறை இல்லை) தி.நகர், சென்னை - 17. Ph: 4348560/4347025

நங்கநல்லூர் கிளை : 13, கல்லூரி சாலை, சென்னை - 600 114.
(ஞாயிறு வேலை நாள்) BM: P. தியாகராஜன், மாஜி கிரைண்ட்லேஸ் பேங்க்.

குரோம்பேட்டை கிளை : 5, 2வது பிரதான சாலை, நியூ காலனி, சென்னை - 600 044.
(ஞாயிறு வேலை நாள்) BM: S. இராஜகோபால், M.Sc., CAIIB, மாஜி இந்தியன் பேங்க்.

தாம்பரம் சானடோரியம் கிளை : 7, ஸ்டேஷன் ரோடு, சென்னை - 600 047.
(ஞாயிறு வேலை நாள்) BM: R. V. இராமமூர்த்தி, மாஜி கிரைண்ட்லேஸ் பேங்க்.

1. வாடிக்கையாளர் வசதி திட்டம்: (TM)

30 நாட்கள் - 18% 45 நாட்கள் - 19% 60 நாட்கள் 20% 90 நாட்கள் 21% வேண்டும்போது பணம் எடுத்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் புதுப்பிக்க வரவேண்டிய அவசியமில்லை.

2. பென்ஷனர்/பொதுஜன பாதுகாப்புத் திட்டம்: (TM)

1 வருடம் - 22%; 2 வருடம் - 23%; 3 வருடம் - 24%

3. அதிகபட்ச வருவாய் திட்டம்/சுமங்கலி கல்யாணத் திட்டம்: (TM)

டெபாசிட் தொகை	முடிவில் கிடைக்கும் தொகை				
	12 மாதம்	24 மாதம்	36 மாதம்	40 மாதம்	60 மாதம்
ரூ. 1,000	ரூ. 1,240	ரூ. 1,533	ரூ. 1,880	ரூ. 2,000	ரூ. 3,000
ரூ. 5,000	ரூ. 6,200	ரூ. 7,665	ரூ. 9,400	ரூ. 10,000	ரூ. 15,000

4. குழந்தைகள் எதிர்கால பாதுகாப்பு திட்டம்/பெஸ்ட் பாண்ட் ஸ்கீம்: (TM)

ரூ. 1,000 பத்து வருடங்களில் ரூ. 10,740 ஆகும். 15 வருடங்களில் ரூ. 35,250 ஆகும்.

5. முன் கூட்டிய வருவாய் திட்டம்: (TM)

டெபாசிட் காலத்திற்கான முழு வட்டியும், டெபாசிட் செய்யும் தேதியன்றே தரப்படும். 1 வருடம் 18%.

6. தாத்தாவின் பரிசுத் திட்டம்: (TM)

ரூ. 1,000 15 வருடங்களில் ரூ. 35,250 ஆகும். 10 வருடங்களில் ரூ. 10,740 ஆகும்.

7. சேவிங்ஸ் பேங்க்: 14%; (TM) : டிரேட்மார்க்

உங்கள் வீட்டிற்கும் வந்து சேவை செய்கிறோம்

BBF — THE CUSTOMER CONSCIOUS MAHASHAKTHI (TM)
BBF — THE CUSTOMER FRIENDLY MAHABANK (TM)

CHAIRMAN
Prof. V. VIVEKANAND B.Com (Distn),
MBA (Distn), CAIIB (All India First),
EKSAMD (Distn.) (GERMANY) IAS (Topper).

Dr. PARMESWARI, M.B.B.S.
VICE CHAIRMAN


பஸ் சிநேகம்

பஸ்ஸில் நேற்றைக்குத்தான்
பழக்கமாயிற்று
ஒருமுகம்

இன்றைக்குப் புன்னகை
வரும் நாளில்
அதிகரிக்கும் வார்த்தை
அலசல்கள்

இருபதாம் தேதியில்
தயக்கமாய்
கைமாத்து கேட்க
உதவும்

- கனகராஜன்



நினைத்தான்.

அப்படிப்பட்ட ராஜேந்திரன் எதற்காக இவனைத் தேடி வர வேண்டும்? என்ன அவசியம்? அதுவும் 'நடிகனுக்கு ரசிகனாக' இருப்பதையே இழிவாக நினைத்து, ஏளனமாய் கடைக்கண்ணால் பார்க்கிற இவர் எதுக்கு தேடி வரணும்? என்ன காரணம்? 'உடல் மண்ணுக்கு, உயிர் கமலுக்கு என்றால்... பெத்து வளர்த்த தாய் தகப்பனுக்கு இந்த இளைஞர்கள் என்னத்தை மிச்சமாய் வைத்திருந்து தரப் போகிறார்கள்' என்று மேடைகளில் எச்சில் துளி தெறிக்கப் பேசுகிற இவர் எதுக்கு வரணும்? என்னத்துக்காக?

இவனுக்குள் ஏகப்பட்ட குழப்பம். நெருடலான நினைவுகள். ராஜேந்திரன் நெருங்கி வந்து புன்னகை செய்தான்.

"என்னங்க... டீ சாப்புடுவமா?" என்று பால்ச்சாமி உபசரித்தான்.

"ஓ... சாப்புடலாமே..."

டீக்கடை நோக்கி இருவரும் நடந்தனர்.

"என்ன விஷயமா என்னைப் பாக்கணும்?"

"ஒரு பொது ஜோலியாத்தான்."

"ம் அப்படியா...? யேய்.. ரெண்டு டீ போடப்பா. நல்ல ஸ்ட்ராங்காப் போடு... தூள் மாத்தி"

"கமல் நற்பணி மன்றம் சார்பா... ரத்த தானம் வழங்குறதுன்னு முடிவு பண்ணியிருக்கீகளாமே...?"

"ஆமா..."

"என்ன 'டேட்'லே?"

"டேட் இன்னும் முடிவாகலே?"

" 'டைஃபி' சார்பாவும் ரத்ததானம் வழங்குறதுன்னு முடிவு பண்ணியிருக்கோம்...."

" 'டைஃபி'ன்னா...?"

"டெமாக்ரடிக் யூத் பெடரேஷன் ஆஃப் இந்தியா. அதாவது இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்."

"ஓகோ..."

"அதுக்கு நா செயலாளர்."

"தெரியும்."

"இப்ப நா வந்தது எதுக்குன்னா... கமல் மன்றமும் டைஃபியும் இணைஞ்சு... ஒரு மூவ்மெண்டாக நடத்தி ரத்ததானம் தரலாமேன்னு யோசிச்சோம்..."

"மூவ்மெண்ட்னா...?"

"நம்ம மெம்பர்ஸ் மட்டும் குடுக்குறது ஒரு வகை. நோட்டீஸ், வால்போஸ்டர் போட்டு... நம்ம மெம்பர் அல்லாத வாலிபர்களையும், ஜனங்களையும் திரட்டி... நம்ம தலைமையிலே ரத்ததானம் குடுக்க வைக்குறது. அதுதான் மூவ்மெண்ட், இயக்கம்."


"செய்யலாமே... இது நல்ல ஐடியாவா இருக்கே..."

அப்படித்தான்... கூட்டு இயக்கமாக நடத்தி ரத்ததானம் வழங்க முடிவு செய்தனர். 'மளமள'வென்று பணிகள் நடந்தன. 'தேவர் மகன்' மீசையுடன் கூடிய கமல் போட்டோவுடன் வால்போஸ்டர்கள். ரத்ததானம் வழங்க வருமாறு அறைகூவல். கீழே... 'இவண்' 'இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், கமல்ஹாசன் நற்பணி மன்றம்' என்ற இரு அமைப்புகளின் பெயர்கள்.

'ஜே, ஜே' என்று நடந்தது. ரத்ததானம் இவன் வழங்கினான். ரத்தத்தை தானம் செய்த பால்ச்சாமியின் ரத்தத்திற்குள் ராஜேந்திரன் அணுக்களாக பரவிப் படர்ந்தது... தனிக்கதை.

அன்றைய சந்திப்பிலும், நட்பார்ந்த நெருக்கமான மனப்பகிர்விலும் பால்ச்சாமியின் மனசுக்குள், நிறைய மாற்றங்களுக்கான விதைகள் விழுந்தன.

(தொடரும்)





1996 ஏப்ரல் 21
யுவ சித்திரை 9
மலர் : 54
இதழ் : 38

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ரஜினி என்ன செய்ய வேண்டும்...?

கோடை வெப்பத்தைக் காட்டிலும் வேகமாக தேர்தல் ஜுரம் உச்சநிலை நோக்கி விரைகிற இந்தச் சமயத்தில், தலைவர்களின் உளறல்களும் அதே வேகத்தில் உதிர்கின்றன!

மூப்பனார், எம்.பி. பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்கிறார் குமரிஅனந்தன். தமது தவறுகளை நியாயப்படுத்த அவர் இவ்வாறு உளற வேண்டியிருக்கிறது!

எம்.பி. பதவி என்பது மூப்பனாருக்கு குமரிஅனந்தன் போட்ட பிச்சை அல்ல; தமிழக காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின் ஆதரவுதான் மூப்பனாரை அப்பதவியில் அமர்த்தியது. அந்த ஆதரவு இன்றும் நீடிக்கிறது என்பதுடன் தமிழக காங்கிரஸ் தொண்டர்களின் ஆதரவும் மூப்பனாருக்கு இருக்கிறது. இந்நிலையில் ராஜினாமாவுக்கு அவசியம் என்பதே கிடையாது.

தங்கபாலு, தலைவர் குமரியாரைக் காட்டிலும் ஒரு படி மேலே போய் விட்டார்! பிரதமருக்கு எதிராக மூப்பனார் பிரிவினர் சதிசெய்ததாகக் குற்றம்சாட்டியிருக்கிறார். மக்கள் நலனிலோ கட்சி நலனிலோ அக்கறையில்லாத ஒருவரின் மாபெரும் உளறல் இது. தமிழகத்தின் பெரும்பான்மை தொண்டர்களுடைய கருத்தை கட்சித் தலைமையிடமிருந்து மறைத்து, அவரை வழிதப்பிப் போகச் செய்ததை விட பெரிய சதி வேறு என்ன இருக்க முடியும்! அந்த சதிக்கு



தங்கபாலுவே தலைமை ஏற்றார் என்பது நாடறிந்த விஷயம். தங்கபாலுவும் காங்கிரஸ் தலைமையும் இணைந்து, தமிழக காங்கிரசுக்கு மட்டுமின்றி தமிழகத்துக்கே எதிராக மன்னிக்க முடியாத சதி புரிந்திருக்கிறார்கள்.


ஊழலைப் போலவே உளறல்களிலும் ஜெயலலிதாவை மிஞ்ச ஆளில்லை! பிரசார பேச்சுக்களில், தேர்தலை ஆண் Vs பெண் மோதல் என்பதாகவும் அதர்மத்துக்கும் தர்மத்துக் கும் இடையேயான போர் என்பது போலவும் உச்சபட்சமாக உளறி வருகிறார்.

ஊழல்களில் ஊறித் திளைத்த ஒருவரை தர்மத்தின் பிரதிநிதியென நம்பும் அளவுக்குத் தமிழர்கள் ஏமாளிகளல்ல. 'சைத்தான் வேதம் ஓதுகிறது' என்று ஒதுக்கி விடுவார்கள். 'வருமான வரிக் கணக்கு சமர்ப்பிக்கவில்லையே...' என்பது தொடங்கி ப. சிதம்பரம் ஜெயலலிதாவை நோக்கி கேட்டுள்ள ஏழு கேள்விகள், ஏழாயிரம் கேள்விகளாக நீளும் அளவுக்கு ஊழல் ஸ்டாக் 'ஜெ' கணக்கில் இருக்கிறது!

அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணிதான் நிலையான ஆட்சி அளிக்க முடியும் என்பது ஜெயலலிதாவின் வாதம். இந்தக் கூட்டணியினால் ஊழல்தான் நிலைபெறும் என்பதையும் தமிழக மக்கள் அனுபவித்தறிந்திருக்கிறார்கள். எனவே, சற்றே ஆட்டம் கண்டாலும் ஊழலற்றுத் திகழக்கூடிய கூட்டணிக்கே வாக்குகள் போடப்படும்.

மறுமலர்ச்சி தி.மு.க. தலைவர் வை. கோபாலசாமி கூட உளற வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

'ரஜினி எந்த கட்சிக்கும் ஆதரவு தெரிவித்துப் பிரசாரம் செய்யக் கூடாது; அது தர்மம்



அல்ல...' என்று பேசும் கோபால்சாமி, கட்சிக் கட்டுப்பாட்டையும் சட்டத்தையும் மீறி, கள்ளத்தோணி ஏறிச் சென்று, புலிகளுக்குத் தம் ஆதரவை வெளிப்படுத்தியவர்.

பிரிவினைவாதமும் வன்முறையும் சார்ந்த அமைப்புக்கு பகிரங்க ஆதரவு தெரிவிக்கும் ஒரு நபருக்கு, நேர்மையான ஜனநாயக முறையிலான ஆதரவு என்பது அதர்மமாகத் தோன்றுவதில் ஆச்சரியமில்லை.

தி.மு.க. - மூப்பனார் காங்கிரஸ் கூட்டணிக்கு ரஜினிகாந்த் ஆதரவு தெரிவிப்பது தார்மிக ரீதியிலும் ஜனநாயக ரீதியிலும் வரவேற்கப்பட வேண்டிய விஷயம்.

இன்றைய சூழலில், பல தொகுதிகளில் மும்முனை, நான்கு முனைப் போட்டிகளே நடக்கவிருப்பதால் வோட்டுகள் பிரிந்து போய் ஜெயலலிதாவுக்கு ஆதரவாக முடிவுகள் அமைந்து விடக்கூடிய ஆபத்து இருக்கிறது. இதைச் சுட்டிக்காட்டி வோட்டுக் கேட்கும் நிலையில் கருணாநிதியோ மூப்பனாரோ இல்லை. ஆனால் அதையே ரஜினிகாந்த் துணிவுடனும் தார்மிக பலத்துடனும் எடுத்துச் சொல்லலாம்.

'எனக்கு வை.கோ.விடமோ ராமதாஸிடமோ விரோதமில்லை; எனினும் இந்த ஒரு தேர்தலில் ம.தி.மு.க. ஆதரவாளர்களும் சரி, பா.ம.க. ஆதரவாளர்களும் சரி, கட்சி விசுவாசங்களைக் கடந்து தி.மு.க. - மூப்பனார் காங்கிரஸ் கூட்டணியையே ஆதரிக்க வேண்டும்' என்று ரஜினிகாந்த் வெளிப்படையாகப் பிரசாரம் செய்யலாம்.

அவ்வாறு செய்து தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமையும் அவருக்கு இருக்கிறது. இல்லாவிட்டால் அவரே சொன்னது போல் ஜெ. மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட, கடவுளால் கூட தமிழ்நாட்டைக் காப்பாற்ற முடியாது!

ஆடிய ஆட்டமென்ன...! தேடிய செல்வமென்ன...!

ஜெ. அரசு மீது முக்கிய தலைவர்களும் எதிர்க்கட்சியினரும் அவ்வப்போது தந்து கொண்டே இருந்த ஊழல், சுருட்டல், அதிகார துஷ்பிரயோகப் புகார் — குற்றச் சாட்டுக்களை முடிந்தவரை தொகுத்திருக்கிறோம். பல விடுபட்டிருக்கலாம். பொறுத்தருள்க!

- சத்துணவோடு போடப்படும் முட்டை வாங்குவதில், கோடிக்கணக்கில் கமிஷன். பொதுவாகவே முட்டை விலை அவ்வப்போது ஏறும், இறங்கும். இதைக் காரணமாக வைத்து அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டு முட்டை வாங்க ஆர்டர் கொடுக்கப்பட்டது.
- தமிழ்நாடு பாடநூல் கழக நிறுவனம், எந்தவித டெண்டரும் கோராமல் ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துக்குப் பாடப் புத்த கங்கள் அச்சடிக்க லட்சக்கணக்கில் ஆர்டர் கொடுத்தது.
- தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அரசின் வசம் வந்த ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை மீண்டும் தனியார் கைக்கு மாற்றியதில் கைமாறிய பல கோடிகள்.
- அதே போல் அரசுக்குச் சொந்தமான சாராயத் தொழிற்சாலையைத் தனியாருக்குக் கொடுத்ததில் பெறப்பட்ட பல கோடிகள்.
- ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு கோர்ட் தடையுத்தரவு இருந்தும் அனுமதி கொடுத்ததில் அடிக்கப்பட்ட எக்கச்சக்க தொகை.
- கிண்டியில் உள்ள டான்ஸி நிறுவனத் துக்குச் சொந்தமான பத்து கிரவுண்ட் நிலத்தை ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துக்கு (இதில் ஜெயலலிதாவும், உ.பி.ச. சசிகலாவும் பாகஸ் தர்கள்.) தாரைவார்த்ததில் அரசுக்குப் பல கோடி நஷ்டம். ஸ்டாம்பு கட்டணத்திலும் அரசு ஏமாற்றப்பட்டது.
- பாம் ஆயில் இறக்குமதியில் 25 கோடி கமிஷன் கொடுக்கப்பட்டதாக வாழப்பாடி புகார்!
- தமிழ்நாடு அரசுக்கு டெம்போ, டிராக்ஸ் ஜீப் வாங்கியதில் கோடிக்கணக்கில் ஊழல் நடந்ததாகக் குற்றச்சாட்டு.
- எழில்மிகு சென்னை திட்டத்திற்காக உலக வங்கி கொடுத்த பணத்தில், நாற்பது கோடிக்கும் அதிகமாக ஏப்பம் விடப்பட்ட தாக இளைஞர் காங்கிரஸ் தலைவர் செல்ல குமாரின் குற்றச்சாட்டு.
- டாமின் நிறுவனம் ('வருமானவரி ரெய்டு புகழ்' தியானேஸ்வரன் தலைவராக இருந்த நிறுவனம்) தரமான கருங்கற்களை, கழிவுக் கற்கள் என்று சொல்லி விற்றதால் அரசுக்கு நஷ்டம். சசிகலா, தியானேஸ்வரன் கோஷ் டிக்கு ஜாக்பாட்.
- பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடைகள், கூட்டுறவு, கைத்தறி சங்கங்களிடமிருந்து வாங்கப்பட்டு வந்தன. ஆனால் ஜெ. ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த ஆர்டர் தனிநபர் ஒருவருக் குக் கொடுக்கப்பட்டது. இதற்காகக் கொடுக் கப்பட்ட தொகை பல கோடிகள் என்று எதிர்க்கட்சியினர் சொல்கிறார்கள்.
- பொதுவாகவே அ.தி.மு.க. அரசுக்குப் 'பத்து பர்ஸண்ட் கமிஷன் அரசு' என்று பெயர். பொதுப் பணித்துறை முறைப்படி டெண்டர்களை விட்டு வேலை கொடுத்தது கிடையாது. அத்லெடிக் போட்டிக்கு நேரு ஸ்டேடியம், ஸாஃப் விளையாட்டுப் போட்டி களின் போது கட்டப்பட்ட ஸ்டேடியங்கள்

அ.தி.மு.க. ஆட்சியின் ஸ்கோர் போர்ட் :

ஆகியவற்றுக்கு டெண்டர் விடுவதில் அடித்த கமிஷன் பல கோடிகள் என்று எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டினர்.

● வரலாற்றுச் சிறப்புமிக்க நிலக்கரி இறக்குமதி ஊழல் குறிப்பிடத்தக்கது. இதில் நியாயத்தை எடுத்துச் சொன்ன ஐ.ஏ.எஸ். அதிகாரி சுந்தரம் பழிவாங்கப்பட்டார். தரம் தாழ்ந்த நிலக்கரியை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்ய அதிகபட்ச ரேட் சொன்னவருக்கு, ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது! கைமாறிய தொகை முப்பது கோடி என்றன எதிர்க்கட்சிகள். இதில் கிளைமாக்ஸ் என்னவென்றால், இறக்குமதி செய்யப்பட்டது மட்டமான நிலக்கரி என்று சுங்க இலாகாவும் சொன்னது. இதற்காக மத்திய அரசை வற்புறுத்தி அந்த அதிகாரியை மாற்றச் செய்தார்கள். தவிர, அந்த மட்ட நிலக்கரி சில காலம் கழித்து துறைமுகத்திலிருந்தே மாயமாய் மறைந்து விட்டது!

● இந்திரகுமாரியின் இலவச வேஷ்டி - சேலை ஊழல். கூட்டுறவு கைத்தறி நெசவு சங்கங்களில் கட்சிக்காரர்களைப் புகுத்தி, அவர்கள் பெயருக்குத் தமிழ்நாடு ஜவுளிக் கழகத்தால் ஆர்டர் கொடுக்கப்பட்டது.

● இதுவரை எந்த அரசும் சுடுகாட்டில் நடைபெறும் கட்டட வேலைகளில் கமிஷன் அடித்தது கிடையாது. அதிலும் சாதனை படைத்திருக்கிறது அ.தி.மு.க.

● அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வாங்குவதிலும் கமிஷன். தரமற்ற மருந்துகள் சப்ளை செய்யப்பட்டன. சுகாதாரச் செயலாளர் இன்பசாகரன் வீட்டில் வருமான வரி அதிகாரிகள் சோதனை நடத்தியதில், லட்சக்கணக்கில் பணம், நகைகள் கைப்பற்றப்பட்டன. ஆனால் அ.தி.மு.க. அரசு அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீண்டும் பணிக்குத் திரும்பி விட்டார் இன்பசாகரன்!

● ஸ்பிக் நிறுவனத்தில் அரசுக்கு இருந்த பங்குகளை அடிமாட்டு விலைக்கு, தனியாருக்கு விற்றது குறிப்பிடத்தக்கது.

● தொட்டில் குழந்தைகளுக்கு கொலுசு வாங்கிப் போடுவதிலும் கமிஷன்.

● கரும்பு விவசாயிகளிடம் 49 ரூபாய் வாங்கிக் கொண்டு அவர்களுக்குப் பத்து ரூபாய் கூடப் பெறாத காலண்டர் கொடுத்தது. இதில் அடித்த தொகை பல லட்சம்.

● பல கோடி ரூபாய் செலவில் வளர்ப்பு மகனுக்குக் கல்யாணம். அந்தக் கல்யாணத்தில் அரசு இயந்திர துஷ்பிரயோகம்.

● உலகத் தமிழ்மாநாட்டை ஒட்டி நடைபெற்ற பல கட்டடப் பணிகளில் டெண்டர் கொடுத்ததில் பல கோடி கமிஷன்.

இவை தவிர தாக்குதல் முயற்சிகள், சசிகலா குடும்பத்தினரின் பேரிலுள்ள குற்றச்சாட்டுகளையெல்லாம் பட்டியலிட ஒரு சிறப்பிதழே தேவை என்பதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

தொகுப்பு : ப்ரியன்



வீரத்தின் இலக்கணம் கொலைவெறியா?

குமுறல்

●● திருநெல்வேலி, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் 'ஜெ' சர்வீஸ் என்று நடத்தினாலும் அதற்கும் இதர சர்வீஸ்களுக்கும் எந்த வித்தியாசமும் இடையாது. ஆனால் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கேட்டதற்கு நடத்துனர், 'முன்புறம் கண்ணாடியில் 'J' என்று எழுதப்பட்டிருக்கிறதே, அதற்குத்தான் கூடுதல் கட்டணம்!' என்கிறார்.

திருநெல்வேலி, வீ. முத்தையா.

●● தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் பஸ்ஸில் திருப்பதி சென்றோம். ரூ. 260/- டிக்கெட். காலை சிற்றுண்டி, மதியம் சாப்பாடு அதில் அடக்கம் என்றனர். உணவு ஆறிப் போய் வாயில் வைக்க வழங்கவில்லை. இளைப்பாற ஒதுக்கப்பட்ட குடிலில் பாத்ரூம் பூட்டப்பட்டிருந்தது. தண்ணீர் வசதி இல்லை. பஸ்ஸில் இருக்கைகள் சரியில்லை. ஜன்னல்களை மூடவோ திறக்கவோ இயலவில்லை. இப்படி ஒரு யாத்ரா சர்வீஸ் நடத்துவதை விட அரசு சும்மா இருந்தாலே நல்லது.

சென்னை, கமலா ஸ்ரீனிவாசன்.

●● திருச்சி மாவட்டத்துக்கு மூன்று அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால் இம் மாவட்டத்தில் எல்லா சாலைகளும் குண்டும் குழியுமாக உள்ளன. கலெக்டர் கவனிப்பதாகவே தெரியவில்லை. எங்கள் ஊரிலிருந்து மிக அருகில் உள்ள சேலம் மாவட்டத்தில் சாலைகள் அருமை. ஏன் இப்படி? அரசியல்வாதிகளுக்குத்தான் இன்று ஆதாயம். தலைமுறை தலைமுறைக்கு சொத்து சேர்த்து விட்டார்கள்!

வானசிராமணி, என். ராமசாமி.

●● மட்டை பிடித்து மலை போல் சாதனைகள் படைத்த அஸாருத்தீன், தமது மனைவியும் பெற்றோரும் கண்ணீர் வடிக்க, ஒரு நடிகையை விரும்புவது துரதிர்ஷ்டவசமானது. அவருடைய சொந்த வாழ்க்கைப் பிரச்னை தான் என்றாலும், அவரைப் போல் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் ஹீரோவாகக் கருதப்படுகிறவர்கள், வழி காட்டுதல் வேண்டுமே தவிர, நெறிதவறி நடப்பதற்கு முன்னுதாரணமாகலாமா?

எலந்தங்குடி, கே.எம். இக்பரியா.

●● ஒரத்தநாட்டில் ஒரு திருமணத்துக்குப் போயிருந்தேன். சீர்திருத்த முறையில் சொற்பொழிவுகளுடன் நடந்தது. வாழ்த்துரை வழங்கிய தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறை தலைவர் ப. அருளி, "மணமக்கள் பிரபாகரனைப் போன்ற வீரனையும் தனுவைப் போன்ற வீராங்கனையையும் பெற்றெடுக்க வேண்டும்" என்று கூறியதைக் கேட்டு அதிர்ச்சியுற்றேன். கொலை வெறியும் வன்முறையும்தானா வீரத்துக்கு இலக்கணம்? பொறுப்பான பதவிகளில் எப்படிப்பட்டவர்கள் அமர்த்தப்படுகிறார்கள், பாருங்கள்!

கோட்டையூர், கலைவாணர்தாசன்.

●● சென்ட்ரலில் இறங்கி ஆட்டோ பிடித்தேன். எழும்பூர் காவல் நிலையம் அருகே வீடு. ரூ. 9.50 கட்டணம் வரும். ஆட்டோ ஓட்டி 'மீட்டர் போடுகிறேன்' என்றதும், 'அட இப்படியும் நல்ல மனிதர் இருக்கிறாரே' என்று நினைத்தேன். வீடு வந்த போது பார்த்தால் மீட்டர் ரூ. 30/- காட்டியது! பேரம் பேசி ரூ. 15/- கொடுத்து அனுப்பினேன்.

திண்டுக்கல், எ.சி. இராயப்பன்.



சிறைச்சாலை

பிரியதர்ஷனின் 'சிறைச் சாலை', நமது சுதந்தரப் போராட்டக் காலத்தைக் களனாகக் கொண்டது. அந்தமான் சிறையில், தியாகிகள் பட்ட கஷ்டங்களைச் சொல்லுவது. மிகவும் மெனக்கெட்டு, சரித்திரத்தை ஆராய்ந்து, விவரங்களைக் கோத்துக் கொடுத்திருக்கிற முயற்சியை முதலில் பாராட்ட வேண்டும். ஆனால் பிரும்மாண்டம் - கமர்ஷியல் வெற்றி என்கிற இரண்டு பிரதான நோக்கங்கள் மூக்கை நீட்டிக் கொண்டு முன் நிற்பதால், படம் பார்க்கிறவர்களுக்கு உணர்ச்சிபூர்வமாகக் கிடைக்க வேண்டிய அனுபவம் அடிபட்டு, வெறும் த்ரில்லர் பார்க்கிற உணர்வே மிச்சமாகிறது!

முழுப்படமும் ஒரு ஜெயிலில் நடக்கிறது. கொடுமைகளுக்குக் குறைவில்லாத ஜெயில். கைதிகளான தியாகிகள், சிறை அதிகாரிகளின் ஷூக்களுக்கு நாக்கால் பாலீஷ் போடுகிறார்கள். இஸ்திரிப் பெட்டியால் முதுகில் சூடு வாங்குகிறார்கள். உண்ணாவிரதம் இருந்து எதிர்ப்புக் காட்டினால், நரகல் உண்ண வைக்கப்படுகிறார்கள். நிற்க வைத்து சுடப்பட்டு, மலை உச்சியிலிருந்து தூக்கி எறியப்படுகிறார்கள். காட்சிகளின் உக்கிரம் நெஞ்சைத் தாக்குகிறது.

பிரியதர்ஷனின் மிகப் பெரிய ஆயுதம், அவரது ஆஸ்தான நடிகரான மோகன்லால். அந்த அநாயாசம் அவருக்கே உரியது. அதிகம் அலட்டிக் கொள்ளாமல், எந்தச் சந்தர்ப்பத்துக்கும் அவர் முகம் வெளிக்காட்டுகிற பாவங்கள் யாருக்கும் பிடிக்கும். பிரபுவுடன் மோதிக் கொள்கிற காட்சியாகட்டும்; ஊரில் காத்திருக்கும் தபுவை நினைத்து வருந்தும் கனவாகட்டும், சிறை அநீதிகள் பற்றி விசாரிக்க வரும் என்கொயரி கமிஷன் முன் சீறுவதாகட்டும் - ஏ கிளாஸ்!

படத்தில் பிரபு எதற்கு என்று தெரியவில்லை. சில சில்லறை நகைச்சுவைக் காட்சிகளுக்காக வீணாக்கப்பட்டிருப்பது சோகம். பொசுக்கென்று பாதிக்கு மேல் அவர் சுடப்பட்டு செத்துப் போவது அதனினும் சோகம்.

தொழில்நுட்ப விஷயங்களில் (இசை நீங்கலாக) மிக அதிக கவனம் செலுத்தியிருக்கும் இயக்குநர், ஒரு சரித்திர காலப் படத்துக்கான ஆடைத் தேர்வில் கோட்டை விட்டிருக்கிறார். சிறைச்சாலையில் பிரபு - மோகன்லாலின் பேண்ட் - ஷர்ட், அதிநவீனம். அதுவும் இஸ்திரி கலையாமல்! அவ்வண்ணமே அந்தக் கனவுப் பாடல் காஸ்ட்யூம்கள். கனவுதானென்றாலும் ஆடை ஆபரணங்களில் அடுத்த நூற்றாண்டையா காட்ட வேண்டும்?

படத்தில் நிறைய இங்கிலீஷ்காரக் கேரக்டர்கள் இருப்பதால் நிறைய இடங்களில் வசனம் புரிய வேண்டியது கருதி, 'பீகாரில் மழை' என்பது போன்ற டாக்குமெண்ட்ரி குரலில் விவரம் தருகிறார்கள். திரைக்கதையில் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாம்.



'ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்' போல உலகத் தரத்துக்கு வந்திருக்க வேண்டிய படம். கதைப் போக்கில் 'தேசியம்' அடிபட்டு, பிரபு-மோகன்லால் நட்பு, பிரிவு சோகம், அதனால் பழிவாங்கல் என்று சாதாரணமாகி விடுகிறது. உள்ளூர்த் தரத்தைப் பார்க்க, மிக உயர்வாகவே வந்திருப்பதை எண்ணி சந்தோஷப்படலாம்.

Make your Money work for you with Sindhoori Deposit Schemes

Deposit Mobilisation Drive from 15.4.96

HIGHLIGHTS

- Free Master Health check-up at Apollo Hospitals
- Personal Accident coverage for the first named depositor
- Concessional terms on Car financing.
- Postdated interest warrants along with Deposit Receipt.
- Outstation repayments will be made by way of demand draft.
- Outstation cheques accepted at par.
- CARE Rated Company.

SCHEME I FIXED DEPOSITS

Period of deposit	Rate of Int. per annum	
	Monthly	Quarterly
12 months to 60 months	15%	15.19%

SCHEME II CUMULATIVE DEPOSIT

Period of Deposit	Maturity amount on every Rs. 3000/- of deposit	Effective Annual yield
1 Year	3,482	16.08%
2 Years	4,042	17.37%
3 Years	4,692	18.80%
4 Years	5,446	20.38%
5 Years	6,321	22.14%

For full text under Non-Banking Financial Companies & Miscellaneous Non-Banking Companies (Advertisement Rules 1977) refer advertisement released in the Trinity Mirror and Makkal Kural on 18-10-95.

OM SINDHOORI CAPITAL INVESTMENTS LTD.

A Part of the Apollo Hospitals Group

Registered Office : Ali Towers, 22, Greams Road, Madras - 600 006. Ph : 8233702.

Branch Offices : Unit No. 201, 2nd Floor, Commerce House, 9/1, Cunningham Road, Bangalore - 560 052. Ph : 2281529

Cochin - Ph. : 368401, Hyderabad - Ph. 316335

(Applications are also accepted at the offices of the various Managers to the Scheme)

சிறுகதை

யாரு?



"நந்திதா! ஏய் நந்து!"

உலுக்கப்பட்டவளாய் நந்திதா விழித்தாள்.

"ம்... எ...என்ன சுமித்ரா?"

"நல்லாருக்கு நீ கேக்கறது. நானும் அப்பலே பிடிச்சு பார்க்கறேன். கம்ப்யூட்டர்ல கைதான் இருக்கே தவிர, மனசு மட்டும் எங்கேயோ இருக்கற மாதிரி இருக்கு! மாப்பிள்ளைக் கனவா? ஹௌ ஈஸ் மாப்பிளே? அரவிந்த் சாமியா? ஷாருக்கானா?"

"அம்மா, தாயே, போதும்!"

"சொல்லு. மாப்பிள்ளை வீட்டுக் காரங்க என்ன சொன்னாங்க? பிடிச்சிருக்காமா? மாப்பிள்ளை எப்படி இருக்கார்?"

பெண் பார்த்து விட்டுப் போன அரவிந்த் நினைவில் வந்து நின்றான், நந்திதாவுக்கு.

உண்மையிலேயே அரவிந்தசாமி மாதிரி நிறம் இல்லை என்றாலும், ஆறடி தோற்றத்தில் ஒரு அசத்தல் இருந்தது. பிடிக்கவில்லை என்று சொல்ல முடியாது தான்.

ஆனால் இது மட்டுமே ஒருவனுடைய குணங்களை நிர்ணயித்து விடுமா?

"என்னப்பா, நான் கேட்டுட்டே இருக்கேன், பதிலே காணோம்? உனக்குப் பிடிச்சுதா, இல்லையா?"

நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள் சுமித்ரா.

"சுமி! அவங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்காம். மாப்பிள்ளை பேர் கூட அரவிந்த் தான். ஆள் பந்தாவாத்தான் இருக்காரு. ஆனா என்னமோ தெரியலே, என் மனசில ஒரே பயம். பார்க்க நல்லா இருக்கறவங்க, மனசும் நல்லா இருக்குமா சுமி?"

சுமித்ரா அவள் கண்களை ஊடுருவினாள்.

"நான் ஒண்ணு கேட்கட்டுமா, நந்து?"

"கேளு சுமி!"

"நீ கூடப் பார்க்க நல்லாத்தான் இருக்கே. அவங்களும் அப்படி நினைக்கலாமில்லையா? டோன்ட் கெட் கன்ஃப்யூஸ்ட். எதுவுமே நம்பிக்கையிலேதாம்மா நடக்குது. உன் மனசுக்குப் பிடிச்சிருந்தா எஸ்னு சொல்லு. என்ன நான் சொல்றது?"

தோளில் விழுந்த அவள் கைகளை மென்மையாகப் பற்றிக் கொண்டாள் நந்து.

"சுமி! உங்கிட்டே ஒரு விஷயம் பத்தி மனம் விட்டுப் பேசணும். அப்பதான், என் கன்ஃப்யூஷன் உனக்குப் புரியும்."

"சரி, சொல்லு!"

"என் அக்காவுக்கு லாஸ்ட் இயர் மேரேஜ் ஆனதுதான் உனக்குத் தெரியுமே! அவ இப்ப எப்படி கஷ்டப்படறா தெரியுமா?"

நந்துவின் கண்களில் ஈரத்தின் பளபளப்பு. சுமித்ரா நந்துவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பார்க்க நல்லா இருக்கறவங்க, மனசும் நல்லா இருக்குமா சுமி?"

அஸ்வினி

"என் அத்தான் ஒரு சந்தேகப் பிராணி சுமி! சந்தேகம் அவள் தேகத்தையே உருக்கிட்டிருக்கு. லைஃபே அவளுக்கு நரகமாயிடுச்சு. எங்கே போனாலும், எதுக்கெடுத்தாலும் சந்தேகப் பார்வை. எவ்வளவோ பார்த்துத்தான் எங்க பேரண்ட்ஸ் பண்ணினாங்க..."

அடங்கிய குரலில் பேசினாலும் அழுகை கலந்து வந்தது.

"எங்க அக்கா, இப்ப 'சுயமே' இல்லாம போயிட்டா. அவகிட்டே இருந்த அத்தனை கலைகளும் அழிஞ்சு போயிடுச்சு. ஏதோ ஜடமா வாழ்ந்துட்டு வரா...

"இப்ப என்னோட குழப்பம் உனக்குப் புரியும்னு நினைக்கறேன். எதிர்காலத்தைப் பத்தின ஒரு பயம்... அதுவும் என் அக்காவைப் பத்தி நினைச்சா... கல்யாணமே வேண்டாம்னு சொல்லிடலாம்னு தோணுது."

"என்ன, நந்து! குழந்தை மாதிரி! நீ இவ்வளவு கோழையா இருப்பேன்னு நினைக்கல்லே. நான் ஒண்ணு சொல்றேன். இப்ப சமையல் பண்றோம். உப்பு, காரம்னு திட்டமாத்தான் போடறோம். சரியா அமையறது இல்லையா? சில சமயம் கூட, குறையப் போறது சகஜம்தான். அதுக்காக சமைக்காம இருந்துடறோமா...?

"பேரண்ட்ஸ் பார்த்துத்தான் கல்யாணம் பண்ணி வைக்கறாங்க. எல்லார்கிட்டேயும் எல்லா குணமும் சரியா இருந்துட முடியுமா? அட்ஜஸ்ட் பண்ணி வாழ்றதுலே ஒரு ஆனந்தம் இருக்கு, தெரியுமா?"

மறுத்தவர்!



● 'கேபினட்' அமைச்சர் பதவி கொடுத்தும் வேண்டாம் என்று மறுத்த ஒரே கண்ணியமான, நாணயமான மனிதர் ஜி.கே. மூப்பனார்தான்! இந்திரா காந்தி கேட்டுக் கொண்டதன் பேரில் நான் மூப்பனாரிடம் சென்று, கேபினட் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டபொழுது மறுத்தது மட்டுமின்றி, 'நான் தொண்டர்களோடு தொண்டனாக இருப்பதையே விரும்புகிறேன்' என்று சொன்ன பெரிய மனிதர் மூப்பனார்!

('ஹிண்டு' நாளிதழில் அருண் நேரு எழுதியது)

— வடவள்ளி ராமசுப்ரமணியன்

என்ன இது?

1991ல் = 1559
1992ல் = 1747
1993ல் = 2213
1994ல் = 2266

இது என்ன என்கிறீர்களா? அரசு வங்கிகளில் வருடந்தோறும் தொடர்ந்து அதிகரித்து வரும் வங்கி மோசடி வழக்குகளின் எண்ணிக்கைதான்.

1994-ல் மட்டும் 200 கோடி ரூபாய்க்கு ...து - வங்கிகளில்!

- பார்கவி

எப்ப வருமோ?

● வங்கிகளில் வேலை செய்யும் ஊழியர்கள், வாடிக்கையாளர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வதற்காக, 90 வார்த்தைகளை அலுவலக நேரத்தில் உபயோகிக்கக்கூடாது என்று அறிவித்திருக்கிறது சீன அரசு. உதாரணமாக – 'எனக்குத் தெரியாது', 'நான் பொறுப்பு இல்லை', 'உங்களுக்கு திருப்தியில்லை எனில் மானேஜரிடம் போங்கள்' 'நான் பிஸி' 'தேவையானால் புகார் செய்யுங்கள்' போன்ற வார்த்தைகள்! இந்த நிலை எப்போது நம் நாட்டில் வருமோ?

விநோதம்

● மினிசோட்டாவில் ஆண்கள் உடைகளையும், பெண்கள் உடைகளையும் ஒரே கொடியில் (கயிற்றில்) காயப் போடக் கூடாது! இண்டியானாவில் பூண்டு அல்லது பூண்டு சேர்ந்த உணவு உட்கொண்ட நான்கு மணி நேரத்திற்குள் பஸ்ஸில் பிரயாணம் செய்யக் கூடாது! பிரிட்டனில் உள்ள போர்ன் மௌத் பியர் என்ற இடத்திற்கு அருகில் உள்ள கடலில், ஒரே சமயத்தில் இரு தூண்டில்களை உபயோகித்து மீன் பிடிக்கக் கூடாது!

நன்றி : பிசினெஸ் இண்டியா

– கிருஷ்ணவேணி ரங்கநாதன்

உயில்

● யூதர்கள் மீது ஹிட்லர் கடுமையான நடவடிக்கை எடுத்தபோது ஐன்ஸ்டைன் குடும்பத்தோடு, அமெரிக்காவிற்குத் தப்பிச் சென்றார். மாபெரும் விஞ்ஞானியாக உருவான அவருக்கு இந்தியா உள்பட பல நாடுகள் தபால் தலை வெளியிட்டு மரியாதை செய்துள்ளன. ஆனால் ஜெர்மனி மட்டும் இதுவரை ஸ்டாம்புகள் வெளியிடவில்லை. காரணம், தன்னைக் கொடுமைப்படுத்திய

"அப்ப, அவங்கவங்க தலையெழுத்துன்னு சொல்றியா?"

"அப்படி இல்லை! வாழ்க்கையில 'பாஸி டிவ் திங்கிங்' வேணும். நல்லதையே நினைப் போம். எல்லாம் நிச்சயமா நல்லபடியா நடக் கும். சியர் அப்."

சுமித்ரா சிரித்தாள். சமீபத்தில் திருமண மான, அவளின் வெற்றியின் ரகசியமே இது தானோ? எதையுமே ஈஸியாக எடுத்துக் கொள் ளும் சுபாவம்!

மனத்தில் ஓரளவு தெளிவு வந்திருந்ததாகப் பட்டது நந்துவுக்கு.

திருமணம் முடிந்து, முதலிரவு.

"நந்து, என்னைப் பிடிச்சிருக்கா?"

"ம்..." வெட்கத்தில் சிவந்த அவள் கன்னங் களை மேலும் சிவப்பாக்கினான் அரவிந்த்.

"நந்து! இனிமே நீதான் எனக்கு எல்லாம். உனக்கு என்ன பிடிக்குமோ, அதான் எனக்கும் பிடிக்கும். ஐ லவ் யூ ஸோ மச்."

சந்தோஷமாயிருந்தது அவளுக்கு.

"ஐ டூ லவ் யூ. ஆனா ஒண்ணே ஒண்ணு எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல்லே!"

நந்துவை பிரமிப்புடன் பார்த்தான் அர விந்த். அவன் முகத்தில் கேள்விக் குறி.


"கல்யாணம் முடிஞ்ச உடனே உங்க கையைப் பிடிச்சு, குலுக்கு குலுக்குன்னு குலுக் கினாளே, ஒருத்தி! யாரது? எனக்குப் பிடிக் கவே இல்லே!"

ஜெர்மனி தன் நினைவாக ஸ்டாம்புகளை வெளியிடக் கூடாதென்று ஐன்ஸ்டைன் உயில் எழுதி வைத்திருந்ததுதான்.

– டி. சுப்பையா

உள்ளே–வெளியே

● ஆபிரகாம்லிங்கனை எதிர்த்து நின்ற வேட்பாளர், ஒரு பொதுக் கூட்டத்தி லேயே, "உங்களை எனக்குத் தெரியாதா? நீங்கள் சாராயக் கடை யில் விற்பனையாளராக வேலை பார்த்தவர் தானே?" என்றார்.



உடனே ஆபிரகாம் லிங்கன், "ஆமாம்; நான் சாராயக் கடையில் டோக்கன் வழங்கும் கவுண்ட்டரின் உள்பக்கம் நிற்கும்போது, நீங்கள் கவுண்ட்டரின் வெளியே நின்று கொண்டு இருப்பீர்களே, அதை ஏன் மறந்து விட்டீர்கள்?" என்றார்.

அந்த அமெரிக்க தேர்தலில் பெரும்பான் மையான வோட்டு வித்தியாசத்தில் ஜெயித் தது லிங்கன்தான்.

– என். சண்முகம்

வேகம்?

● அமெரிக்காவில் ரிக்பி என்ற நகருக்குள் நுழையும்போது ஓர் அறிவிப்புப் பலகை காட்சி தருகிறது :

"40 மைல் வேகத்திற்கு மேல் காரில் சென்று எங்களது பிரமாதமான சிறைச்சாலை யைக் காணுங்கள்."

"60 மைல் வேகத்தில் சென்று எங்களது அற்புதமான மருத்துவமனையை அனுபவியுங் கள்."

"80 மைல் வேகத்திற்கு மேல் சென்று முன் உதாரணமாகத் திகழும் எங்கள் கல்லறையில் புதையுண்டு பாருங்கள்."

– உலகச் செய்திகள் 1000 நூலிலிருந்து

– எல். பாபு

சுகமோ சுகம்!

● பம்பாயிலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வஜ்ரேஸ்வரியில், 22 கந்தக சுடுநீர் சுனைகள் உள்ளன. ராமேஸ்வர் மகாதேவ் கோயிலின் முன் னுள்ள குளத்திலோ, குறைவான, மித மான, கூடுதலான வெப்ப நிலை கொண்ட மூன்று கட்டங்கள் உள்ளன. அவற்றை ராம, சீதா, லக்ஷ்மண குளங்கள் என்று அழைக்கின்றனர். குளிர்காலத்தில் அதி காலையில் நீராடும் போது ஏற்படும் சுகானுபவமே தனி!

குதிரை சவாரி!

● பம்பாயிலிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது மாதரான் கோடை வாசஸ்தலம், உலகிலேயே வாகனங்கள் அனுமதிக்கப்படாத ஒரே ஒரு 'ஹில் ஸ்டேஷன்'. அங்கு செல்ல நேரல் நிலையத் திலிருந்து ஒரு குட்டி ரயில் ஓடுகிறது. ஊருக்குள் குதிரை சவாரிதான். அதன் முப்பது சுற்றுலா இடங்களுக்கும் பயணி கள் குதிரையை வாடகைக்கு அமர்த்தித் தான் செல்கின்றனர்.


– எஸ். மகேஷ்

அறிவிக்கிறோம்

கவர்ச்சிகரமான

சிறப்புப் பரிசுகள்







எங்களிடம் முதலீடு செய்பவர்களுக்கு


(சில நாட்களுக்கு மட்டுமே)








சபரியில் 20 வருடங்களுக்கும் மேல் நாங்கள் கல்வித் துறையில் ஈடுபட்டு உள்ளோம். எங்கள் சபரி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ், உங்கள் முதலீட்டின் பாதுகாப்பிற்கும் அதிக இலாபத்திற்கும் பொருத்தமான இடம். இப்பொழுது எங்கள் பல டெப்பாசிட் திட்டங்களுக்கு கவர்ச்சிகரமான சிறப்புப் பரிசுகளை அளிக்கிறோம். உங்கள் அருகாமையில் உள்ள எங்கள் கிளையில் தொடர்பு கொண்டு இந்த வாய்ப்பை உடனடியாக பயன் படுத்திக் கொள்ளுங்கள்.





24% வட்டி

+

தங்க நாணயம்

+

சிறப்புப் பரிசுகள்

SABHARI


FINANCE & INVESTMENTS

An associate of Sabhari Education Pvt. Ltd.

■ சென்னை: ● அடையார்: 41, எல்.பி. ரோடு, Near Telephone Exchange, Ph: 4917396. ● அண்ணா நகர்: 388, பூந்தமல்லி நெடுஞ்சாலை, அண்ணா வளைவு எதிரில், Ph: 429643. ● கோடம்பாக்கம்: 16, புலியூர் 2வது மெயின் ரோடு, டிரஸ்ட் புரம், Ph: 4842647. ● அண்ணா சாலை: 1, வெல்டர்ஸ் தெரு, Near L.I.C. Ph: 849069,840733,840920. ● தாம்பரம் மேற்கு: 20–B, அய்யா சாமி தெரு, Ph: 2366747.

■ விரைவில் திருச்சியில்.

தேர்தல்:



கருத்துக் கணிப்பா? கண் துடைப்பா?

தேர்தல் வந்து விட்டால் போதும். ஆங்காங்கே கருத்துக் கணிப்பு என்று ஆரம்பித்து விடுகிறார்கள். வரவிருக்கும் நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல்களை ஒட்டி, 'அவுட்லுக்' ஆங்கில வார இதழ், ஒரு நாடு தழுவிய கருத்துக் கணிப்பு நடத்தி இருக்கிறது. அதன்படி காங்கிரஸுக்கு 191 இடங்கள். பா.ஜ.க.வுக்கு 170, தே.மு. மற்றும் இடதுசாரிக் கட்சிகளுக்கு 139 - எப்படியும் தொங்கல் பார்லிமென்ட்தான் என்கிறது அவுட்லுக்.


இது ஒருபுறம் இருக்க, 'எந்தக் கட்சிக்கு வோட்டுப் போடுவது என்று இன்னும் முடிவு செய்யவில்லை' என்று சுமார் முப்பது சதவீதம் பேர் சொல்வதாகவும் கூறுகிறது 'அவுட்லுக்'.

'இந்து' பத்திரிகை, மார்ச் 20 முதல் 27ஆம் தேதிவரை நடத்திய கருத்துக் கணிப்பில், 45 சதவீதத்தினர் 'இன்னும் யாருக்கு வோட்டு' என்று முடிவு செய்யவில்லை என்று சொன்னதாகச் சொல்கிறது.

சென்னை கிருத்தவக் கல்லூரி மாணவர்கள் நடத்திய கருத்துக் கணிப்புப்படி இப்படி 'முடிவெடுக்காதோர்' மொத்தம் பத்து சதம் என்று தெரிகிறது. (தமிழ்நாட்டில் மட்டும்.)

ஒவ்வொருத்தர் கணிப்பும் ஒவ்வொரு விதமாக இருப்பது ஒருபுறம் இருக்க, முடிவெடுக்காதவர்களை, தேர்தல் சமயம் ஏதாவது ஒரு கட்சியின் பக்கம் சாய வைக்கும் 'சக்தி' எது?


"முடிவெடுக்காதவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் : ஒவ்வொரு கட்சியின் தேர்தல் அறிக்கையையும் கவனமாகப் படித்துப் பார்த்து, எதற்கு வோட்டளித்தால் மக்களுக்கு நல்லது என்று ஆராய்ந்து செயல்படும் சிறுபான்மையோர் - படித்தவர்கள் ஒரு வகை. இரண்டாவது - 'ஜெயிக்கிற கட்சிக்கு வோட்டுப் போட்டு விடலாம்' என்று நினைக்கிற, படிக்காத, பாமரர்கள். தேர்தலை ஒட்டி நடத்தப்படும் கருத்துக் கணிப்புகள் சுட்டிக் காட்டும் 'ஜெயிக்கக்கூடிய' கட்சிக்கு இவர்கள் வோட்டு விழுந்து விடும் சாத்தியங்கள் இருக்கின்றன" என்கிறார் சோ.



• சோ

"கடந்த தேர்தலின் போது ஒரு நிறுவனம் நடத்திய நாடு தழுவிய கருத்துக் கணிப்பு, பொய்யாகிப் போனது..." என்கிறார் பத்திரிகையாளர் சின்னக்குத்தூசி. 'முடிவு செய்யவில்லை' என்று கருத்துக் கணிப்பின் போது சொன்னவர்கள், வோட்டுப் போடும் போது ஜெயிக்கிற கட்சியை ஆதரிக்க முடிவு செய்ததே அதற்குக் காரணம். இதைக் கருத்துக் கணிப்பு நடத்திய நிறுவனத்தின் தலைவரே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

"தலைவர்களின் சூறாவளி சுற்றுப் பிரயாணம் அதிரடிப் பிரசாரம் இவையெல்லாம் பெரிதாக எதையும் சாதிப்பதில்லை. பத்து சதம் வாக்காளர்களில் இரண்டு - மூன்று சதவீதத்தினர்



• ரபிபெர்னாட்

குறிப்பிட்ட ஒரு கட்சியை ஆதரித்தாலே போதும்; அதுவே ஆட்சியைப் பிடிக்கும் கட்சியாகி விடும் என்பது கடந்த கால வரலாறு" என்கிறார் சின்னக்குத்தூசி.

அண்மையில் ஒரு தனியார் தொலைக் காட்சிக்காகத் தமிழகம் முழுவதும் கருத்துக் கணிப்பு நடத்தி இருக்கிற ரபிபெர்னாடிடம் பேசினோம்.

"நம் மக்கள் அதிகம் முகதாட்சண்யம் பார்க்கிறார்கள். வீணாய் மனத்தை நோகச் செய்யக் கூடாது என்றோ, பயம் காரணமாகவோ - ஒளிவுமறைவின்றிப் பேசத் தயங்குகிறார்கள். எனவே 'முடிவு எடுக்கவில்லை' என்று கூறுபவர்கள் கூட உள்ளுக்குள் முடிவு எடுத்தே இருப்பார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம்" என்றார்.


இப்படியான நிலையில் கருத்துக் கணிப்புகளை எந்த அளவுக்கு நம்புவது? தவிர, கருத்துக் கணிப்புக்கு, எந்த அடிப்படையில் நபர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்? அனைத்திந்திய அளவில் பலதரப்பட்ட மக்களின் விகிதாசார பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறார்களா? மக்களின் கல்வி - பொருளாதார நிலை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் தேர்வு செய்கிறார்களா? அல்லது கண்ணில் பட்டவர்களிடம் கருத்துக் கேட்கிறார்களா? ஆமெனில், அது எப்படிச் சரியாக இருக்கும்?

சென்னை கிருத்தவக் கல்லூரி கருத்துக் கணிப்புப் பிரிவினரை அணுகிக் கேட்டோம்.

"இந்த வெயிலுக்கு உங்க வீட்டுல ஒரு கொசுகூட இல்லைன்னா, சந்தோஷப்படாம, உங்க மனைவி எதுக்காக உங்களைத் திட்டறாங்க?"

" 'அது கூட சம்மர் வெகேஷனுக்கு ஊருக்குப் போயிருக்கு. நீங்க ஒரு இடத்துக்கும் கூட்டிட்டுப் போக மாட்டேங்கறீங்க'ன்னு கோபிச்சுக்கறா...!"

—என். உஷாதேவி



கல்லூரி மாணவர்களை ஐந்து, ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து, கிராமங்களுக்கு அனுப்புகிறார்கள், இங்கே. மாணவர்கள், தமக்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று, தாலுகா ஆபீஸில் வாக்காளர் பட்டியலைப் பெற்றுக் கொள்கிறார்கள். முன்னதாக, அவர்களுக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில எண்கள் தரப்பட்டிருக்கும். அந்த எண் கொண்ட வாக்காளரின் முகவரியை, பட்டியலிலிருந்து எடுத்துக் கொண்டு போய், கருத்துக் கேட்பார்கள்.

கல்லூரியில் (ஒரு உதாரணத்துக்கு) '1250' என்ற எண் கொடுத்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த கிராமத்தின் மக்கள் தொகையே 1000க்கு மேல் இல்லாத பட்சத்தில்?

" '1250'ஐ இரண்டால் வகுத்து வரும் எண் கொண்ட ஆசாமியைத் தேடிப் போவார்கள்" என்றனர் கல்லூரியின் இந்த கருத்துக் கணிப்புப் பிரிவின் அதிகாரிகள்.

அப்படியானால் கருத்து கேட்கப்படுபவரின் கல்வித் தகுதி, பொருளாதாரச் சூழ்நிலை, கட்சி சார்பு இவையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லையா?

"இல்லை. இருபத்தைந்து வருடங்களாக இதுதான் எங்கள் நடைமுறை!" என்கிறார்கள்.

நமக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதிர்ச்சியை இரட்டிப்பாக்கினார்கள் சில மாணவர்கள் - கருத்துக் கணிப்பு நடத்த உதவுபவர்கள்.

"நாங்கள் தெருத் தெருவாக அலைவது எல்லாம் இல்லை. பஸ் ஸ்டாண்டில் அகப்படுபவர்களிடமே வேலையை முடித்து விடுவோம்!" என்றார்கள்.

"என்ன, உங்கள் மாணவர்கள் இப்படிச் சொல்கிறார்களே?" என்று துறைப் பேராசிரியர்களிடம் கேட்டால், "இப்படிச் சொல்லுவது மாணவர்களிடையே இப்போது ஒரு ஃபாஷன் ஆகி விட்டது. அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இந்தப் பணியைச் செய்வதாக மேலுக்குச் சொன்னாலும் உண்மை அதுவல்ல... நாங்கள் தரும் நம்பர் படி, அட்ரஸ் தேடிப் போய்த்தான் கருத்து கேட்கிறார்கள்" என்றனர்.

இதற்கு மாணவர்களின் கமெண்ட் : "புரொபசர்கள் வேறெப்படிச் சொல்வார்கள்? ஆனால் நாங்கள் சொல்வதுதான் நிஜம்!"

மக்களை மயக்க, சில கட்சிகளே 'ஸ்பான்ஸர்' செய்து தமக்குச் சாதகமாகக் கருத்துக் கணிப்பு நடத்தி முடிவு(?) சொல்லச் சொல்லுவதும் உண்டு என்றார்கள் சில மாணவர்கள்.

ஆக, கருத்துக் கணிப்புகளை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்பதுதான் பாடம்?!

- மௌலி, மாலதி

கழுத்துக்கும் சேதமில்லை; காஷ்மீர் சால்வைக்கும் சேதமில்லை!


ஜோதிபாசுவுக்கு அடுத்தபடியாக, மேற்கு வங்க அரசியலில் அதிகம் 'அடிபடுகிற' பெயர் ஒன்று உண்டு என்றால், அது இளைஞர் காங்கிரஸ் தலைவி மம்தா பானர்ஜிதான். (பெயர் மட்டும் அல்ல; பலமுறை ஆளே அடிபட்டிருக்கிறார்!) ஆர்ப்பாட்ட அரசியல், அழிச்சாட்டிய அரசியல், ஆகாத்திய அரசியல் எல்லாமே இவருக்கு அத்துபடி. மாநில காங்கிரஸ் தலைவர் சோமேன் மித்ராவுக்கும், இவருக்கும் நடைபெறும் குடுமிபிடிச் சண்டை, தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்கிற கட்டத்தில் ஒரு சுவாரசியமான நாடகமாகவே உருமாறியது! சுபாவமாகவே 'ஆ-ஊ' என்று கூச்சல் போட்டு ரகளை பண்ணுகிற ரகம். இப்போது வாய்ப்புக் கிடைத்தவுடன் விட்டுவிடுவாரா என்ன! ஆளும் இடதுசாரி முன்னணி சார்பில் மனு தாக்கல் செய்திருக்கும் பலர், 'கிரிமினல்கள்' என்று குற்றம் சாட்டியதோடு நிற்கவில்லை; 'தமது காங்கிரஸ் கட்சி சார்பில் நிறுத்தப்பட்ட சங்கர் சிங், கல்தான் அகமது, மிருணாள்சிங் ராய், கதீர் சௌத்ரி ஆகியவர்களும்கூட கிரிமினல்கள்தாம்' என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருக்கிறார் மம்தா! இவர்கள் நால்வருக்கும் டிக்கட் கொடுத்தால் தமது வேட்பு மனுவை வாபஸ் பெறப் போவதாகச் சவால் விட்டார். யாருக்குச் சுத்தமான இமேஜ் இருக்கிறதோ அவருக்கு மட்டுமே தாம் பிரசாரம் செய்யப் போவதாக அறிவித்தார். சோமேன் மித்ரா, மம்தாவின் ஆதரவாளர்களை எல்லாம் ஓரங்கட்டி, தம் கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கே நிறைய சீட் கொடுத்திருந்தார். மம்தாவின் ஆட்களுக்கு பெப்பே! வேட்பு மனுவை வாபஸ் வாங்குகிற கடைசி நாள் வரை தில்லியிலிருந்து தகவல் எதுவும் வராமல் போகவே, தமது வேட்பு மனுவை வாபஸ் வாங்குகிற நாடகத்தை அமர்க்களமாக நடத்தினார் மம்தா. அவருடைய ஆதரவாளர்களின் அழுகை, ஆர்ப்பாட்டம் என்று ஒரு மெலோட்ராமா கச்சிதமாக அன்று நடந்தேறியது! நடுத் தெருவில் நின்று கொண்டு, காஷ்மீர் சால்வையைக் கழுத்தில் இறுக்கிக் கட்டியபடி, 'இதோ தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன் பாருங்கள்!' என்றார். அவருடைய ஆதரவாளர்களுக்கே அதிர்ச்சி! அத்தனை எளிதாக அவர் உயிரை விட்டுவிட நரசிம்மராவும், காங்கிரஸ் தலைமையும் விரும்பவில்லை. அவருடைய ஆதரவாளரான தேவேந்திர த்விபேதியிடம் ஒரு ஃபேக்ஸ் தகவல் அனுப்பி, 'சங்கர் சிங்கை வாபஸ் பெறுகிறோம். உங்கள் ஆதரவாளர் பணிபத்ர ராயை அவர் இடத்துக்குப் போட்டுவிடலாம்' என்று சொல்லியது. கழுத்துக்கும் சேதமில்லை, காஷ்மீர் சால்வைக்கும் சேதமில்லை! கௌரவமாகத் தப்பித்துக் கொண்டார் மம்தா! சுதீப் பந்தோபாத்யாயா, சௌகத் ராய் என்று தம்முடைய ஆதரவாளர்களுடன் 'ஆகா, என் முயற்சிகளுக்கு வெற்றியோ வெற்றி' என்று குதியாய்க் குதித்தார் மம்தா.



• மம்தா பானர்ஜி

மம்தா பானர்ஜி, தெற்குக் கல்கத்தாவில் அத்தனை எளிதாக ஒன்றும் வென்றுவிட முடியாது என்கிறார்கள். சி.பி.எம்.மின் வேட்பாளர், டாக்டர் பாரதி முகர்ஜியும் இலேசுப்பட்டவர் அல்லவாம்.

– சித்தார்த்



“பொய்ப் பி
செய்கிற
ஜெயலலி

— கருணாநிதி பரபரப்புப் பேட்டி

தேர்தல் நேர அவசரப் பணிகளுக்கிடையிலும் நமது கேள்விகளுக்கு நிதானமாகப் பதிலளித்தார் கலைஞர்....

கல்கி : தங்களைச் சேர்த்துக் கொள்ளாததன் மூலம், இந்தத் தேர்தலில் நான்கு முனைப் போட்டி ஏற்பட்டதற்குக் காரணம் நீங்கள்தான் என்று டாக்டர் ராமதாஸும், வாழப்பாடி ராமமூர்த்தியும் கூறியிருக்கிறார்களே?

கலைஞர் மு. கருணாநிதி : ஏழு கட்சிக் கூட்டணி அமைவதற்குக் காரணமாக இருந்தவன்தான் நானே தவிர, பிரிவதற்கு நான் எந்த நிலையிலும் காரணமாக இருந்ததில்லை. 'மற்றவர்களெல்லாம் எனது பதவி போனபிறகு போய் விட்டார்கள்; என்னோடு இருந்தால் பதவி போகும் என்பது தெரிந்தும் கூட கருணாநிதி என்னோடு இருக்கிறார்' என்று வி.பி.சிங் மதுரையில் பாராட்டிப் பேசுகிற அளவுக்கு வாழ்விலும் தாழ்விலும் ஒன்றாக இருந்தது தி.மு.க. என்பதையெல்லாம் மறந்து விட்டுத்தான் ஜனதாதளம் ஜெயலலிதாவுடன் உறவை ஏற்படுத்திக் கொள்ள ஆர்வம் காட்டியது. எங்கள் எச்சரிக்கையையும் மீறிச் செயல்பட்டதால்தான் தேசிய முன்னணியுடனான உறவை முறித்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை தி.மு.க.வுக்கு ஏற்பட்டது.

பிறகு வாழப்பாடி சன் டீவிக்கு அளித்த பேட்டியில் தேவையில்லாமல் ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக தி.மு.க. அக்னிப் பிரவேசம் செய்ய வேண்டும் என்றார். நாங்கள் பொறுமை காத்தும் அவர், கூட்டணி வெற்றி பெற்றால் அமைச்சரவையில் பங்கு வேண்டும்; தராவிட்டால் கூட்டணியில் இடம்பெற மாட்டோம் என்றெல்லாம் பேசினார். அதன் பிறகும் 'கூட்டணி அமைச்சரவையில் நாங்கள் பங்குபெற்றால் அவர்கள் கொள்ளையடிப்பதற்கு நாங்கள் தடையாக இருப்போம்' என்றெல்லாம் பேசி அவரை விலக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தினார்.

டாக்டர் ராமதாஸ், கூட்டணியில் பா.ம.க. இருப்பது குறித்து அவர் அறிவிக்குமுன்னரே, தொகுதிப் பங்கீடு பற்றிப் பேச வேண்டுமென்றார். அதையும் ஒப்புக் கொண்டோம். அதுவரை தாமே என்னிடம் நேரடியாகப் பேசிக் கொண்டிருந்தவர், திடீரென்று எனது ஸ்டேடஸுக்கு ஒரு குழுவை அனுப்பிப் பேசினாலே போதும் என்று நினைத்தாரோ என்னவோ, தீரன் தலைமையில் மூவர் குழுவொன்றை அமைத்து அனுப்பினார். அதனுடனும் பேசினேன். இருந்தும் அவர்களாகவேதான் விலகிக் கொண்டார்கள்.

பிறகு ஏற்பட்ட அரசியல்
கிரஸுடன் நாங்கள் தொகுதிட
மீண்டும் வந்து கூட்டணியில்
'சேர்த்துக் கொள்ள எண்ணமி
செய்வது!' என்றேன். சரி, நா
வென்றால் அவர்களிடம் கே
கொண்டாரே, அப்படியிருந்து
அமைத்துக் கொள்ளாததற்கு
நிற்பதற்கு ஏதோ நிர்ப்பந்தப்படு
என் மேலும் கோபால்சாமி மே
போடுகிறார்.

கல்கி : என்ன நிர்ப்பந்தம்?

கலைஞர் : அது எனக்குத் ெ
தன்னிலை விளக்கமாகச் சொல்
குறைகூற விரும்பவில்லை. எல்
லலிதா ஆட்சியை வீழ்த்துவதுதா
கட்சியை விமர்சனம் செய்ய
விரும்பவில்லை. எல்லோரும்
ஒழிக்க வேண்டும். இதுதான் எ

கல்கி : இப்படி நான்கு முன
நூறு வாக்கு வித்தியாசத்தில்
தோற்றதாக ஆகிவிடக் கூடாதே

கலைஞர் : கூட்டணி இரு
யைச் சேர்த்துக் கொண்டிருந்
நிலைமை ஏற்படலாமே! சோ
சாமிக்காகத்தான். அதை என்
முடிந்து, மனுதாக்கலெல்லாம் மு
ஒரு சீட் கொடுங்கள் என்றால்

கல்கி : மொத்தமாகச் சேர்த்
களும் பார்லிமெண்டுக்கு இரண்
சோ சொல்லியிருக்கிறாரே?

கலைஞர் : சோ வந்து என்ன
மனச்சாட்சிக்குத் தெரியும். அ
என்று நான் நம்புகிறேன்.

கல்கி : நீங்கள் ஆட்சிக்கு
மாட்டோம்; தமிழகத்தின் நலன்
யிருக்கிறீர்களே... அப்படியானா
களெல்லாம் தப்பித்து விடுவார்கள்





ங்களால், மூப்பனார் காங்
டு செய்து கொண்ட பிறகு,
விருப்பம் தெரிவித்தார்கள்.
யும் இடமில்லையே, என்ன
் கெட்டவன், சரியில்லை
சாமி தாராளமாக நடந்து
பால்சாமியோடு கூட்டணி
காரணம்? அவர் தனித்து
ட்டிருக்கிறார். அதனால்தான்
டாக்டர் ராமதாஸ் பழியைப்

ாது... இதையெல்லாம் எனது
ன தவிர, எந்தக் கட்சியையும்
டைய குறிக்கோளும் ஜெய
ன்கிற நிலையில், இன்னொரு
கேவலப்படுத்தவோ நான்
து ஜெயலலிதா ஆட்சியை
லை.

போட்டி நடப்பதால், பிறகு
று வாக்கு வித்தியாசத்தில்
சோ சொல்லியிருக்கிறாரே?
யும் கூட - சுப்ரமணியசாமி
ும் கூட - அப்படியொரு
்து கேட்டது, சுப்ரமணிய
் வந்து கேட்பது? எல்லாம்
பிறகு, சுப்ரமணியசாமிக்காக
டிக் கொடுக்க முடியும்?
சட்டசபைக்குப் பத்து இடங்
டங்களும்தான் கேட்டதாகச்

ட்டார் என்பது அவருடைய
பொய் சொல்ல மாட்டார்

தால்; 'யாரையும் பழிவாங்க
' முக்கியம்' என்று சொல்லி
இதுவரை தவறு செய்தவர்
என்கிற சந்தேகம் வருகிறது...

சாரம்
ார்
தா!”



கலைஞர் : எப்போதும் சட்டம் தன் கடமையைச் செய்யும். நாங்கள் யாரையும் 'சாடிஸ்ட்' மனப்பான்மையோடு பழிவாங்க மாட்டோம் என்கிற அர்த்தத்தில்தான் சொன்னேன்.

கல்கி : தாங்கள் ஆட்சிக்கு வந்தால், தவறாகச் சொத்துச் சேர்த்தவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதாகக் கோபால்சாமி அறிவித்திருக்கிறார். அப்படி நீங்கள் அறிவிக்கவில்லை என்று உங்களைக் குற்றமும் சாட்டியிருக்கிறார்...!

கலைஞர் : அவருடைய துடிப்பில் அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார். ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலான எனது அரசியல் வாழ்க்கையின் நிதானத்தில் என்னால் இப்படித்தான் சொல்ல முடியும். அதனாலேயே தவறு செய்தவர்களையெல்லாம் விட்டு விடுவோம் என்று அர்த்தமல்ல!

கல்கி : காங்கிரஸோடு கூட்டணி அமைத்துக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தில்தான் நீங்கள் பா.ம.க. போன்ற கட்சிகளை விலக்கியே வைத்திருக்கிறீர்கள் என்று சொல்கிறார்களே?

கலைஞர் : அது தவறு. மிகத் தவறு. மறுபடியும் காங்கிரஸும் அ.தி.மு.க.வும் ஒன்று சேருகிறார்கள் என்பது உறுதியான பிறகுதான் அதை எப்படியாவது உடைக்க வேண்டும் என்கிற காரணத்தால்தான், நான் திருச்சியில் காங்கிரஸோடு பேசுவதற்குத் தயாராய் இருப்பதாகக் கூறினேன். அதன் பிறகு ஏற்பட்ட விளைவுகள் என்பது நான் சொன்ன வார்த்தைக்கு மதிப்பளிக்கக்கூடிய விளைவுகளாக அமைந்து விட்டன.

கல்கி : மூப்பனார் காங்கிரஸுக்கு நீங்கள் என்னதான் இதயத்தில் ஏராள இடம் ஒதுக்கியிருந்தாலும் தொகுதிகள் ஒதுக்கீட்டு விஷயத்தில் இன்னும் கொஞ்சம் தாராளம் காட்டியிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது...!

கலைஞர் : மூப்பனாருக்கே இல்லாத கவலை உங்களுக்கு எதற்கு? (சிரிப்பு!)

கல்கி : கவலையல்ல; இன்னும் கொஞ்சம் அதிகத் தொகுதிகள் ஒதுக்கியிருந்தால் மூப்பனார் காங்கிரஸ்தான் உண்மையான காங்கிரஸ் என்று தி.மு.க. அங்கீகரித்தது போல் இருக்குமே என்கிற சிலரின் எண்ணம்...

கலைஞர் : மூப்பனார் காங்கிரஸ்தான் உண்மையான காங்கிரஸ் என்பதை நாங்கள் மறுக்கவில்லை; உறுதியான காங்கிரஸ் என்பதையும் மறுக்கவில்லை; மனச்சாட்சிப்படி நேர்மைக்காகப் போராட வந்தார்கள் என்பதையும் நாங்கள் ஏற்க மறுக்கவில்லை. ஆனால் நிலைமை கடைசி நேரமாகப் போய் விட்டது. கொஞ்சம் முன்பே அவர்கள் ஒரு போன் செய்திருந்தால் கூட நிலைமை வேறு மாதிரி இருந்திருக்கும்! உண்மையில் முடியாது என்பதல்ல; இயலாத சூழ்நிலை என்பதுதான் காரணம்!

கல்கி : மத்தியில் இருக்கிற காங்கிரஸ்தான் மாநிலக் கட்சிகளை உடைக்கிற வேலையில் ஈடுபடுகிறது என்று நீங்களே குற்றம்சாட்டியிருக்கிறீர்கள். ஆனால், தமிழக காங்கிரஸில் ஏற்பட்ட இப்போதைய பிளவுக்கு தி.மு.க.தான் காரணம் – 'காங்கிரஸோடு பேசுவதற்கு நாங்கள் தயார்' என்று நீங்கள் அறிவித்ததால்தான் மூப்பனார் அணியினர் தனியாகப் பிரிந்து வருவதென்ற உறுதியான முடிவை எடுத்தார்கள் என்று சொல்லலாமா?

கலைஞர் : இப்போது தமிழக காங்கிரஸ் உடைந்ததற்குக் காரணமும் மத்தியில் இருக்கிற காங்கிரஸ்தான்.

கல்கி : தங்கள் கூட்டணி வெற்றி பெற்றால் நரசிம்மராவ்தான் பிரதமர் என்று ஜெயலலிதா பிரசாரம் செய்கிறார். நீங்கள் யாரை பிரதமர் என்று பிரசாரம் செய்வீர்கள்?

கலைஞர் : செயல்படாத பிரதமரைச் செயல்படச் செய்கிறார்! (சிரிப்பு!) மக்கள் எங்களுக்கு நல்லதொரு தெளிவான தீர்ப்பை அளித்தால், நாங்கள் பார்த்து யாரை உட்கார வைக்கிறோமோ அவர்தான் பிரதமர்.

கல்கி : அப்படியானால் மத்தியில் தெளிவான மெஜாரிடி கிடைக்காது என்று நினைக்கிறீர்களா?

கலைஞர் : இன்றைய சூழ்நிலை அப்படித்தான் இருக்கிறது.

கல்கி : மூப்பனார் காங்கிரஸார் நரசிம்மராவை ஆதரிக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடும் இருக்கலாமே?

கலைஞர் : உங்களுடைய கேள்வி வெறும் யூகத்தின் அடிப்படையிலான கேள்விதான். என்றாலும் அப்படியோர் எண்ணத்தோடிருந்தால் அவர்கள் தனியாகப் பிரிந்து வந்திருக்க வேண்டிய அவசியமில்லையே!

கல்கி : நாளைக்கு நரசிம்மராவ் பிரதமராவதற்கு இன்னும் ஒருசில எம்.பிக்களின் ஆதரவே தேவை என்கிற நிலையில் – அவர் மூப்பனாரிடம் வந்து ஆதரவு கோருகிற நிலையில் – அவர்கள் மறுபடியும் ஒன்றுசேரவும் செய்யலாமே!

கலைஞர் : அது பற்றி நான் ஒன்றும் சொல்ல இயலாது. இங்கே எங்களுக்கிருக்கிற ஒரே லட்சியம் ஜெயலலிதா ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பது மட்டும்தான்!

கல்கி : மதுவிலக்கைப் படிப்படியாகக் கொண்டு வருவோம் என்று அ.தி.மு.க.வும் முழுமையாகக் கொண்டு வருவோம் என்று ம.தி.மு.க.வும் தங்கள் தேர்தல் அறிக்கைகளில் கூறியுள்ளன. ஆனால், தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் அது பற்றி எதுவும் சொல்லப்

KALKI SHOPPING PAGE



மணமக்கள் தேவை
கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்துசமூகத்திலும், ஆயிரக்கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

ஆங்கிலம், தமிழ்	ரூ. 50/-
எதிர்கால கணிப்புடன்	ரூ. 150/-
ஆண்டு பலன் :	ரூ. 50/-
கல்யாண பொருத்தம் :	ரூ. 50/-
NUMEROLOGY PREDICTIONS :	Rs. 50/-

CONSULT DIVINE ASTROLOGER
THETIYUR V MAHADEVAN
WITH PRIOR APPOINTMENT.

ASTROLOGY SOFTWARE FOR SALE

ஸ்வயம்வராலயா

(GOVT. REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 33. போன் : 425822, 4846427
7–ஏ, சாந்தி விஹார் காம்ப்ளக்ஸ், ஸ்,
சென்னை – 4. போன்:846278,
88, 1, 16th Cross, 6th Main, Malleswaram,
Bangalore - 560 055. Ph.:3340146

FRANCHISE / AGENTS WANTED

NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT

NOTIFICATION No. 9/96

Offers the following Diploma Courses by Correspondence.

BUSINESS MANAGEMENT	(1 Year)
FINANCIAL MANAGEMENT	(1 Year)
MARKETING MANAGEMENT	(1 Year)
HUMAN RESOURCES DEVELOPMENT	(1 Year)
ADVERTISING & PUBLIC RELATIONS	(1 Year)
TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000	(1 Year)
QUALITY CONTROL & RELIABILITY	(1 Year)
BUSINESS ADMINISTRATION	(6 Months)
OFFICE ADMINISTRATION	(6 Months)
SALES & MARKETING	(6 Months)
INDUSTRIAL RELATIONS & PERSONNEL MGMT.	(6 Months)
LABOUR LAWS	(6 Months)
QUALITY ASSURANCE & ISO 9000	(6 Months)
PRODUCTION MANAGEMENT	(6 Months)
INDUSTRIAL SAFETY	(6 Months)
ENVIRONMENTAL MANAGEMENT	(6 Months)
RESEARCH & DEVELOPMENT	(6 Months)

No formal qualifications is required. Course Fee Rs. 1200/- (1 Year) & Rs. 600/- (6 Months). Examination centre at all major cities. For registration form and prospectus, kindly send Rs. 3/- postal stamp to **NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT** 23/13, Rameswaram Road, Narayana Apartments, Second Floor, T. Nagar, Madras - 600 017. Phone : 044-4851854 Fax : 044-4933259.



சிறுகதைப் போட்டி

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்குக் கதைகள் அனுப்பக் கடைசித் தேதி – ஜூன் 15. முழு விவரங்களுக்குச் சென்ற வாரக் கல்கி யைப் பாருங்கள். அல்லது அடுத்த வாரம் வரை காத்திருங்கள்!

படவில்லையே?

கலைஞர் : ஆட்சிக்கு வருவோம் என்கிற நம்பிக்கையுடையவர்கள் எதையும் ஜாக்கிரதையாகத்தான் சொல்லுவார்கள். வரமாட்டோம் என்று நினைப்பவர்கள்தான் எது வேண்டுமானாலும் சொல்லுவார்கள். (சிரிப்பு). நாங்கள் சொல்வது என்னவென்றால் மதுவிலக்கை தளர்த்த மாட்டோம். இப்போது போல் அல்லாமல் தீவிரமாக அமல்படுத்துவோம். கூடுதலாக பெண் பிரசாரகர்களையும் நியமிப்போம் என்பதுதான்.

கல்கி : பெண்களுக்கு ஐம்பது சத இட ஒதுக்கீடு என்று சொல்லியிருக்கிறார்கள்...

கலைஞர் : தேர்தல் பிரசாரத்தில் ஜெயலலிதா சொல்வதெல்லாமே பொய்தான். பெண்களுக்குச் சொத்துரிமை என்பதைத் தாம் கொண்டு வந்ததாகச் சொல்கிறார். அது 89-ல் தி.மு.க. கொண்டு வந்தது. அரசு வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு முப்பது சதம் ஒதுக்கீடு என்கிறார். அதுவும் தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அரசு ஆணை. விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தையும் தாம் கொடுத்ததாகவே சொல்கிறார். அதுவும் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தி.மு.க. ஆட்சியில்தான் கொடுத்தோம். இந்தப் பொய்களோடு இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

கல்கி : உங்கள் தேர்தல் அறிக்கைப்படி பார்த்தால், சில மாற்றங்களைத் தவிர மற்றபடி புதிய பொருளாதாரக் கொள்கைகளை நீங்கள் வரவேற்கிற மாதிரிதான் இருக்கிறது!

கலைஞர் : புதிய பொருளாதாரக் கொள்கையில் பல நன்மைகள் இருக்கவே செய்கின்றன. பர்மிட் லைசென்ஸ் ஒழிவதால் லஞ்ச ஊழல் குறையும் என்பது மெய்தான். தொழில் வளர்ச்சி வேகம் பெறும். ஆனால் நலிந்த பிரிவினருக்கும்; உழைப்பாளர் நலனுக்கும் ஊறு விளைவிப்பதாகக் கொள்கை அமைந்து விடக் கூடாது. மேலும், நன்றாக நடக்கின்ற அரசுத் துறை நிறுவனங்களைக் கூட தனியாரிடம் ஒப்படைப்பது போன்ற காரியங்கள் ஊழலை வளர்க்க வழிசெய்கின்றன. எனவே புதிய பொருளாதாரக் கொள்கையில் சில மாற்றங்களைக் கோருகிறோமே தவிர அடியோடு எதிர்க்கவில்லை.

கல்கி : இன்றைய ஆட்சியின் ஊழல் பற்றிப் படித்தவர்களிடம் இருக்கிற விழிப்புணர்வு, எங்கோ தள்ளியிருக்கிற – படிப்பறிவில்லாத கிராம மக்களிடம் இல்லை. அவர்களெல்லாம் யோசித்து வாக்களிப்பதில்லை. அப்படி அவர்களும் யோசித்து வாக்களிப்பதற்கு தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

கலைஞர் : அப்படிப்பட்ட கிராமங்களில் கூட நேரடியாக இப்போது அனுபவிக்கிறார்கள். சாலை வசதி, குடிநீர் வசதி, பொதுவான மருத்துவ வசதிகள் எல்லா கிராமங்களிலும் இல்லை. இந்தக் குறைகளைச் சொல்வதற்கும் – உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்காததால் – தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லை. எதற்கெடுத்தாலும் நேரடியாக அதிகாரிகளிடம்தான் போக வேண்டியிருக்கிறது. அதிகாரிகளும் ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்களும் ஒன்றுசேர்ந்து கொண்டு கொள்ளையடிப்பதை மக்கள் நேரடியாகவே பார்க்கிறார்கள். எதற்கெடுத்தாலும் பத்து சதம் 'கமிஷன்' என்பது அனைவருக்கும் தெரிந்தே இருக்கிறது. குக்கிராமங்களில் இருக்கிற மக்கள் கூட இந்த ஆட்சியின் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்; உணர்ந்திருக்கிறார்கள்.

கல்கி : அப்படியானால் தி.மு.க.வின் முன்னணித் தலைவர்கள் எல்லாருமே சென்னையிலேயே போட்டி போடுவதேன்? கிராமங்களில் போட்டியிட்டிருக்கலாமே?

கலைஞர் : நான் முன்பு குளித்தலையில் போட்டியிட்டிருக்கிறேன். அண்ணா காஞ்சிபுரத்தில் போட்டியிட்டார். தஞ்சாவூரிலும் நான் போட்டியிட்டிருக்கிறேன்! இப்போதைய காரணம், வெற்றி வாய்ப்பு சுலபமாக உள்ள பகுதிகளில் முன்னணித் தலைவர்கள் போட்டியிடுகிற போது, அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று தேர்தல் பிரசாரம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதுதான்.

கல்கி : Ombudsman என்ற அமைப்பை ஏற்படுத்தி, முதலமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்கள் மற்றும் வாரியத் தலைவர்கள் ஆகியோரின் மேல் கூறப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிக்கப் போவதாகத் தேர்தல் அறிக்கையில் கூறியிருக்கிறீர்கள். அந்த அமைப்புக்குத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் இருக்குமா?

கலைஞர் : லோக்பால், லோகாயுத் என்று ஏற்கெனவே மசோதா இருக்கிறது என்றாலும் அதை யாரும் அமுலுக்குக் கொண்டு வரவில்லை. திரிபுரா மாதிரி இரண்டு மூன்று மாநிலங்களில் மட்டுமே கொண்டு வந்தார்கள். அங்கும் முதலமைச்சரைத் தவிர்த்து மற்றவர்கள் மேல் கூறப்படும் குற்றச்சாட்டுகளைத்தான்

KALKI SHOPPING PAGE

மணமக்கள் தேவை
இலவச சேவை

அனைத்து சமூகத்திலும், ஆயிரக்கணக்கான வரன்கள் பெற உடன் பதிவுசெய்ய தொடர்பு கொள்ளவும்.

BEST BRIDE & GROOM BANK™

H.O.: 3rd Floor, Shanthi Complex,
26, Ranganathan Street,
Madras - 600 017.
Phone : 4348560 4347025

B.O.: 13, College Road,
Nanganallur, Madras - 114.
7, Station Road, Tambaram
Sanatorium,
Madras - 600 047.
5, Second Main Road,
New Colony,
Chromepet,
Madras - 600 044.

Working on Sundays also

ADYAR

STUDENTS XEROX

Quality that is close to perfection

XEROX
LASER PRINTING
WORD PROCESSING
DTP
ELECTRONIC &
MANUAL TYPING
BINDING &
LAMINATION

வைத்தியம் பர்வதா
சுங்குடி புடவைகள்


தள்ளுபடி விற்பனை
10% To 20%
10.4.96 To 25.4.96

தேவேந்திரா சாரீஸ்,
ராணீ சாரீஸ்,
பெல்காம் பட்டு,
காட்டன் புடவைகள்
படிக் சேலைகள்

1, வடக்கு மாட வீதி,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.
போன் : 495 3264


உ

இப்போது விற்பனை ஆகிறது அகில
உலக அனுஷ்டானத்தில் உள்ளது
அசல் 28-நெ. தாது ௵ 1996-97
பாம்பு பஞ்சாங்கம்



தினசரி திதி, நட்சத்திரம் குறிப்புகள் சகல ஆலய உற்சவாதிகள், மற்றும் சுப முகூர்த்தம், நட்சத்திர பலன்கள் அடங்கியுள்ளது.

கிடைக்குமிடம் : M.S. பச்சையப்ப முதலியார்
மனோன்மணி விலாச அச்சகம்
26, பாஷ்யகாரலு நாயுடு தெரு,
கொண்டித்தோப்பு, சென்னை - 600 079
தொலைபேசி எண் : 518887



''யோவ்... 'குடை'யோடு வாக்குச் சாவடிக்குள் வரக் கூடாது, தெரியுமா?''
''நீங்க மட்டும் 'கை'யோடு வந்திருக்கீங்களே... அது மட்டும் நியாயமாங்க!''
– புளியரை கணேசன்

விசாரிக்கும் என்கிற வகையில் கொண்டு வந்தார்கள். அதை நான் 73–74ல் Public men misconduct Act என்னும் பெயரில் தமிழகத்தில் அறிமுகம் செய்தேன். ஆலோசனைக்கு நீதிபதி வெங்கடாத்ரி கமிஷன் என்றும் ஏற்பாடு செய்தோம். குற்றச்சாட்டு உண்மையா இல்லையா என்று கண்டுபிடித்துச் சொல்ல வேண்டியது; உண்மையென்றால் உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் மேல் வழக்குத் தொடுப்பது அரசாங்கத்தின் உடனடிப் பொறுப்பு என்கிற நிலையை அறிமுகப்படுத்தியிருந்தேன். இதில் குறையிருந்தால் திருத்தம் கொண்டு வரலாம் என்று நான் சொன்ன நிலையிலும் பலரும் அதை எதிர்த்தார்கள். எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தவுடன் அதைக் 'கறுப்புச் சட்டம்' என்று சொல்லி உடனடியாக ஒதுக்கித் தள்ளி விட்டார். இப்போது அதை மீண்டும் – தேவைப்பட்டால் திருத்தங்களோடு கொண்டு வருவது தான் தி.மு.க.வின் திட்டம்.

கல்கி : இன்றைய நிலையில் நம் நாட்டு மக்கள், அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளைப் படித்து வாக்களிப்பதென்பது மிக மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. இது அதிகரிக்க வேண்டும். அந்த வகையில் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றில் மிக முக்கியமானதாக நீங்கள் கருதும் மூன்று விஷயங்களைச் சொல்லுங்களேன்.

கலைஞர் : நல்ல நிர்வாகம் – மக்கள் நலனுக்கான எந்தத் திட்டமானாலும் நல்ல நிர்வாகத்தின் மூலமே சிறப்பாக அமுல்படுத்த முடியும் என்பதால் இது முக்கியம். அடுத்து, சட்டம் – ஒழுங்கைப் பாதுகாத்தல், மூன்றாவது அடிமட்டம் முதல் மேல் மட்டம் வரை இப்போது பரவியிருக்கிற ஊழலை முற்றாக ஒழித்தல். இந்த மூன்றையும்தான் மிக முக்கியமானதாகக் கருதுகிறோம்.

கல்கி: இன்றைய இளைய சமுதாயத்தினரிடம் பேசிப் பார்த்தால், பலரும் 'நாங்கள் வோட்டே போடப் போவதில்லை' என்றுதான் சொல்கிறார்கள். காரணம், யார் வந்தாலும் இப்படித்தான் இருக்கப் போகிறார்கள். தேர்தல் என்பதே அரசியல்வாதிகள் பதவிகளுக்கு வருவதற்கான ஒரு விஷயம். இதில் தங்களுக்குச் சம்பந்தமே இல்லை என்பது போல்தான் பேசுகிறார்கள். இப்படியொரு மனநிலைக்கு என்ன காரணம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

கலைஞர் : அரசியல்வாதி என்றாலே அசிங்கமானவன் என்று கருதுகிற அளவுக்கு இன்றைக்கு நாட்டில் ஊழல் பெருகியிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. இந்த நிலை களையப்பட வேண்டும்; இதை அரசியல்வாதிகள்தான் செய்ய வேண்டும். யார் வந்தாலும் இப்படித்தான் இருப்பார்கள் என்று இளைய சமுதாயம் கருதுவதற்குப் பத்திரிகைகளும் ஒரு காரணம். அரசியல்வாதி என்றாலே மோசமானவன் என்று ஒட்டுமொத்தமாக எழுதாமல், இருக்கிற நல்ல அரசியல்வாதிகளைப் பகுத்து – இனம்கண்டு எழுதி மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும். இந்தப் பொறுப்பு பத்திரிகைகளுக்கும் இருக்கிறது.

கல்கி : இன்றைய தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரை, எந்த அரசியல் கட்சியிலும் இல்லாத ரஜினியின் ஒவ்வொரு வார்த்தையும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கலைஞர் : ரஜினியே, 'ஜெயலலிதா ஆட்சி நல்ல ஆட்சி; எல்லோரும் அதை வரவேற்றுப் பாராட்டுவோம்' என்று சொல்லியிருந்தால் அந்த வார்த்தைக்கு மதிப்பிருந்திருக்காது! (சிரிப்பு.) அவர் உண்மையைச் சொன்னதால் தான் அந்த வார்த்தைகளுக்கு மதிப்பு இருக்கிறது.

கல்கி : கடைசியாக ஒன்று. உங்கள் ஐம்பதாண்டு கால சினிமா அனுபவத்தைக் குறிக்கிற வகையில் சினிமாத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத ஓர் அனுபவத்தைச் சொல்லுங்களேன்!

கலைஞர் : சென்சார் பற்றிச் சொல்லலாம். 'காஞ்சித் தலைவன்' என்ற படத்தில் ஒரு பாடல். 'வெல்க வாதாபி! வெல்க வாதாபி!' என்று வாதாபியிலிருந்து படையெடுத்து வருகிறான். காஞ்சியிலிருந்து 'வெல்க காஞ்சி! வெல்க காஞ்சி!' என்று நரசிம்மவர்மன் படையெடுத்துச் செல்கிறான். அந்தப் பாடலில் 'வெல்க வாதாபி!' என்பதை விட்டு விட்டார்கள். 'வெல்க காஞ்சி!' என்பதில், 'காஞ்சி' என்பது அண்ணாவைக் குறிக்கிறது என்று சொல்லி அதை மாற்றச் சொல்லி விட்டார்கள். வேறு வழியின்றி 'வெல்க நாடு!' என்று 'மாற்ற வேண்டியதாகி விட்டது. இந்த சென்சார் அனுபவம் மறக்க முடியாதது!

அட்டை வண்ணப்படமும்
படங்களும் : **யோகா**

பிரம்மாஸ்திரம்

தாம்பரம் தாண்டி, வண்டலூர் கடந்து மறைமலை நகர் என்று உலகின் எல்லையிலேயே நிம்மதியாய் குடியிருந்த சுப்பிரமணிக்கு சென்னையின் 'நடுசென்டரில்' குடியிருக்கும் துரதிர்ஷ்டம் செ.ஜெயராமன் உருவில் வந்தது.

நடு இரவுக்கும் அதிகாலைக்கும் நடுவில் அசம்பாவிதமாய் காலிங்பெல் அலற, திடுக்கிட்டு விழித்த சுப்புவின் சப்த நாடியும் ஒடுங்கி அடங்கிவிட்டது. பயத்தில் கண்களை இறுக்கிக் கொண்டான்.

விக்கித்து விழித்தாள் வாத்சாயினி சுப்பு. "தூங்கற மாதிரி ஆக்ட் கொடுத்தது போதும். கதவைத் திறங்க."

"டியர்! இது நிச்சயம் முகமூடித் திருடனாத்தான் இருக்கும்!"

"மிஸ்டர் கும்பகோணம் சந்திரசேகர சுப்பிரமணி, கதவைத்திற."

முழுப்பெயரும் இழுழுழுழுக்கப்பட்டதும் துள்ளி எழுந்து திறந்தான் கதவை.

அதிரடியாய் நுழைந்தான் செ. செயராமன். "சாரிடா சுப்பு. இத்தனை சீக்கிரமாவா தூங்கிடுவே?"

"டென்ஷன் உண்டாக்காதே. நான் கிட்டத்தட்ட விழிக்கிற டைம்."

ஸ்வீட் - டிரெஸ் - பொருள் என்று பைகளாக வந்தது.

"எவனை எழுப்பி உன் அட்ரசைக் கேட்டாலும், கன்னாபின்னான்னு திட்றானுங்க. இந்த வீட்டைக் கண்டு பிடிக்கறதுக்குள்ளே ஒரு நடை கன்யாகுமரி வரைக்கும் போய் தேர்தல் பிரசாரம் செய்துடலாம்!"

''நல்ல தூக்கத்திலே எழுப்பினதுக்கு உன்னை அடிக்காமல் விட்டதே பெரிசு."

"அபுதாபியிலிருந்து போன வாரம் வந்தேன். நாளைக்கே சிங்கப்பூர். வேறெ கம்பெனி. வேறெ வேலை."

"இதைச் சொல்ல ஒரு கார்டு போதும்!"


"அதுக்கெல்லாம் நேரமே இல்லை. உன்னால எனக்கொரு காரியம் ஆகணும்."

"என்னாாாாவ்" தூக்கம் அலைக்கழித்தது.

"தெரியாத்தனமா பெசன்ட் நகர்லே டபுள் பெட்ரூம் பிளாட் வாங்கிட்டேன். அதை வாடகைக்கு விட மனசில்லை. பத்து லட்சத்து சொச்சம்."

"என்னை வாங்கிக்கச் சொல்றியா?"

"பயப்படாதே. நீ அங்கே குடியிருந்தாப் போறும். அட்டகாச வசதி. மொட்டை



சுருக் நறுக் - 24 - முடிவுகள்

கீழ்க்கண்ட சொல்லோவியங்கள் தலா ரூ. 50/- பரிசு பெறுகின்றன.

பொறுமை என்பது....

- புத்திசாலியின் முதல் ஆயுதம்.
  - எஸ். பாலசுப்ரமணியன், நாகல்நகர்.
- விதியை வெல்ல உதவும் உயர்ந்த தவம்!
  - கே. வெங்கடேசன், தோட்டப்பாளையம்.
- முயற்சிக்கும் வெற்றிக்கும் இடைப்பட்ட காலம்.
  - அ. சுகுமார், காட்டுக்காநூர்.
- லட்சியம் என்ற சிகரம் ஏற முதல் படி.
  - சி. நடராஜன், பவித்திரமாணிக்கம்.
- பிறரிடம் எதிர்பார்ப்பது; ஆனால், நம்மிடம் இல்லாதது!
  - லட்சுமி ஹரிஹரன், நெல்லை - 7.
- ராஜதந்திரியின் பிரும்மாஸ்திரம்.
  - எஸ். நாராயணசர்மா, சென்னை - 84.
- ஒருநாள் 'ஸ்ரீதேவி' ஆகப் போகும் கனவில், குரூப் டான்ஸ் ஆடிக் கொண்டிருக்கும் துணை நடிகையின் மனநிலை.
  - எஸ். சிவன், நாகர்கோவில்-1.
- மகிழ்ச்சிக் கதவைத் திறக்கும் சாவி!
  - எஸ். ரங்கநாதன், திருஇந்தளூர்.

மாடிலே நின்னா பீச். பதினைஞ்சு கி.மீ. தூரத்திலே ஏர்-போர்ட்."

"வெறுப்பேற்றாதே. சிட்டியிலே வாடகை கொடுத்து மாளாமல்தான் வாழ்க்கையின் ஓரத்துக்கே குடி வந்தேன்."

"நீ வாடகையா நூறு கொடுத்தா போறும். வீட்டை பத்திரமா கவனிக்கறதுதான் எனக்கு முக்கியம்."

"யாருக்காவது வாடகைக்கு விட்டுடறேன்.."

"அண்ணி முன்னாலே இங்கிலீஷ்லே என்னைத் திட்ட வைக்காதே. இந்தா சாவி. இதிலே அட்ரஸ். மற்ற விவரங்களைத் தந்தியிலே சொல்றேன். உன் பேருக்குத் தந்தி வந்தால் பயப்படாதே. கிளம்பட்டுமா?"

ஆட்டோ கிளம்பின பிறகு யோசிக்க ஆரம்பித்தான் சுப்பு.

இங்கே எத்தனை அசௌகரியங்கள்!

அதிகாலை நாலு மணிக்கே விழித்தால் தான் ஒன்பது மணி ஆபீசுக்கு 'மெமோ' வாங்காமல் போக முடியும். மறுபடி வீடு திரும்பும் போது 'இத்துடன் இன்றைய ஒளிபரப்பு நிறைவடைகிறது' ஒலிக்கும். ஆகவே...

பெசென்ட் நகர் ஃப்ளாட்.

தூக்கம் வராமல் படுத்துக் கொண்டிருந்தான் சுப்பு. மின்சார ரெயிலின் 'குடங் குடங் கடங் கடங்' தாலாட்டில் கண்ணயர்ந்தவனுக்கு இங்கே நிசப்தத்தில் தூக்கமே வரவில்லை! முதல் மாதம் ஜாலியாய், ஜோராய் சந்தோஷமாய்க் கழிந்தது. அடுத்த மாதத்தின் முதல் நாள் ஏழு மணிக்குக் கதவும் காலிங் பெல்லும் அலறின. திறந்ததும்–

ஒரு குயர் நோட்டு புக் நீட்டப்பட்டது.

'கோயில் டொனேஷனா?"

"மிஸ்டர், இது மெயின்டெனன்ஸ் புக். இந்த ஃப்ளாட் பராமரிப்புக்காக ஒவ்வொருத்தரும் ஐந்நூறு ரூபாய் தரணும்."

"என்ன! ஐந்நூறா? பராமரிப்புக்கா?"- சுப்புவின் ஹார்ட்-லங்க்ஸ்-லிவர்-கிட்னி என்று சகலத்திலும் மாசிவ் அட்டாக்!

"இதுலே என்னென்ன செலவு செய்வீங்க?"

"காமன் லைட் பில் – மோட்டார் பம்ப் மெயின்டெனன்ஸ், தண்ணீர்..."

வாத்சாயினி விவகாரத்தை வளர விடாமல் ஐந்து நூறை கொண்டு வந்து நீட்டினாள். கதவை சாத்தினதும்–

"வாத்ஸ்த்து! நல்லா வந்து மாட்டிக்கிட்டோம்!"

அடுத்த லீலையில் வெஸ்ட் இன்டியன் மாதிரி கருப்பாய், புஷ்டியாய் ஒருவர் வந்தார். "சுப்பிரமணிங்கறது யாருங்க?"

"யெஸ்?" என்றான் ஆங்கில பந்தாவோடு.

"இந்தாங்க கேட் சாவி. இனி ஒரு வாரத்துக்கு ராத்திரியிலே நீங்கதான் கேட்டைப் பூட்டி, காலையிலே பால் வறதுக்கு முன்னே திறக்கணும்."

"அது.." என்று அவன் மரமண்டைக்குள் ஏறுவதற்குள் சாவியை வீசி விட்டு மறைந்து விட்டார். மொத்தம் மூன்று கேட். மூன்று சாவியும் ஒரே மாதிரி இருந்தன.

அக்கம் பக்கம் விசாரித்ததில் இரவு பத்து மணிக்கு அலிபாபா குகையைப் பூட்டி, காலை நாலரைக்குத் திறப்பது வழக்கமாம்.

முதல் நாள் சரியாய்ப் பத்து மணிக்கு கேட்டைப் பூட்டக் கிளம்பினான். சரியான சாவியைக் கண்டுபிடித்து துருப்பிடித்த கேட்டை இழுத்து, பூட்டுவதற்குள் இரவு சாப்பிட்ட சப்பாத்தி குருமா செரித்துவிட்டது. கடைசி கேட்டைப் பூட்டி விட்டுத் திரும்பும் போது–

"அடடா! அதுக்குள்ளே பூட்டியாச்சா?"

மூன்றாம் நம்பர் ப்ரியா. கண்ணாபின்னா மாக்சியில்.

"எனி ப்ராப்ளம்?"


"என் கஸின் பம்பாயிலிருந்து வரா. கூட்டிட்டு வர அவர் போயிருக்கார். பதினொரு மணிக்குப் பூட்டலாமே?"

'அவர் கிட்டே சாவி இல்லையா?' என்று கேட்டு சண்டை பிடிக்காமல் பசு மாதிரி தலையாட்டினான்.

பதினொரு மணி வரை தூக்கத்தைக் கட்டுப்படுத்தி, மறுபடி கேட்டைப் பூட்டி, திரும்பும் போது, முதல் கேட்டில் 'டொக் டொக்' என்று அழைப்பு கேட்டது.

ஐந்தாவது ப்ளாட் சாரி. உடன் ஒரு நண்பர். மறுபடி திறந்தான்.





தனாகர்ஷண எந்திரங்கள்/சக்கரங்கள்

சர்வசக்தி வாய்ந்த முறைபடி தயாரிக்கப்பட்ட இந்த எந்திரங்கள் தங்கள் இஷ்ட சித்தியை உடன் பூர்த்தி செய்கின்றன. செல்வ சூழலை ஏற் படுத்துகின்றன. ஜோதிட ஆகம சாஸ்திர முறையில் தயாரிக்கப்படும் இந்த எந்திரங்கள்/சக்கரங்களுக்கு உலகளவில் பெரும் ஆதரவு ஏற் பட்டுள்ளது.

உங்கள் தேவைக்கு உடன் எழுதி பயன் பெறுங்கள்.

	ரக்ஷை ரூ.	எந்திரம் ரூ.
1. திடீர் லாபம் குபேர தனாகர்ஷணம்	1000/-	1500/-
2. வியாபாரம் ஜனாகர்ஷணம்	1000/-	1500/-
3. திருமணம் ஸ்வயம்வரா	750/-	1250/-
4. புத்ரபாக்யம் சந்தான கோபாலம்	750/-	1250/-
5. கல்வி அபிவிருத்தி வாகீஸ்வரி	750/-	1500/-
6. சத்ரு உபாதை நிவர்த்தி மகாசூலினி	750/-	1500/-
7. நோய்திருஷ்டி தோஷ நிவர்த்தி தன்வந்திரி	750/-	1500/-
8. அதிகாரி வச்யம் ப்ரத்யங்கிரா	1000/-	1500/-
9. ஸகல க்ஷேம அபிவிருத்தி மகா சுதர்சனம்	750/-	1500/-
10. மஹாலக்ஷ்மி ஸ்ரீ சக்ரா டாலர்	200/-	1500/-

தங்கள் பெயர், நக்ஷத்திரம் தெளிவான விலாசத்துடன் MO/DD SWAYAMVARALAYA (ஸ்வயம்வராலயா) பெயரில் சென்னையில் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். வெளிநாட்டு அன்பர்கள் 100% கூடுதல் தொகை அனுப்பி பெற்றுக் கொள்ளவும். அதிகச் சக்தி வாய்ந்த (SUPER POTENCY) ரக்ஷை/எந்திரங்கள் விலை விபரம் தனியாகத் தெரிந்து கொள்ளவும்.

ஸ்வயம்வராலயா (GOVT.REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை – 33. போன் : 425822, 4846427

கிளைகள் :

7A, சாந்தி விஹார் காம்ப்ளெக்ஸ், லஸ், மயிலாப்பூர், சென்னை – 4. Ph: 846278

88,1, 16–வது கிராஸ், 6–வது மெயின், மல்லேஸ்வரம், பெங்களூர்–55. Ph: 3340146

CONSULT DIVINE ASTROLOGER THETIYUR V MAHADEVAN
WITH PRIOR APPOINTMENT

"மிஸ்டர் சுப்பு, இவர் என் பிரெண்ட். இவருக்கு டின்னர் என் வீட்லே. சாப்பிட்டுக் கிளம்பினதும் பூட்டிடுங்க. ஏன்னா நான் பூட்டும் நிலையில் இல்லை" ஆல்கஹால் மணந்தது. 'பதினொரு மணிக்கு டின்னர்!' பின்னர், முடியும் என்று காத்திருந்த சுப்பு தன்னையும் அறியாமல்... தூங்கி...

காலையில் சுப்பு வீட்டு முன் காட்டுக் கத்தல்கள் கேட்டன. கதவைத் திறந்தான்.

"மிஸ்டர் சுப்பு, பிளாட் செக்ரட்டரி, ராமகிருஷ்ணன் கூப்பிடறார்."

"இப்பத்தான் எழுந்தேன். காப்பி குடிச்சிட்டு..."

"கையோடு வாங்க. சூடா அவரே தருவார்."

ராமகிருஷ்ணனைப் பார்த்ததும் அவனது ஹெட்மாஸ்டர் கறார் கிருஷ்ணன் ஞாபகம் வந்தது. அடிபட்ட புலி மாதிரி இருந்தார்.

"நேத்து ராத்திரி கேட்டைப் பூட்டலையா?"

"அது வந்து...."

"இந்தா இதைப்படி. நான் ரிட்டையர்ட் ஐ.ஏ.எஸ். எனக்கு டிசிப்ளின் முக்கியம்" என்று சொல்லிவிட்டு, நடையைக் கட்டினார் ராமகிருஷ்ணன். சுப்பு, அவர் கொடுத்ததைப் படித்தான். சார்ஜ் மெமோ!

இவன் கேட்டைப் பூட்டாததால், திருடன் புகுந்தால் என்னாவதிலிருந்து ஆரம்பித்து, ஆங்கிலத்தில் கம்ப்யூட்டரில் டைப் செய்யப்பட்ட மெமோ!

தண்டனையும் உண்டு. 'இந்த மாசம் பூராவும் நீதான் கேட்டைப் பூட்ட வேண்டும்!"

ஒரு மாதத்தில் கேட்டைப் பூட்டித் திறப்பதில் டிப்ளமா வாங்கும் அளவு தேறினாலும், அந்த சார்ஜ் மெமோ ரணம் மட்டும் ஆறவே இல்லை. இதை நினைத்தபடி ஷவரில், முழு சோப்போடு குளித்தபடி...

டக்கென்று தண்ணீர் தெறிப்பது நின்றது. சோப்போடு–

"வாத்ஸ்க! பாணி பந்த் ஹோகயா" என்று ஹிந்தியில் கத்த, அவள் எரிந்து விழ, வெளி வந்து முதல் வேலையாக, ஷவரில் தண்ணீர் நின்று போனதன் காரணத்தைத் தேட ஆரம்பித்தான்.

எல்லா பிளாட்டிலும் வாஷ் பேசினில் தான் தண்ணீர் வராமலிருந்தது. கடைசி வரை போராடி ஏன் தண்ணீர் நின்றது என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியில் பிளம்பர்.

"சார், கண்டு பிடிச்சுட்டேன். இப்ப வருதா பாருங்க?"

"ஹூம். வருது. ஏன் திடீர்னு நின்னு போச்சு?'

"நூறு ரூபா கொடுங்க, சொல்றேன்."

தந்தான். பிளம்பர் பாக்கெட்டில் வைத்தபடி- "எவனோ, அந்த வால்வை மூடியிருக்காங்க. அந்த லைன் மற்ற வீட்டுக்கு வாஷ் பேசின்லே கொடுத்துட்டு, உங்களுக்கு மட்டும் ஷவர்லே..."

"அடப்பாவி! இதுக்கா நூறு ரூபா?"

"மெக்கானஸ் கோல்ட் மாதிரி, மொட்டை மாடியிலே அந்த வால்வை கண்டுபிடிக்க நான் பட்ட பாடு எனக்குத்தானே தெரியும்!"

உடனே வேகமாய் கிளம்பினான் சுப்பு.

"எங்கே கிளம்பிட்டீங்க?"

இனி தாங்க முடியாது வாஸ்து. இப்பவே எஸ்.டி.டி.யிலே ஜெயராமனோடு பேசறேன்."

உடனே மாட்டினான் ஜெயராமன். கொட்டித் தீர்த்தான்.

"அடேய் ஜெயராமா! வகையா மாட்டிக் கிட்டேன். ஒண்ணா ரெண்டா, தினம் தினம் ப்ராப்ளம். எல்லாம் எனக்கே..."

"என்ன ஆச்சு?"

"டிரெயினேஜ் பிளாக் ஆன கதையைச் சொன்னா குமட்டும். அதைச் சரி செய்ய ஒரு வாரம் ஆச்சு! படிக்கட்டுலேயே ஏற முடியலை. டார்ஜான் மாதிரி பக்கத்து பிளாட்டிலிருந்து பாய்ந்துதான் வீட்டுக்குள்ளேயே நுழைய முடிஞ்சது..."

"இதெல்லாம் ஒரு பிரச்னையா?"

"வேலைக்காரியை வச்சுக்காத என்னை எத்தனை கேவலமா பார்த்தாங்க தெரியுமா? சரி, வீட்டைத் துடைக்க வைக்கலாம்னு விசாரிச்சேன்."

"ஒத்துக்கிட்டாளா?"

"பேசிக் சம்பளம், கூடவே அகவிலைப்படி, வீட்டு வாடகை, படின்னு பேரம் பேசறா! இங்கிலீஷ் பேசற ஒரே வேலைக்காரி இந்தியாவிலேயே இவதான்டா."

"சரி இப்ப என்ன முடிவு செய்தே?"

"முடிவு செய்ய வேண்டியது நீதான். நான் நாளைக்கே மடிநகருக்குப் போயிடப்போறேன். நமக்கெல்லாம் ஃப்ளாட் சரிப்படாது."

"டேய், நான் உன் உயிர் நண்பனில்லையா? எனக்கு உதவறது உன் கடமை இல்லையா? ஃப்ளாட்டை வாடகைக்கு விட்டா, நாரடிச்சுடுவாங்க. பூட்டி வெச்சா முனி குடி வந்துடும்."

"நாசமாப் போகட்டும். ஆளைவிடு."

பட்டென்று போனை வைத்து விட்டு வீட்டுக்கு வந்தான்.

வாத்ஸாயினி வாசலிலேயே காத்திருந்தாள்.

"ஸாரிங்க.. இந்த வீட்டை நாம காலி பண்றதா இல்லை..."

"என்ன சொல்றே நீ!"

"ஆமாம். இந்த வீடு ரொம்ப ராசி."


"நாசமாப்போச்சு. நூறு நூறா கைவிட்டுப் போறதுதான் ராசியா?"

"இனிமே நூறு நூறாப் போகாது. ஆயிரம் ஆயிரமாத்தான்!"

"என்னது?"

செல்லமாகக் கன்னத்தைக் கிள்ளி, இல்லாத நாணத்துடன் காதோடு சொன்னாள்:

"நான் உண்டாயிருக்கேன்."



அமுல் நிறுவனத்திலிருந்து குறைந்த கொழுப்புச் சத்துள்ள வெண்ணெய் வெளிவந்து 'அங்கும் இங்குமாக'க் கிடைக்கிறது.

வெண்ணெய் என்றாலே கொழுப்பு. அப்புறம் அதென்ன 'குறைந்த கொழுப்பு'?

இதைப் பற்றி குஜராத் கூட்டுறவு பால் விநியோக சங்கம்— அதாங்க 'அமுல்'— தென் மண்டல விற்பனை அதிகாரி எஸ்.கே. குல்கர்னியிடம் கேட்டபோது சொன்னார்:

கொழுப்பு குறைச்சல்!

"அமுல் லைட் என்ற பெயரில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் இந்த பிரெட் ஸ்பிரெட் (Bread Spread) லோ ஃபேட்-லோ கொலெஸ்ட்ரால் என்று தான் வெளியிடப்பட்டுள்ளது.

சாதாரண வெண்ணெயில் எண்பது சதவீதம் முழுக்கப் பால் கொழுப்புதான். இந்த அமுல் லைட்டில் பத்து சதவீதம் பால் கொழுப்பும் நாற்பத்தொன்பது சதவீதம் வெஜிடெபிள் ஆயிலும் உள்ளதால் இதைக் 'குறைந்த கொழுப்பு' என்கிறோம்!"

"இத்தனை நாள் இல்லாமல் திடுதிப்பென்று இப்போ அறிமுகப்படுத்தப்பட வேண்டிய அவசியம் என்ன?"

"இந்த அமுல் லைட் வட இந்தியாவில் ஒரு வருடமாகவே பிரபலம். தெற்கில் ஆறு மாதங்களாகத்தான் உலவி வருகிறது. இதை வெளியிட்டதன் காரணம், மக்களின் உணவு உண்ணும் முறையில் ஏற்பட்டுள்ள நல்ல மாற்றம்தான்! சத்தாகவும் இருக்க வேண்டும்; ஆரோக்யமானதாகவும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இது போக, வெளிநாட்டிலிருந்து படையெடுத்து வரும் உணவு வகைகள் தொண்ணூற்றொன்பது சதவீதம் கொழுப்பில்லாதது என்று அறிமுகம் செய்து கொண்டிருக்கும் போது நாமும் அந்தப் போட்டியைச் சமாளிக்க ஏதாவது செய்ய வேண்டாமா? அதான்!"

"தென்னாட்டில் அறிமுகம் செய்ய ஏன் இத்தனை தாமதம்?"

"தெற்கில் வெண்ணெயைப் பெரும்பாலும் நெய்யாகத்தான் உபயோகிக்கிறார்கள். வட நாட்டவர் போல சப்பாத்தி-பரோட்டா-பாவ்பாஜிக்கெல்லாம் உபயோகிப்பதில்லை. சில வருடங்களாகத்தான் வட நாட்டு உணவுகள் இங்கே பிரபலமாகியுள்ளன. பதப்படுத்தப்பட்ட வெண்ணெய் உபயோகமும் அதிகரித்துள்ளது."

"இந்த அமுல் லைட்டிலிருந்து நெய் எடுக்க முடியுமா?"

"முடியவே முடியாது. இதில் பத்து சதவீதம்தான் பால் கொழுப்பு. வெஜிடபிள் ஆயில் அளவு அதிகம் என்பதால், நெய் வடிக்க முடியாது. மற்றபடி இந்த அமுல் லைட்டை சமையலுக்கு தைரியமாகப் பயன்படுத்தலாம். இதில் உப்பு கொஞ்சம் சேர்க்கப்படுவதால், சமையலில் அந்த அளவு உப்பைக் குறைக்க வேண்டும்."

"கொழுப்பு குறைவாக இருப்பதால், ருசி குறையாதா?"

"ஊஹூம்! சாதாரண வெண்ணெயில் 'க்ரீமி டேஸ்ட்' கிடைக்கும். இதில் கொஞ்சம் குறைந்த 'க்ரீமி டேஸ்ட்'. அதுதான் வித்தியாசம். மற்றபடி சாதாரண வெண்ணெய் கிலோ நூற்றுஆறு ரூபாய்க்கும், இது கிலோ எழுபத்தைந்து ரூபாய்க்கும் கிடைக்கிறது."

"அமுல் லைட்டில் உள்ள பத்து சதவீதம் கொழுப்பையும் எடுத்துவிட முடியாதா?"

"அதையும் எடுத்து விட்டால், வெறும் வெஜிடபிள் ஆயில்தான் மிஞ்சும். அதை பிரெட் ஸ்பிரெட்டாக உபயோகிக்க முடியுமா?"

"இது எத்தனை நாள் தாங்கும்?"

"பிரிக்கப்பட்ட பாக்கெட், ஒழுங்காய் குளிர்சாதனப்பெட்டிக்குள் வைக்கப்பட்டால், மூன்று மாதம் தாராளமாகத் தாங்கும்!"

"இதை எப்போதும் குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் இதன் குறையா?"

"இதைக் குறை என்று சொல்ல முடியாது. இதன் குணம் அப்படி."

"இந்த வெண்ணெயை டாக்டர்கள் பரிந்துரைக்கிறார்களா?"

"இனிமேல்தான் டாக்டர்களிடம் பேசிப் பார்க்க வேண்டும்."

-அஷோக்




• குல்கர்னி

அ.தி.மு.க., தி.மு.க. கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளை மக்கள் சிவில் உரிமைக் கழக (பி.யூ.சி.எல்) இணைச் செயலர், வழக்கறிஞர் டாக்டர் வி. சுரேஷ் அலசுகிறார்:

அ.தி.மு.க.வின் அறிக்கையைப் படித்தால், ஏதோ சொர்க்க பூமியையே தமிழகத்தில் கொண்டு வந்து விடுவார்கள் போல ஒரு பிரமையை உண்டாக்கி இருக்கிறார்கள்.

பாசனப் பகுதிகளை மேம்படுத்த உலக வங்கி உதவியுடன் 1100 கோடி ரூபாய்ச்



• கலவரம் தவிர்க்க என்ன ஐடியா?

செலவில் திட்டம்;

உலக வங்கி உதவியுடன் 1000 கோடி ரூபாயில் சாலை மேம்பாட்டுத் திட்டம்;

1700 கோடி ரூபாயில் உலக வங்கி உதவியுடன் புதிய வீராணம் திட்டம்–

என்று அடுக்கிக் கொண்டே போகிறார்களே தவிர, திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு எங்கிருந்து வரும் என்று எதுவுமே குறிப்பிடவில்லை! 'உலக வங்கி உதவியுடன்' என்று குறிப்பிட்டால் போதுமா? உலக வங்கி, இவர்கள் கேட்டபோது எல்லாம் வாரி வாரிக் கொடுத்து விடுமா?

காவிரி நீர் விஷயத்தில், மைய அரசு ஒரு நிபுணர் குழுவை அமைத்து ஆராயவும், தென் மாநிலங்களுக் கிடையிலான நதிகளை இணைக்கும் முயற்சிக்கு முன்னுரிமை வழங்கவும் மத்திய அரசை வற்புறுத்துவோம் என்கிறது அறிக்கை. சேது சமுத்திர கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றவும் மைய அரசை வற்புறுத்துவார்களாம். வற்புறுத்தல்களை எல்லாம் வாக்குறுதிகளாக எப்படி எடுத்துக் கொள்ளுவது? மாநில அரசு சொல்லி, மத்திய அரசு தலையாட்டி, இதுவரை என்ன நடந்திருக்கிறது?

கலப்புப் பயிர்த் தொழில், வறட்சிப் பயிர்த் தொழில், சொட்டு நீர்ப்பாசனம், ஈரக்கட்டுப்பாடு, நீர் கொள்முதல் மேம்பாடு, அனுமாற்றப் பயிர்த் தொழில் என்று ஒரே படியாக விஞ்ஞானச் சொற்றொடர்களை அடுக்கி விட்டு, விஞ்ஞான யுக்திகளுக்கு முதன்மை தந்து உழவர் பெருமக்களைப் பெரிய அளவில் ஈடுபடுத்திப் பயிற்சி அளிப்பார்களாம்! சரியான கதையாக இருக்கிறது. இந்த ஐந்து வருடங்களில் இதில் எதையாவது செய்தார்களா?

ஹாலந்து, டென்மார்க், இஸ்ரேல் ஆகிய மூன்று நாடுகளிலும் உள்ள செயல்பாடுகளை ஆராய்ந்து வேளாண் பெருமக்களுக்கு அத்தகைய வாய்ப்புக்களை உருவாக்கித் தருவார்களாம். அ.தி.மு.க. அமைச்சர்களும், அதிகாரிகளும் இந்த நாடுகளுக்கெல்லாம் மக்கள் வரிப்பணத்தைச் செலவு செய்து, போய் வருவதோடு இது நின்றுபோய் விடும்!

'ஜெயலலிதாவின் சீரிய முயற்சி' காரணமாக உணவு உற்பத்தி ஒரு கோடி டன்னாக உயர்ந்திருக்கிறதாம். அப்படியானால் 40 சதவிகித மக்களுக்கு மேல் உண்ண உணவின்றி வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழுகின்ற நிலைமை ஏன்? இங்கு உற்பத்தியாகிற உணவு தானியம் யாருக்குப் போகிறது?

அரசு ஊழியரின் குழந்தைகளுக்கு இந்தியாவில் 'வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு' திருச்சியில் கல்லூரி வளாகம் அமைத்து, அதில் கலைக் கல்லூரி, பாலிடெக்னிக், மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி எல்லாம் அமையப் போகின்றனவாம். ஒரு கல்லூரி ஆரம்பிக்கவே திதிங்கிணதோம் போட வேண்டிய நிலையில், கல்லூரிகள் வளாகமே அமைக்கப் போவதாகச் சொல்லுவது காது குத்துகிற வேலைதான்.

இட ஒதுக்கீட்டில் ஐம்பது சதவிகிதம் அமலாக்கப்படும் என்று வெளிப்படையாக ஒப்புக் கொண் டிருக்கிறார்கள்! இதுவரை சொல்லி வந்த 69 சத வீதம் எல்லாம் காற்றோடு போய் விட்டது! சமூகநீதி காத்த வீராங்கனை அல்லவா!

உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்துவது குறித்து மூச்சு விடவில்லை! தமிழக காவல்துறை, ஸ்காட்லண்டு யார்டு காவல் துறையின் தரத்தை எய்தவும், அவர்களுக்கு ஒப்பாகப் பணியாற்றவும் செய்வது லட்சியமாம். இதுதான் மிகப்பெரிய ஜோக்! தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி விட்டோம் என்று வேறு தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். தென் மாநிலக் கலவரங்களுக்குப் பிறகும், சென்னை நகரிலேயே அவ்வப்போது நடக்கும் குத்து வெட்டுக்களுக்குப் பிறகும், இதை யாராவது நம்புவார்களா?

தி.மு.க.வின் அறிக்கை 'நிலாவைப் பிடித்துக் கையில் கொடுத்து விடுவோம்' என்று சொல்லுகிற மாதிரி இல்லை. கொஞ்சம் யதார்த்தமாகவே தயாரிக்கப்பட்டிருக்கிறது.

‘வானத்தை வில்லாய் வளைப்போம்!’

ஆனால், ஊழல்-லஞ்சக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான வாரியத் தலைவர்கள், அமைச்சர்கள்- முதலமைச்சர் உட்பட- விசாரிக்கப்படுகிற ஆம் புட்ஸ்மன் அமைப்பு நிறுவப்படும் என்று சொல்லி யிருக்கிறார்களே தவிர, எந்தெந்தத் துறைகளில் ஊழல் மிகுந்து இருக்கிறதோ அவற்றைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டி, இவற்றில் லஞ்சம் நிச்சயமாக ஒழிக்கப்படும் என்று அறிவிக்க வேண்டாமா? வேலை மாற்றங்களில், சான்றிதழ் வழங்கும் துறைகளில், கூட்டுறவுத் துறை வங்கி வேலை வாய்ப்புகளில்- என்று



• தமிழகத்தில் சொர்க்க பூமி?

குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால் பாராட்டலாம்.

மேலவையை மறுபடி அமைப்போம் என்கிறது தி.மு.க. அறிக்கை. அரசியல் காரணங்களுக்காக அல்லா மல், ஆத்திரத்தில் தன்னிச்சையாக அ.தி.மு.க.வினால், அவசரமாகக் கலைக்கப்பட்டது மேலவை. மக்கள் மத்தியில் விவாதமோ, சட்டசபையில் விவாதமோ எதுவுமின்றி எடுக்கப்பட்ட இந்த முடிவை, அதே போல மறுபடி உயிர்ப்பிக்கவும் அவசர அவசரமாக முடிவு எடுப்பது தவறு. மக்கள் இது பற்றிய அவசியத்தை உணரட்டும். பிறகு கருத்துத் தெரிவிக்கட்டும். இல்லை என்றால், வேண்டியவர்களுக்கு சீட் கொடுக்க என்றே இந்தச் சபை உயிர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

போலீஸ் அத்துமீறல்கள் தமிழ்நாட்டில் அதிகமாக வளர்ந்துவிட்டது. இதற்குப் பின்னணி யில் அரசியல் வாதிகள் இருக்கிறார்கள். ஜனநாயக உரிமைகளையே நசுக்கிவிடும் அளவுக்கு இவை இருந்து வந்திருக்கின்றன. தி.மு.க.வே இதில் சிக்கித் தவித்திருக்கிறது. அப்படி இருந்தும் கூட, இந்த அறிக்கையில் இதுபற்றி ஒருவரிகூட இல்லாதது ஏமாற்றம்.

69 சதவிகித இட ஒதுக்கீடு செய்ய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அறிவித்திருக்கிறது. இது அ.தி.மு.க. அறிக்கையிலிருந்து துல்லியமாக மாறுபட்டு இருக்கிறது.

சாதிக் கலவரங்களை யார் தூண்டிவிட்டாலும், பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். நிரந்தரமாகக் கலவரங்களைத் தடுத்து ஒடுக்க என்ன நடவடிக்கை என்று சொல்லி இருக்க வேண்டும்.

இவைதவிர, பொதுவாக இரண்டு அறிக்கைகளிலுமே, பற்றாக்குறை பட்ஜெட் பற்றியோ, தொழில் திட்டங்களுக்கு அறிவுபூர்வமான, திட்டவட்ட ஆலோசனைகளோ இல்லவே இல்லை.

மாநில அரசுகளின் வெட்டிச் செலவுகள் எந்தெந்த வகைகளில் குறைக்கப்படலாம் என்று ஒரு வரிகூட இல்லை.

உலக வங்கிக் கடன் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறதே, எப்படி திரும்பக் கொடுப்பது என்று ஏதேனும் சொல்லியிருக்கிறார்களா?

ஆயிரக் கணக்கில் வேலை வாய்ப்பு உருவாக்கு வதாகச் சொல்லியிருக்கிறார்களே- பணம் எங்கிருந்து வரும் இதற்கெல்லாம்? வானத்திலிருந்து கொட்டுமா?

பெண்கள் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, 30 சதவிகித இட ஒதுக்கீட்டுக்குப் பல மாநிலங்கள் சட்ட வடிவம் கொடுத்திருக்கின்றன. பெண்கள் முன்னேற்றம் பற்றியும், சம உரிமை பற்றியும் பேசி வரும் கழகங்கள் இரண்டுமே, இது விஷயத்தில் தமது அறிக்கைகளில் எதுவுமே குறிப்பிடாதது வியப்பைத் தருகிறது.

உள்ளாட்சி அமைப்புக்கான தேர்தல் அறிவிப்பு, முதல் சட்டமன்றத் தொடரிலேயே அறிவிக்கப்படும் என்று பொறுப்புடன் சொல்லியிருப்பதை வர வேற்க லாம்.

தொகுப்பு: **சாருகேசி**

வாரி வழங்கப்படும் வாக்குறுதிகள்!



• பொறுத்திருந்தால் புரியும்!

● பொன் குமார், சேலம் – 6.

? சோ, கருணாநிதியைத் திடீரென ஆதரிப்பதன் காரணம் என்ன...?

! வரலாறு காணாத ஊழல் – அராஜக ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்ற (one point programme தான்) ஒரே நோக்கம்தான்!

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? அ.தி.மு.க. – காங். கூட்டணியை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்த குமரிஅனந்தன், திடீரென்று இக் கூட்டணியை ஆதரித்ததன் ரகசியம் என்ன?

! 'பெட்டி' + தொடைநடுங்கித்தனம் = முட்டாள்தன முடிவு.

● என். உஷா தேவி, மதுரை – 9.

? தேர்தல் பிரசாரத்தின் போது கோஷம் எழுப்ப சிறுவர்களைப் பயன்படுத்துவது முறைதானா? அவர்களுக்கு அரசியலைப் பற்றி என்ன தெரியும்!

! முறையல்லதான். குழந்தைகளின் நேரத்தையும் சக்தியையும் இப்படி வீணடிக்கக் கூடாது... அரசியல் பற்றி அவர்களுக்குத் தெரியாது என்பதும் உண்மைதான். ஆனால் நம் அரசியல்வாதிகளுக்கே அரசியல் தெரியவில்லையே!

● பாளை பசும்பொன், மகாராஜாநகர்.

? தலித் இலக்கியம் தலித்துகளால் மட்டுமே எழுதப்பட வேண்டும் என்று சிவகாமி ஐ.ஏ.எஸ். கூறியுள்ளாரே?

! 'அவற்றை தலித்கள் மட்டும்தான் படிக்க வேண்டும்; ஏனெனில் மற்றவர்களுக்கு அந்த உணர்வுகள் புரியாது' என்று சொல்லாமல் விட்டதற்கு நன்றி!

● என். ஜெயராமச்சந்திரன், கோவில்பட்டி.

? அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில், 'தமிழகத்தைக் கலையுலகமாக மாற்றுவோம்; அப்படிச் செய்வோம் – இப்படிச் செய்வோம்...' என்றெல்லாம் கூறுகிறார்களே தவிர, 'ஊழலற்ற ஆட்சியைத் தருவோம்' என்று வாய் திறக்கவில்லையே...?

! முடியாததை எப்படி ஐயா சொல்லுவார்கள்!

● சி.கொ.தி. முருகேசன், கோபி.

? ரேவதியின் திடீர் தேர்தல் பிரவேசம் குறித்து...?

! பப்ளிசிடி என்பது சினிமா துறையினருக்கு சுவாசக் காற்று மாதிரி... ஆனால் ரேவதி பப்ளிசிடிக்காக மட்டுமே இப்படி நடந்து கொண்டாரா, அல்லது அவருக்கு உண்மையிலேயே சமூக நலனில் அக்கறை உள்ளதா என்பது தேர்தலுக்குப் பிறகு அவர் நடந்து கொள்ளும் விதத்தில்தான் புரியும்.

● வி. சத்தியப்ரியன், சென்னை – 15.

? மத்தியில் ராவும் மாநிலத்தில் ஜெவும் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் என்னவாகும்?

! தேசத்தின் செல்வங்கள் சுரண்டப்படும்; நாடு திவாலாகும்!

● டி.வி.எஸ். பாலு, சித்தமல்லி.

? பா.ம.க. என்ன செய்யப் போகிறது?

! அழுதுகொண்டே வோட்டுப் பிரித்த 'புண்

ஜெ. எதிர்க்கட்சித் தலைவரானால்?

ணியத்தைக் கட்டிக் கொள்ளப் போகிறது!

● ஆர்.என். செழியன், சென்னை - 41.

? ஜெயலலிதா ஒரு சிறந்த எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றுவாரா?

! கடந்த கால அனுபவம், அதற்கும் அவர் லாயக்கு இல்லை என்றே உணர்த்துகிறது.

● செ. மலர்விழி, மதுரை - 10.

? ஆண்கள் மீண்டும் காதில் கடுக்கன் போட ஆரம்பித்திருக்கிறார்களே?

! எப்படியும் அரசியல்வாதிகள் காது குத்தத் தான் போகிறார்கள்... அதற்கு நாமே குத்திக் கொண்டு விடலாம் என்று முடிவு பண்ணி விட்டார்கள் போலும்.

● மல்லிகை மன்னன், மதுரை - 14.

? 'புரட்சித் தலைவி ஒரு கழுதையை வேட்பாளராக நிறுத்தினாலும் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்' என்கிறாரே மதுசூதனன்?

! வாய்ப்புக் கிடைக்காத வயிற்றெரிச்சல், வாய்ப்புக் கிடைத்தவர்களை இப்படி திட்ட வைக்கிறது!



• நன்றி!



• திடீர் முடிவு!




• ஒரே நோக்கம்!



• எதிர்க்கட்சித் தலைவியானால்?



• கழுதையானாவென்ன...?



• ரகசிய காரணம்!

● பாரதி முருகன், மணலூர்பேட்டை.

? கலை உலகம் கலைஞருக்கு விழா எடுப்பதைப் பற்றி...?

! கலை உலகில் 'டைமிங்' எப்போதுமே முக்கியத்துவம் பெற்றது. விழா எடுப்பதையும் 'டைமிங்' பார்த்துத்தான் செய்கிறார்கள்!

● ஆர். அஜிதா, கம்பம்.

? பிரதமர் திடீரென்று இரு தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்தது ஏன்?

! ஆந்திர அம்மகாருவின் ஆசி பெற்ற வேட்பாளர், ராவின் நந்தியால் வெற்றியைக் கேள்விக்குறியாக்கியிருக்கிறாரே... போதாக்குறைக்கு, கோடிமடத்துச் சாமியார் ஜோசியம் வேறு சொல்லியிருக்கிறார்!

● பாக்கியலட்சுமி சுகவனம், கோவை - 10.

? உலகக் கோப்பையைத் தவற விட்ட நம்மவர்கள் சிங்கர் கோப்பையையும் கோட்டை விட்டு விட்டார்களே?

! 'கிரிக்கெட்டில் - ஏன், எந்த ஆட்டத்திலும்தான் வெற்றி தோல்வி மாறி மாறித்தான் வரும்; முயற்சிதான் முக்கியம்' என்று சமாதானமடையலாம். ஆனால், மூன்றாவது பரிசுத் தொகையை வாங்கிக் கொள்வதற்கு ஒரு ஆள் கூட பாக்கி இல்லாமல், தோல்வி உறுதியானதும் அத்தனை பேரும் விமானம் ஏறி ஊர் திரும்பி விட்டார்களே! இது கிரிக்கெட் பண்பாடு அல்ல; வடிகட்டின அநாகரிகம்.

● எம். ரேவதி, மன்னார்குடி. ❑

? 'உதயசூரிய' நமஸ்காரம் செய்துவிட்டு, 'கை'யில் 'குடை'யைப் பிடித்துக் கொண்டு, 'சைக்கிளி'ல் சென்று 'இரட்டை இலை'க்கு வோட்டுப் போடப் போவதாக எனது உடன் பிறவா சகோதரி கூறுகிறாள். உமது பதில் என்ன?

! வெளிச்சம் தரும் சூரியனையும் நிழல் தரும் குடையையும் பயணத்துக்கு உதவும் சைக்கிளையும் மறக்கும் சுயநலமிகள் சிலராவது இருந்தால்தானே தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி என்பதாக ஒன்று தேர்தலுக்குப் பிறகு இருக்கும். அதற்காக நன்றி கூறுங்கள்!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
எம். ரேவதி,
23/1, அம்மையப்பா காலனி,
கீழ நான்காம் தெரு,
மன்னார்குடி - 614 001.

நீங்களே சொல்லித்தர வேண்டும்!

✉ அடிமட்டத் தொண்டர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் சந்தர்ப்பவாதக் கூட்டணி ஏற்படுத்திக் கொண்ட நரசிம்மராவ் போன்ற வில்லன்கள் இருக்கும் பட்சத்தில் மூப்பனார் போன்ற ஹீரோக்கள், மானத்தைக் காப்பாற்ற அவசியம் தேவை!

மணலூர்பேட்டை, கே. பாரதி.

✉ ஆட்சியில்தான் ஏராளமான ஊழல்கள் செய்து சாதனை படைத்தார் என்றால், வோட்டு வாங்குவதிலும் தம் தொகுதியில் ஏராளமான பணத்தை வாரி இரைத்து மக்களை விலைகொடுத்து வாங்கி விட்டார்! பாமர மக்களின் முன், "நடந்தே வந்து கையைப் பிடிக்கப் பேசி..." நடிக்கச் சொல்லியா தர வேண்டும், இந்த முன்னாள் நடிகைக்கு? பர்கூரில் ஜனங்கள் ஜெயலலிதா சிலையை வைத்து பூஜை புனஸ்காரங்கள் செய்யுமளவுக்கு வந்து விட்டார்களோ என்று பயப்பட வைக்கிறது உமது "தேர்தல் ரவுண்ட்-அப்".

கோவை - 30,
பலராம் செந்தில்நாதன்.

✉ தமிழ்நாட்டின் நலனையும் தமிழக மக்களின் நலனையும் கருதாமல், பதவி, பணம் மற்றும் தமது சுயநலத்திற்காக நாட்டையே குட்டிச்சுவராக்க நரசிம்மராவ் துணிந்து விட்டார் என்பதைத் தங்கள் தலையங்கம் 'நச்'சென்று உணர்த்தியது. இந்த இரு பெரும் ஊழல் சமுத்திரங்களின் கூட்டணியை மக்கள் மனம் வைத்தால் இருந்த சுவடு தெரியாமல் செய்துவிடலாம். ஊழலும் வன்முறையும் மலிந்து விட்ட இந்த அராஜக ஆட்சியை விரட்டி, ஒரு நல்லாட்சி அமையச் செய்ய, தமிழக மக்களுக்கு வாய்த்திருக்கும் அருமையான சந்தர்ப்பம் இது! இந்த அரிய சந்தர்ப்பத்தை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

தேவராயனேரி, தே. மு. கருணாநிதி.

✉ அடிமை புத்தி என்பது அரசியலுக்குப் புதிதல்ல! வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்திலேயே ஓர் அடிமை புத்தி கொண்ட எட்டப்பன் உருவாகவில்லையா? ஆக அவனது வழித் தோன்றல்கள்தாம் இன்றைய அடிமை புத்தி அரசியல்வாதிகளாகப் பரிணாம வளர்ச்சியடைந்து வருகிறார்கள்!

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

ரூ. 20. பரிசு பெறும் கடிதம்

✉ தலையங்கம் கண்டேன். ரஜினிகாந்த், "தேர்தலில் எந்தக் கட்சியும் என்னுடைய பெயரையோ, படங்களையோ உபயோகிக்கக் கூடாது" என்று அறிக்கை விட்டாலும் விட்டார்; பல தலைகள் ஜெயலலிதா எதிர்ப்பு முகமூடியைக் களைந்துவிட்டுத் தங்களுடைய சுயரூபத்தைக் காட்டிவிட்டன! 'கொள்கைகளோ, தொண்டர்களோ எங்களுக்குத் தேவையில்லை. எங்களுக்கு வேண்டியதெல்லாம் பணம், பதவி மட்டுமே' என்ற குணத்தை உடையவர்களை தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அடையாளம் காட்டியமைக்காக ரஜினிக்கு நன்றி சொல்வோம்.

மதுரை - 10, எல். முருகன்.

✉ கட்சித் தாவல், காலைவாரி விடுதல், புழுதி வாரி இறைத்தல், மீண்டும் சந்தனம் பூசுதல், வாக்கு மறத்தல் என்று என்னென்னவோ செய்யும் அரசியல்வாதிகளைக் கண்டு ஏற்கெனவே வயிறு எரிந்து கொண்டிருக்கிறோம். இதிலே நீர் வேறு அமெரிக்க அரசியல் 'நாகரிகம்' பற்றி எழுதி எண்ணெய் ஊற்றி விட்டீரே, நியாயமா?

திருநெல்வேலி - 11, எஸ். ஆர். ஸ்வாமி.

✉ 'ஆரோக்கிய அரசியல்' தலைப்பு இங்குள்ள அரசியலைப் பற்றிச் சொல்லாது என்று எங்களுக்குத் தெரியாதா? 'இங்கல்ல' என்று அடைப்புக் குறிகளுக்குள் வேறு குறிப்பிட வேண்டுமா, என்ன?

சென்னை - 14, அய்யாறு வாசுதேவன்.

✉ சுப்ரமணியன் ரவிச்சந்திரன் எழுதிய "சின்னக் கவலைகள்" சிறுகதை படித்தேன். கதையில் வரும் ஆதர்ஷ் என்கிற சிறுவனின் தாத்தாவிடமிருந்தான விலகல் தன்மை என்னை ரொம்பவும் பாதித்தது. நகர வாழ்வின் நிர்ப்பந்தங்களுக்கு அச்சிறுவன் தனது குழந்தைத்தனங்களைத் தியாகம் செய்தானா, இல்லை அது அவனின் மனரீதியிலான முன்னேற்றமா? சிந்திக்கத் தூண்டிய கதை.

மொரட்டுப்பாளையம்,
க. நா. இராஜேஸ்வரன்.

✉ மிக விஸ்தாரமான கவிதைத் துறையை, 'சுஜாதா' ஒரு 'கேப்ஸ்யூலாக' நுணுக்கித் தந்த வல்லமையை ரசித்தேன்.

நெய்வேலி - 1,
பா. சத்தியமோகன்.

✉ 'கனாக் கண்டேன் தோழி' கனவு போலவே சீக்கிரம் முடிந்து விட்டாலும் ரேணுகாவை அத்தனை சுலபத்தில் மறக்க முடியாது. வாழ்க்கை என்பது புரிதலும் தெளிதலும் என்பதை உன்னதமாக உணர்த்திய மினி தொடர்!

மேல்பட்டி, எல். மாறன்.

✉ 'கனாக் கண்டேன் தோழி' அருமையான குறுநாவல் - இல்லை - நெடுங்கதை - நீள் சிறுகதை. ஆகா, எத்துணை அருமை! எளிமையான படைப்பிலக்கியத்தில், ஆழமான கருத்தை, சம்பவச் சிறப்புகளுடன் அழகாக, கச்சிதமாகச் சொல்ல முடிகிற புதிய முறையை இந்த எழுத்தாளர் அறிமுகமாக்கியிருக்கிறார்.


ஸ்ரீபெரும்புதூர், க. பஞ்சாபகேசன்.

பொன் விளையும் பூமி

கூடுவாஞ்சேரி:

அவ்வை நகர் (1121/95)

ராஜாஜி நகர் (532/95)



ஃபோர்டு கார்
தொழிற்சாலை அருகே

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கூடுவாஞ்சேரியில் மதிப்பு வாய்ந்த வீட்டு மனைகளை உங்களுக்கு வழங்குகிறது டிஎல்வி. இந்நிறுவனம், இருபது ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு துறைகளில் தன் பெயரை நிலை நாட்டியுள்ளது.

மனைகளுக்கான பணம் செலுத்தும் போது வியப்பூட்டும் தள்ளுபடிகள் மற்றும் தங்கப் பரிசுகள் பெறலாம்.

15 தினங்களுக்குள் முழுத் தொகை - 11% தள்ளுபடி + 3 கிராம் தங்ககாசு.

30 தினங்களுக்குள் முழுத்தொகை - 10% தள்ளுபடி + 2 கிராம் தங்ககாசு

60 தினங்களுக்குள் முழுத்தொகை - 5% தள்ளுபடி + 1 கிராம் தங்ககாசு

180 தினங்களுக்குள் முழுத் தொகை - 25% மனைத் தொகை இரண்டு மாதங்களில். மீதி வட்டி இல்லாத தவணைகள்.

இலவசம். மனைக்கு செல்ல வாகன வசதி - காலை 6, 11 மணி. மாலை 3 மணி.

மேற்கொண்டு விபரமறிய எங்களை அணுகவும் :

டிஎல்வி ஹவுஸிங் & ஃபைனான்ஸ் (பி) லிமிடெட்,

54, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, புவனேஸ்வரி தியேட்டர் எதிரில், சென்னை - 600 007.

போன்: 5325311/12/13 ஃபேக்ஸ் : 5325363

20 ஆண்டுகளுக்கு மேலாக நன்மதிப்பை கட்டிக்காப்பவர்கள்.

நடராஜ் எஸ்டேட்ஸ்

வழங்கும்,

ஈடு இணையற்ற லாபகர திட்டம்

வாரம் தோறும் காய்கறிகள்

இல்லத்தரசிகளே !

உங்கள் வீடு தேடி வருகிறது எங்கள் பண்ணையில் விளையும் காய்கறிகள்

(சென்னை நகர வாசிகளுக்கு மட்டும்)

Ariya Perumpakkam Village,
(Survey No : 444/1 to 461/3D)



- ரூ. 5,000 செலுத்தி 3 வருடங்களுக்கு "மெம்பர்" ஆக வேண்டும்.
- 3 வருடங்களுக்குப் பிறகு "ரூ. 5000-ஐ" திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.
- அல்லது மேலும் 3 வருடங்களுக்கு "ரினிவல்" செய்து கொள்ளலாம்.
- உங்கள் மெம்பர்ஷிப் கட்டணத்துக்கு 12% வட்டியும் உண்டு.
- சப்ளை செய்யப்படும் காய்கறிகளுக்காக நீங்கள் தனியே பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.
- மெம்பர் ஆன தேதியிலிருந்து வாரா வாரம் கணிசமான அளவு காய்கறிகள் தொடர்ந்து சப்ளை செய்யப்படும்.

மெம்பர்ஷிப் கட்டணத்தை நேரிலோ, "செக்" மூலமாகவோ, டி.டி. ஆகவோ அளிக்கலாம்.

இலவசம்
உறுப்பினர் கார்டு, மற்றும் காய்கறி நறுக்கும் S.S. கட்டர்.



ஞாயிறு தோறும்
பசுமை நிறைந்த காய்கறி பைகளுடன் எங்கள் பிரதிநிதி உங்கள் வீட்டுக்கதவை இன்முகத்துடன் தட்டுவார்.

பூச்சிக் கொல்லி மருந்து, மற்றும் ரசாயன உரங்களை 99% தவிர்க்க முயற்சி செய்கிறோம். இயற்கை உரம் இடுவதால் உங்கள் உடல் நலம் முற்றிலும் பாதுகாக்கப்படுகிறது.

காய்கறி விபரம்

தக்காளி, வெண்டைக்காய், கத்தரிக்காய், வாழைக்காய், புடலங்காய், அவரைக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், சுண்டைக்காய், சுரைக்காய், பூசணிக்காய், பரங்கிக்காய், கொத்தவரங்காய், முருங்கைக்காய், முள்ளங்கி, எலுமிச்சம் பழம், இஞ்சி, கொத்துமல்லி, கறிவேப்பிலை, மற்றும் கீரை வகைகளும் மாற்றி மாற்றி சப்ளை செய்யப்படும்.

Phone : 4342098, 4840150

திட்டமிட்ட குடும்பத்துக்கு தேவையான காய்கறிகள் வழங்கப்படும். இயற்கை சீற்றங்களால் ஏதேனும் சேதாரம் ஏற்பட்டாலொழிய எங்கள் சப்ளை ஒருபோதும் நிற்காது.

NATARAJ ESTATES

"Shanthi Complex", 3rd Floor, 26, Ranganathan Street, T. Nagar, Madras - 600 017.
Branches : Tiruvarur, Thanjavur, Kancheepuram.

NATARAJ GROUP OF COMPANIES
Nataraj Finance & Investments,
Nataraj Chits (Tamilnadu) Pvt., ltd.,
Nataraj Exports Overseas, Nataraj Publications,
Nataraj Oil Mills, T.K. Geetha Agro Products."

24% P.A.

நூல் அறிமுகம் :

சமீபத்தில் வெளிவந்திருக்கும் 'பிரிவினைக்குப் பின்' என்கிற நூல், யூகோஸ்லாவியாவிலிருந்து சிதறுண்ட நாடுகளைப் பற்றியது. போஸ்னியா, செர்பியா போர்கள் பற்றி தினசரிகளில் பார்க்கிறோம். அவற்றுக்கான காரண காரியங்களைத் தீவிரமாக அலசும் இந்நூலின் ஆசிரியர் கண்ணன், வழக்கறிஞர். ஐ.நாவில் பணியாற்றியவர். ஆழமான சிந்தனைகள் விரவிக் கிடக்கும் நூலிலிருந்து சில பகுதிகள்....



• கண்ணன்

போருக்கு எதிராக ஒரு குரல்!

● ஜாக்ரப் நகரைத் தெரிந்து கொள்ளப் புறப்பட்டேன். தெருக்களில் இருமருங்கும் ஓர் இறுக்கத்தைப் பிரதிபலித்த கம்யூனிசக் கட்டடங்கள். அழுக்கு மண்டியனவாய்க் காட்சியளித்தன. கம்யூனிசத்தைத் தங்களின் கட்டடங்களில் படிந்திருந்த அழுக்கிலிருந்தும் குரோஷியர்கள் துரத்தியிருக்கலாம் என்று எனக்குப் பட்டது. நகரம் நெடுகப் புறாக் கூண்டு போன்ற பல மாடிக் குடியிருப்புகள், குன்றுகளும் மலைகளுக்கிடையேயும் அமைந்திருந்த ஜாக்ரப் நகரத்தின் எழிலை வெகுவாய்ச் சிதைக்க முயற்சி செய்திருந்தன...

● காரின் ஹெட் லைட்டுகளை நீள் கதிக்கு மாற்றினேன். எதிரில் தீப்பிழம்புகளைப் போல் ஜொலித்த இரண்டு கண்கள் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தன. யாரோ துப்பாக்கியால் குறிபார்க்கிறார்கள் என்று தோன்ற, கைகள் உடனே சில்லிட்டு விட்டன. ஒருகணம்தான். அடுத்த நிமிடம் அந்தத் தீப்பிழம்புக் கண்களின் சொந்தக்காரர் துரித கதியில் சாலையில் குறுக்கே பாய்ந்தார். நிம்மதியும் வெட்கமும் ஒன்றும் நேராது என்ற உணர்வும் ஒரே நேரத்தில் எங்களைப் பற்றின. அந்தக் கண்களின் சொந்தக்காரர் எதிரிப் போர் வீரன் அல்ல. ஓர் நரி...

● விடுதலைப் போரில் எதற்கு மடிகிறோம் என்றே தெரியாமல் மடிந்து விடும் அப்பாவி மக்களின் உயிருக்கோ, வருங்காலத்திற்கோ நாம் எந்த நிலையில் பொறுப்பேற்க முடியும் என்பதை ஆயுதப் போர் முறையை மட்டுமே நம்புவோர் எண்ணிப் பார்க்க வேண்டாமா? இந்தியப் பிரிவினையின் போது நடந்த மக்கள் பரிமாற்றத்தால் நேர்ந்த அவலத்தைக் கண்ட ஜின்னா, மிகவும் துன்பத்தில் ஆழ்ந்தாராம். 'இத்தனை பேருக்கு இவ்வளவு துன்பங்கள் வந்து சேரும் என்று தெரிந்திருந்தால் நான் பிரிவினையையே வலியுறுத்தியிருக்க மாட்டேன்' என்று ஜின்னா தமது கடைசி நாளில் சொன்னதாக ஒரு தகவல். இது உண்மையோ இல்லையோ - ஆனால் பிரிவினை, வன்முறை விளைவிக்கும் அவலங்களைக் காண்கையில் யாருக்கும் இப்படித்தான் தோன்றும்....

● பிரிவினைவாதிகள் சுரண்டலில் இருந்தும் எதேச்சாதிகாரத்திலிருந்தும் விடுபடப் பிரிவினை கேட்டது அந்தக் காலம். இன்று சமத்துவம் இல்லை, தனித்துவம் இல்லை என்னும் அடிப்படையிலேயே பிரிவினைவாதங்கள் எழுப்பப்படுகின்றன. கனடாவின் கியூபெக், தனித்துவத் தேடலுக்கு நல்ல உதாரணம். சமத்துவம் கேட்டே தொடங்கியது தமிழர் பிரச்னை அண்டை இலங்கையில். இந்தச் சமத்துவ, தனித்துவக் கோரிக்கைகளுக்கு ஆயுதமேந்திய போர்தான் தீர்வா...?

'போரிட்டுப் போரிட்டுப் பூக்காமல் காய்த்துப் போகும்' ஒரு விடுதலைப் போர் மட்டுமே பரணி பாடத் தகுதியான ஒன்றா? எத்தனை தலைமுறைகளை உரமாய் இட்டும், எவ்வளவு உயிர்களை நீராய் வார்த்தும் இந்த விடுதலைப் பயிர் காக்கப்பட வேண்டும்? எவ்வளவு தியாகம் தேவை விடுதலைக்கு? இத்தனை தியாகங்களுக்குப் பிறகு கிடைக்கக்கூடிய அந்த மயான நாட்டில் எவர் மிஞ்சி இருப்பார்கள்? ராஜதந்திரம் மூலம் பல வெற்றிகளைக் காணக்கூடிய இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் போர்தான் தீர்வா?

ராஜதந்திரத்தையும் பேச்சு வார்த்தையையும் ஒதுக்கி விட்டுப் போரே வெற்றிதரும் என்று செயல்பட்டுத் தோற்றுப் போன செர்பியரின் கதைதான் குரோஷிய, பாஸ்னிய சோகக் கதை.

தொகுப்பு : **சுப்ர.பாலன்**

'பிரிவினைக்குப் பின்'/இரா. கண்ணன்/ தேன்பாவை பிரசுரம், 1/2 நீதிபதி ஜம்பு லிங்கம் சாலை, சென்னை - 4. ரூ. 55/-

16. முதல் போர்

அதிகப்படியான உபசாரம் கிட்டும் போது தன்னைப் பற்றி பெருமையாக நினைத்துக் கொள்வது மனித இயல்பு. உடன் அபரிமிதமான மரியாதையும் கிடைக்கும் போது எதிரிலிருப்பவர்களை தனக்கு அடங்கியிருப்பவர்களாகவும் மனம் நினைத்துக் கொள்கிறது. உள்நோக்கமோ, அதன்பின் மறைந்திருக்கும் அபாயமோ புலப்படுவதில்லை. போசள மன்னனின் ஓலையுடன் தஞ்சைக் கோட்டையில் நுழைந்த சேமகேசிக்குக் கிடைத்த வரவேற்பும் மரியாதையும் 'போசளர்களால் சோழர்கள் எந்த அளவிற்கு அடிமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்!' என்றுதான் அவனை எண்ண வைத்தது.

வீரர்கள் ஓடிவந்து புரவியைப் பிடித்த விதத்தையும், பணிப்பெண்கள் தொடர வாசலிலேயே நின்று வரவேற்ற கோட்டைத் தலைவனையும், அரண்மனைக்குள் நுழைந்ததும் முகமன் கூறி வரவேற்று அமருமாறு வேண்டிக் கொண்ட பேரமைச்சரையும் கண்ட சேமகேசி, தன்னை ஏதோ சிற்றரசன் என்றே எண்ணிக் கொண்டான்!

அந்த அதிதமான உபசாரம் அவன் புத்தியை மறைத்து விட்டதால், அரண்மனை முழுவதும் மருந்துக்குக் கூட போசள வீரர் யாரும் இல்லாததையும் சோழ வீரர்களே நிறைந்திருப்பதையும் சோழ மன்னனுக்கு நேரிடையாக அளிக்கப்பட வேண்டிய அந்த ஓலையை, பேரமைச்சரே பெற்று பிரித்துப் படிக்க முற்பட்டதையும் அவன் கவனிக்கவில்லை.

ஓலையைப் படித்து முடித்து அவனிடமே அளித்த அமைச்சர், வாயிலில் நின்ற சோழ வீரனைக் கைகளைத் தட்டி அழைத்தார். "வீரனே! போசள வீரர் தலைவனிடம் சென்று மன்னர் உத்தரவு வந்திருப்பதாகவும் எல்லா வீரர்களையும் கோட்டை வாயிலில் அணிவகுக்கும்படியும் தெரிவித்து விடு" என்றார்.

சேமகேசி திகைத்தான். "அமைச்சரே, என்ன இது? சோழ மன்னரிடம் இதற்கு அனுமதி பெற வேண்டாமா?" என்று வினவினான்.

பேரமைச்சரின் பதில் உடனே வந்தது. "தேவை இல்லை. சிங்கணர் தமது வீரர்களைச் சோழ நாட்டில் இயக்க இதுவரை அனுமதி கேட்டதில்லை. மன்னரும் மறுப்பேதும் கூறியதில்லை. மேலும் தற்போது மன்னரும் இங்கில்லை" என்றார்.

சேமகேசிக்கு ஒன்றும் விளங்கவில்லை. "மன்னர் எங்கிருக்கிறார்?" என்றான்.

"மன்னர் தில்லையம்பதியில் இருக்கிறார். அவர் அரண்மனைக்கு வந்து பல மாதங்கள் ஆகின்றன. அனைத்துப் பொறுப்புகளையும் சைவத் துறவியாரே கவனிக்கிறார். தங்களுக்கு ஏதும் விளக்கம் கேட்க வேண்டியிருந்தால் அதைத் துறவியாரிடமே கேட்கலாம்" என்றார் அமைச்சர்.



"இந்த எளியவனைப் பற்றி என்ன சர்ச்சை நடக்கிறது இங்கே?" - கணீரென்ற குரல் ஒன்று குறுக்கிட்டது. அறை வாயிலில் நெற்றியிலும் உடலிலும் நீறு பளீரிட, சிவந்த ஆஜானுபாகுவான மேனியுடன் சிவப் பழமாகத் துறவியார் நின்றிருந்தார்.

எழுந்து நின்று அவரை வணங்கிய அமைச்சர், "போசள மன்னர் இங்கிருக்கும் தமது வீரர்களை அழைத்துச் செல்ல இவரிடம் ஓலை கொடுத்து அனுப்பியிருக்கிறார்" என்றார்.

"போசள மன்னர் உத்தரவை உடனடியாக நிறைவேற்ற ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே" என்ற துறவியார், சேமகேசியை நோக்கித் திரும்பினார். "இருந்தாலும் வீரரே, உங்கள்

தண்டநாயகர் சிங்கணரே வந்து அழைத்துச் செல்லலாமே, மன்னர் உத்தரவு எதற்கு?" என்றார்.

"சிங்கணர் தற்போது வரக்கூடிய நிலையில் இல்லை. எனவே என்னை அனுப்பியிருக்கிறார்" என்றான் சேமகேசி.

"ஏன், சிங்கணருக்கு என்ன ஆயிற்று? ஏதேனும்...?" துறவியாரின் முகத்திலும் அமைச்சரின் முகத்திலும் சொல்லி வைத்தாற்போல ஒரே சமயத்தில் கவலை படர்ந்தது. அந்தக் கவலை உண்மையா அல்லது போலியா என்பதை நிர்ணயிக்க அந்த சாளுக்கிய நாட்டின் திறமையான ஒற்றனால் கூட இயலவில்லை!

சற்றுத் தடுமாறிய சேமகேசி, "இல்லையில்லை, அவருக்கு ஒன்றும் நேரவில்லை. மன்னர் வேறு பணிகளுக்காக அவரை நியமித்திருக்கிறார்" என்றான்.

அவன் தடுமாற்றத்தைக் கவனித்த பேரமைச்சரின் முகத்தில் நகைப்பு தோன்றியது. துறவியாரின் பெருவிழிகள் விடுத்த எச்சரிக்கையைக் கண்டவர் அந்த நகைப்பை சோகமாக மாற்றிக் கொண்டார். தொடர்ந்து துறவியார் கூறினார் : "வீரரே, தற்போது சோழ நாட்டைக் காப்பவர்கள் போசள வீரர்கள்தாம். எனவே தங்களது பணி முடிந்த பிறகு இங்கு ஒரு ஆயிரம் வீரர்களையாவது அனுப்பி வைத்தீர்களானால் நலமாக இருக்கும்."

தஞ்சைத் துறவியாரைப் பற்றி இதற்குமுன் தான் கேள்விப்பட்டிருந்தவை அனைத்தும் தவறென்றே தீர்மானித்த சேமகேசி, இழுத்த இழுப்பிற்கு வளையும் துறவியையும் அமைச்சரையும் பார்த்த பார்வையில் சற்று ஏளனமும் தெரிந்தது. 'வீரர்களைத் திருப்பியனுப்புவது குறித்து தற்பொழுது ஏதும் கூற இயலாது துறவியாரே! எனினும் இதைப் பற்றி சிந்தித்துப் பார்க்கிறேன்'' என்றான் அகந்தை



விஷ்வக்சேனன்



கண்ணீர் குடிக்கும் பூச்சிகள்!

அவ்வளவு பெரிய யானைக்கும் ஒரு தொல்லை உண்டு. தருவது ஹைறப்போகுரோவிஸ் பேய்ன்ஸி ஜெரி! பெயரைப் பார்த்துப் பயப்பட வேண்டாம்; ஒருவித அந்துப் பூச்சியின் அறிவியல் பெயர்தான் இது. இப்பூச்சி, தனது 'உறிஞ்சி'யை யானையின் கண்களில் விடுகிறது. அதனால் யானையின் கண்களில் எரிச்சல் ஏற்பட்டுக் கண்ணீர் வழிய ஆரம்பிக்கிறது. இந்தப் பூச்சி அந்தக் கண்ணீரை ஆசையோடு உறிஞ்சிக் குடிக்கிறது! இந்தப்பூச்சி மட்டுமல்ல, இதுபோல் பல பூச்சிகள் விலங்கினங்களின் கண்ணீரை ஆவலோடு குடிக்கின்றன. நமது கண்களைச் சுற்றிக்கூட சில சமயங்களில் கண்கொசுக்கள் பறக்கின்றனவே, அதுவும் கண்ணீருக்காகத்தான்!

நன்றி : கலைக்கதிர்

நிரம்பிய குரலில்.

வாயிலில் சோழ வீரனொருவன் நுழைவது தெரிந்தது. உள்ளே நுழைந்து அமைச்சரையும் துறவியையும் வணங்கியவன், "பிரபு, தங்கள் உத்தரவுப்படி அனைத்து வீரர்களும் கோட்டை வாயிலில் அணிவகுத்து நிற்கிறார்கள்" என்று அறிவித்தான்.

ஒரு தினமாவது தஞ்சையில் தங்க வேண்டியிருக்குமென்று எண்ணியிருந்த சேமகேசிக்கு, அரைஜாம நேரத்தில் வந்த பணி முடிந்ததும், ஒரு தினம் முன்னதாகவே சென்று உத்தமபாளையத்தைக் கைப்பற்றி விடலாம் என்ற நினைவும் பெரும் சந்துஷ்டியை அளித்தது. கறுத்த முகத்தில் பற்கள் பளீரிட, சிறு நகைப்பொன்றை படரவிட்டுக் கொண்டவன், 'சோழ நாட்டு வீரர்கள் சுறுசுறுப்பான அடிமைகள்' என்று எண்ணிக் கொண்டான்.

அமைச்சரிடமும் துறவியாரிடமும் விடைபெற்ற சேமகேசி, கோட்டை வாயிலில் குவிந்திருந்த போசள வீரர்களை நடத்திக் கொண்டு, அப்பொழுதே மேற்கு நோக்கிப் பயணப்பட்டான். படைகளின் பயணம் தொடரத் தொடர வழியெங்கும் பல ஊர்களிலுமிருந்த போசள வீரர்கள் படையில் வந்து இணைந்து கொண்டதையும் ஏறக்குறைய சோழ நாட்டிலிருந்த போசள வீரர் அனைவரும் குவிந்து விட்டதையும் கவனித்தான். 'உத்தமபாளையத்தில் வெற்றி கிடைக்கப் போவது திண்ணம்' என்ற மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தான் தஞ்சையிலிருந்த அரை ஜாம நேரத்தில் அத்தனை ஊர்களுக்கும் படைப் பிரிவுகளுக்கும் துறவியாரால் எப்படி செய்தி அறிவிக்க முடிந்தது என்ற சந்தேகமும் பலமாகத் தோன்றியது.

சோழ நாட்டு எல்லை நெருங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்த சேமகேசி எதற்கும் வீரர் தலைவனிடம் இதுபற்றி விசாரித்து விடலாமென்று தீர்மானித்தான். வீரர் தலைவனை நோக்கித் தனது புரவியைச் செலுத்தியவன், "உபதலைவரே, இத்தனை துரிதமாக உங்களால் அனைத்து வீரர்களையும் எப்படி ஒன்று சேர்க்க முடிந்தது?" என்றான்.

போசள உபதலைவனின் எண்ண ஓட்டம் வேறுவிதமாக இருந்தது. கடந்த சில ஆண்டுகளாகத் தஞ்சையிலிருந்த போசள வீரர்களுக்குத் தலைமை வகித்த தனது நிலைமை திடீரென முன்பின் அறியாத வேற்று நாட்டவனால் மாறிவிட்டதும் அவன் உத்தரவை ஏற்று நடக்க மன்னர் இட்டிருந்த கட்டளையும் அவனைக் கொதிக்கச் செய்திருந்ததால் சேமகேசியின் கேள்விக்கு அவனிடமிருந்து வெறுப்புடனேயே பதில் வந்தது : "இதில் துரிதம் ஒன்றுமில்லை தலைவரே! நீங்கள் மன்னர் ஓலையுடன் வருவதாகவும் போசள வீரர் அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்றும் சோழ அமைச்சர் நேற்று முன்தினமே அறிவித்தார். மற்ற ஊர்களில் இருக்கும் படைப் பிரிவுகளுக்கும் புரவி வீரர்களைக் கொண்டு அறிவித்து விட்டார். எனவேதான் நீங்கள் வந்தவுடனேயே நமது வீரர்கள் புறப்பட முடிந்தது."

போசள உபதலைவனது பதிலைக் கேட்ட சேமகேசியின் தலை சுழலத் தொடங்கியது. 'தண்டநாயகன் சிங்கணனுக்கே கூட, தான் அறிவித்த பின்பே தெரிந்த செய்தி, இரண்டு தினங்களுக்கு முன்பாகவே பேரமைச்சருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?' என்ற கேள்வி அவன் சித்தத்தைக் குடையத் தொடங்கியது. சைவத் துறவியாரின் சிரித்த முகமும்

"ஆர்த்ரிட்டிஸ் பிரச்சனையால் 60 வயது ஆகிவிட்டது போல் ஓர் எண்ணம் வந்துவிட்டது..."



திருமதி. டி.கே. தாரா

94, காலேஜ் ரோடு, பழவந்தாங்கல், சென்னை-600 114.

"இன்று, TABE -சிகிச்சை முடிந்து ஏறத்தாழ ஒரு வருடம் ஆகியும் இப்போது நல்ல தெம்புடன் என் வயது 33 என்பதை மீண்டும் உணர்கிறேன். TABE - சிகிச்சைக்கு நன்றி"

"ஆஸ்டியோ-ஆர்த்ரிட்டிஸ் -- இதன் முதல் அறிகுறிகள் என் பிரசவ காலத்தில் ஏற்பட்டு, பின்னர் நிலைமை மேலும் மேலும் மோசமாகியது. நாற்காலியை விட்டு எழுந்திருப்பதே சிரமமாகிவிட்டது. தையல் வேலையையும் விட்டுவிட்டேன். தையல் மெஷினைப் பயன்படுத்தினால் வலிதாங்கமுடியாது. 32 வயதிலேயே முதுமை அடைந்துவிட்டதைப்போல ஆகிவிட்டது! எல்லா வகை சிகிச்சைகளையும் செய்து பார்த்தேன். ஆனால் நிவாரணம் கிடைக்கவில்லை.

அதன் பிறகு ஒருவர் TABE சிகிச்சை நிலையத்தைப் பற்றி என் கணவரிடம் சொன்னார். உடனே அந்த சிகிச்சையைத் தொடங்கிவிட்டேன். வலி மற்றும் பிடிப்பிலிருந்து படிப்படியாக நிவாரணம் கிடைத்ததை உணர்ந்தேன். இன்று TABE சிகிச்சை முடிந்து ஏறத்தாழ ஒரு வருடம் ஆகியும் இப்போது நல்ல தெம்புடன் என் வயது 33 என்பதை மீண்டும் உணர்கிறேன்! என் குழந்தைகளுக்கு உடைகள் தைப்பதில் மீண்டும் மகிழ்ச்சி."

T.K.Thara

★ காலத்தால் சோதிக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகை பவுல்டீஸ் (poultice) மூலம் நாங்கள் விரிவானதொரு வெளிப் பிரயோக சிகிச்சை திட்டத்தை ஆர்த்ரிட்டிஸ், ஸ்பாண்டிலிட்டிஸ், தோள்பட்டை வலி, இடுப்பு வலி, குதிகால் வலி போன்றவைகளுக்கு தகுதி வாய்ந்த ஆயுர்வேத மற்றும் அலோபதி டாக்டர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்குகிறோம். TABE/337

★ "இரு வேறு நபர்கள் ஒன்றுபோல் இருப்பதில்லை" என்பதை TABE கேர் கிளினிக்ஸ் (பி) லிமிடெட் நன்கு உணர்ந்துள்ளன. எனவே, காலம் மற்றும் விளைவுகளைப் பொறுத்தவரை சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம்.

கலந்து ஆலோசிக்க, இப்போதே தொடர்பு கொள்க: தொலைபேசி: 8553772

1, ஸ்ரீரங்கம் அவின்யூ, 53, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 8

காலை 9.00 மணி முதல்; இரவு 7.00 மணி வரை. வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

அனைத்து முக்கிய கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

TABE CARE CLINICS (P) LIMITED

TABE சிகிச்சை நிலையங்கள் இப்பொழுது TABE கேர் கிளினிக்ஸ் (பி) லிமிடெட்



ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

பதிவு எண் : 18-23759/92

H.O. No. 288, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 7 Ph : 6421801/6415549

B.O. No. 23, வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4. Ph : 4934009

PF

டெபாசிட்டுகள் ரூ 5 கோடியை தாண்டியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிக்சட் டிபாசிட்டுகளுக்கு கவர்ச்சிகரமான வட்டிகள் வழங்கப்படும்

வட்டிக்கான காசோலைகள் முன்கூட்டியே வழங்கப்படும்

மேலும் பயனுள்ள திட்டங்களுக்கு நேரில் அணுகவும்

சென்னை மாநகர சொத்துக்கள் மீது கடன் கிடைக்கும்





நகைக்கடன் கிராம் 1க்கு ரூ. 300 மாதவட்டி ரூ. 1.95 மட்டும் வேறு கட்டணம் இல்லை

H.O. வெள்ளி விடுமுறை

B.O. செவ்வாய் விடுமுறை

உச்சவரம்பு கிடையாது

உறுப்பினராகி பயன் பெறுவீர்

வேலை நேரம் : காலை : 8.30 - 12.30 மாலை : 2.00 - 6.00



சேர்மன்:P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
கந்தக்கோட்டம், சென்னை-600 003.

PB குரூப் கம்பெனி

அருளுக்கு ஸ்ரீ முத்துக்குமரன்! பொருளுக்கு PB குரூப் நிறுவனம்!



"காசில்லேன்னு தெரிஞ்சும், என்னை ஏன், டிபன் சாப்பிடக் கூப்பிட்டே?"

"மாவாட்டும் போது, சும்மா ஒரு பேச்சுத் துணையா இருக்குமேன்னு தான்...!"

— ஆர். வசந்தகுமார்

பெருவிழிகளும் அவன் மனக்கண்களில் எழுந்து அவனைப் பார்த்துப் பெரிதாக நகைத்தன. 'ஆயிரம் வீரர்களையாவது தஞ்சைக்குத் திருப்பியனுப்ப வேண்டும்' என்று கேட்டுக் கொண்ட துறவியாரின் வார்த்தைகளின் பொருள், சோழ எல்லையில் பெரிதாக எழுந்து நின்ற தோகை மலையை நெருங்கியதும்தான் புரிந்தது அவனுக்கு.

தோகை மலையைக் கடந்ததும் திரும்பி தென்மேற்கில் சென்ற பாதையை அடைந்து விட்டால் நேராக உத்தமபாளையத்தை அடைந்து விடலாமென்பதை அறிந்திருந்தவன், வீரர்களை துரிதமாகப் பின்தொடர உத்தர விட்டு விட்டுத் தனது புரவியில் முன்னால் விரைந்தான். அடிவாரத்தை நெருங்க முற்பட்டவனது செவிகளில் எங்கோ பலமாக ஒலிக்கத் தொடங்கிய முரசுகளின் ஒலி கேட்டது. மலையடிவாரத்தைக் கடந்து, தென்மேற்குப் பாதையை அடைந்தவன் திகைப்பில் அப்படியே உறைந்து நின்றான். அவனையும் போசள வீரர்களையும் எதிர்பார்த்துக் காத்திருப்பது போல் அவன் எதிரில் பாண்டியர் படைப் பிரிவு ஒன்று நின்றிருந்தது. படைகளின் முகப்பில், பூரண கவசங்களுடனும், இடையில் தரித்த நீண்ட வாளுடனும் ஒரு சாம்பல் நிறப் புரவியில் அமர்ந்திருந்தான் ஆதித்ய பாண்டியன். அடுத்திருந்த புரவியில் தோளின் பின்புறமிருந்து தலைநீட்டிய சீனத்து வாளுடனும், கழுத்திலிருந்து ஊசலாடிய கடல் நாகம் பதித்த பெரும் பதக்கத்துடனும் மஞ்சள் முகத்தில் சிறு விழிகள் பளிச்பளிச்சென்று மின்ன அமர்ந்திருந்த சீனத்து வாலிபனைக் கண்ட சேமகேசிக்கு, தஞ்சைத் துறவியார் தன்னையும் போசள வீரர்களையும் எத்தகைய படுகுழியில் தள்ளியிருக்கிறார் என்பது புரிந்தது. அவன் பின்னால் வந்து கொண்டிருந்த உபதலைவனும் வீரர்களும் திகைத்து அப்படியே நின்றார்கள்.

அவர்கள் நின்ற மறுகணம் எதிரில் புரவியில் அமர்ந்திருந்த பாண்டிய இளவலின் வாள் வானை நோக்கி உயர்ந்து இருமுறை ஆடியது. அடுத்து மலைச்சரிவின் பக்கவாட்டிலிருந்து கடகடவென்ற பெரும் ஒலி எழுந்தது. வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த யந்திரப் பொறிகள் தொடர்ந்து நூற்றுக்கணக்கில் வேல்களையும் அம்புகளையும் சரமாரியாகப் பொழியத் தொடங்கின. ஐந்தாறு சுற்றுக்கள் சுழன்ற பின்பு பொறிகளை போசளர் அணிவகுப்பின் மையப் பகுதியை நோக்கித் திருப்புமாறு சைகை செய்த ஆதித்யன், வாளை உயர்த்திய படியே அந்த சாம்பல் நிறப் புரவியை முன்னோக்கிப் பாய விட்டான்.

யந்திரப் பொறிகளால் ஏற்கெனவே சிதைந்து விட்ட அணிவகுப்பை சரிக்கட்ட இயலாமல் திணறிய போசளர் படை, நேர் எதிரில் வந்து மோதிய பாண்டிய வீரர்களின் தாக்குதலில் இன்னும் திணறத் தொடங்கியது.

பாண்டியர் படைகளின் முகப்பில் முன்னால் பாய்ந்த யுவான், தமிழகத்தில் தான் கலந்து கொள்ளும் முதற்போர் அது என்பதால் பெரும் உற்சாகத்திலிருந்தான். அதிவேகமாகச் சுழன்று, நேர் செங்குத்தாகப் பாய்ந்த அந்த சீனத்து வாள், போசள வீரர்களை மளமளவென்று சரித்தது. அந்த வீச்சின் முறையை அவர்கள் நிர்ணயிக்கும் முன் உடலில் புகுந்து புகுந்து புறப்பட்ட அவன் வாள் விளைவித்த ஓலங்களையும் அது சுழன்ற இடமெல்லாம் போசள வீரர்கள் படபடவென்று சரிந்ததையும் கவனித்து வியந்தபடியே வாளை வீசிய ஆதித்யனின் கடையிதழ்களில் ஒரு முறுவல் நெளிந்தது.

சேமகேசியும் அவன் படைப் பிரிவும் பின்வாங்கத் தொடங்குவதை கவனித்த ஆதித்யனின் வாள், மீண்டும் உயர்ந்து இடமும் வலமுமாக ஆடியது. அந்தச் சைகையின் பொருளைப் புரிந்து கொண்ட பாண்டியர் படை, அடுத்து அணிவகுப்பை மாற்றிக் கொண்டு போரிட்டபடியே அர்த்தசந்திர வியூகமாக அணிவகுக்கத் தொடங்கியது. யந்திரப் பொறிகளும் நகர்த்தப்பட்டு போசளர் படையின் வால் பகுதியை நோக்கித் திரும்பி தாக்கத் தொடங்கின.

சுற்றி வளைத்த அர்த்தசந்திர வியூகத்தையும் பொறிகளின் தாக்குதல் பின்புறத்தில் பலப்பட்டு விட்டதையும் கண்ட சேமகேசிக்கு இனி தான் பின்வாங்குவதோ, தப்புவதோ சாத்தியமல்ல என்பது புரிந்ததால் போசள வீரர்களை ஊடுருவி உள்ளே நுழைந்து விட்ட யுவானை

நோக்கித் தனது புரவியை செலுத்தினான். சேமகேசி தன்னை நோக்கி முன்னேறுவதைக் கவனித்த யுவானின் பகர வடிவ மீசை ஒரு பக்கமாக இழுபட்டது. அவன் கழுத்திலிருந்து ஊசலாடிய பதக்கத்திலிருந்த கடல்நாகம் சேமகேசியைப் பார்த்து ஒருமுறை 'சீறியது'!

கரகரவென வாளைச் சுழற்றியபடியே யுவானை நெருங்க முற்பட்ட சேமகேசியைக் கவனித்த ஆதித்யன், குனிந்து அந்த சாம்பல் நிறப் புரவியின் வலது செவியில் ஏதோ வார்த்தைகளை ஓதினான். உடனே அந்தப் புரவி தன் முன்னங்கால்களை உயர்த்தி ஒருமுறை பயங்கரமாகக் கனைத்தது. எதிரிலிருந்த வீரர்களை நசுக்கியபடி உயர்ந்து எழுந்து பாய்ந்து, அசுரத்தனமாக விரைந்த அந்த சாம்பல் நிறப் புரவி சேமகேசியின் பாதையில் இடைமறித்து குறுக்கே புகுந்தது. ஆதித்யனின் நீண்ட வாள் சேமகேசியின் வாளைத் தீப்பொறி பறக்க உரசி மோதியது.

வேவு பார்த்த குற்றத்திற்காகவும், கொங்கு நாட்டு இளவரசியைக் கடத்திய குற்றத்திற்காகவும் உரிய தண்டனையை சேமகேசியின் தோள்களிலும் மார்பிலும் வழங்கிய ஆதித்யனின் வாளைத் தடுக்க சேமகேசி எடுத்த முயற்சிகளோ, சாளுக்கிய முறையிலும் போசளர் முறையிலும் மாற்றி மாற்றி வீசிய வாளின் வீச்சுக்களோ பயன் அளிக்கவில்லை.

அந்தப் போர் முடிந்தபோது தன் கறுத்த உடல் முழுவதும் ஆதித்யனின் வாள் தீட்டிய போர்க் கவிதை எழுதப்பட்டிருக்க, மண்ணில் விழுந்து கிடந்தான் சேமகேசி. ஆயுதங்களை இழந்தவர்களையும் காயங்களுடன் உயிர் தப்பி ஓடியவர்களையும் துரத்திக் கொன்று விட முயன்ற யுவானைத் தடுத்தான் ஆதித்யன். அவனை வியப்புடன் பார்த்தான் யுவான். "இளவரசே, போர் என்று வந்த பின்பு எதிரிகளை முற்றிலுமாக அழிக்க வேண்டும் என்பதைத் தவிர சீனத்தில் வேறு எதையும் பார்ப்பதில்லை. அவர்களை முழுவதுமாக அழிக்க எனக்கு அனுமதி அளியுங்கள்'' என்றான் யுவான் சற்று வேகத்துடன்.

ஆதித்யனின் பதில் திடமாக வந்தது. "இல்லை யுவான். தமிழகத்தில் யுத்த தர்மம் என்று ஒன்று உண்டு. இதைவிடப் பெரும் எதிரியை அடுத்து நாம் எதிர்கொள்ள வேண்டும். காலத்தை வீணாக்காமல் படைகளை மேற்கு நோக்கித் திருப்பு'' என்று உத்தரவிட்டான்.

ஆதித்யன் குறிப்பிட்ட அந்தப் பெரும் எதிரி அதே சமயத்தில் கொங்கு நாட்டுத் தலைநகர் ஸ்காந்தபுரத்தின் அரண்மனைக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தான்.

(தொடரும்)



அருள்வாக்கு

தியானத்தில் ஒருமுகப்படுவதற்கு பெரிய இடைஞ்சல் என்ன? இந்த மனசு ஓயாமல் ஆடிக்கொண்டிருப்பதுதான். மனத்தினால்தான் எல்லா விதமான கஷ்டங்களும் உண்டாகின்றன. மனத்தில் ஏற்படும் ஆசையே அத்தனை கஷ்டங்களுக்கும் காரணம். 'ஆசைப்படாதே' என்று இந்த மனசை இழுத்துப் பிடித்து நிற்க வைக்க முடியவில்லை.

நாம் 'ஒரு வஸ்துவை நினை' என்று இந்த மனசிடம் சொன்னால், அது ஏதோ சொற்ப காலம் அதை நினைப்பது போல இருந்து, வேறு எங்கோ பாய்ந்து விடுகிறது. தியானம், சாந்தி என்றெல்லாம் நான் உபந்நியாசத்தில் சொல்கிறபோது ஒரு க்ஷணம் உங்கள் மனம் அடங்கினாற்போல் தோன்றும், ஆனந்தமாய் இருக்கும். ஆனால் அடுத்த க்ஷணமே மனம் எங்கோ ஓடி, சாந்தி குலைந்து போகிறது.


'பேசாமல் இரு' என்று கட்டளை போட்டு வாயை மூடிக் கொண்டு விட்டால் அது ஓரளவாவது பேசாதிருக்கிறது. 'பார்க்காதே' என்று உத்தரவு போட்டுக் கண்ணை மூடிக் கொண்டு விட்டால், கண் ஓரளவாவது பார்க்காமல் இருக்கிறது. ஆனால் இந்த மனத்திடம் மட்டும் 'நினைக்காமல் இரு' என்று எவ்வளவுதான் முட்டிக் கொண்டாலும் அது கேட்பதில்லை. நாம் 'நினை' என்றால் மனம் நினைக்க வேண்டும், 'நினைக்காதே' என்றால் நினைக்காமலிருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு மனம் ஸ்வாதீனமாயிற்று, நமக்கு சித்த ஸ்வாதீனம் இருக்கிறது என்று அர்த்தம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சிறுகதை

"உங்களை சூப்பரண்டெண்ட் வரச் சொல்றாரு."

அட்டெண்டர் காதருகே கிசுகிசுத்து விட்டு நகர்ந்ததும், பியூரெட்டில் சிரத்தையாக திரவம் நிரப்பிக் கொண்டிருந்த நான் சட்டென்று கலைந்து போனேன். காட்டன் வேஸ்டில் கையைத் துடைத்துக் கொண்டு லேப் சூப்பரண்டெண்டின் அறையை அணுகி எட்டிப்



பார்த்தேன்.

"குருமூர்த்தி, ரொம்ப அர்ஜண்ட்! இந்த காஸ்டிக் சாம்பிளைப் பாத்துக் குடேன்."

சூப்பரண்டெண்ட், டேபிளின் மீது இருந்த பழுப்பு நிறப் பாட்டிலைச் சுட்டிக்காட்டினார். நான் தயக்கத்தோடு மென்று விழுங்கினேன்.

"காஸ்டிக் எல்லாம் முருகவேல்தான்..."

நான் முடிக்கும் முன்பாக பெருமூச்சு விட்ட அவர் ஜன்னல் வழியே பார்வையை ஓட்டினார். என் கண்கள் தொடர்ந்தன... சற்று தூரத்தில் கட்டுமானப் பணியிலிருந்த புது ப்ளாண்டின் அருகே கலவை சுமக்கும் பெண் ஒருத்தியிடம் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தான் முருகவேல்.

"அபிஷியலா உன்னைக் கேட்கல குருமூர்த்தி, அர்ஜண்ட், அதனாலதான்" அவர் குரல் கெஞ்சுவதைப் போல ஒலிக்கவும், அதற்கு மேல் தாமதிக்க என்னால் முடியவில்லை. பாட்டிலைச் சுமந்து கொண்டு இடம் பெயர்ந்தேன். இது என் இயல்பு. கறாராக மறுத்துப் பேசுவதோ, கோடு இழுத்தாற்போல் கொள்கை காப்பதோ என்னால் ஆகாத ஒன்று!

முருகவேல் அப்படியல்ல! சரியான முன்கோபக்காரன் - ஆறடி ஆகிருதிக்கு கரணை கரணையான உடல் கட்டோடு பார்ப்பவரின் வயிற்றைக் கலக்குபவன். முறுக்கு மீசையும், லேசாகச் சிவப்பேறிய கண்களுமாக கவனத்தை சிதற அடிப்பவன். சட்டென்று சத்தம் போட்டு எதையும் சாதித்துக் கொள்பவன். இல்லையென்றால் ஷிப்டுக்கு வந்து முழுசாக இரண்டு மணி நேரம் கூட ஆகவில்லை, இப்படி எங்கோ மூலையில் சுற்றிக் கொண்டிருப்பானா!

நான் மௌனமாக டேபிளுக்குத் திரும்பி மேற்கொண்டு வேலையில் இறங்குமுன்பாக முதுகில் பளீரென்று அடி விழுந்தது. நிமிர்ந்தேன். முருகவேல்!

"என்ன மாப்ளே - இன்னிக்கும் என் வேலையை உன் தலையில கட்டிட்டானா?"

எகத்தாளமாக முருகவேல் சிரிக்கவும் எனக்கு எரிச்சலாக இருந்தது.

"நீ செய்யறது உனக்கே நல்லா இருக்கா - வேலையைப் பாக்காம வெட்டி அரட்டை எதுக்கு?"

பயத்தில் குரல் கம்ம, எப்படியோ கேட்டு விட்டேன் - என் இதயம் தடக்தடக் என்று அடித்துக் கொள்ள, முருகவேல் கலீரென்று நகைத்தான்.

"அதான் - ஏமாந்த சோணகிரி நீ இருக்கப்ப எனக்கு என்ன கவலை - 'தில்' இருந்தா சூப்பரண்டெண்ட் என்கிட்டே இல்ல சொல்லி இருக்கணும் - நானும் வேலைக்குத்தானே வந்திருக்கேன் - மாட்டேன்னா சொல்லப்

வனவிலங்கு

ஜெரா

போறேன். என்னை 'யூஸ்' பண்ணிக்கத் தெரியாததும், முடியாததும் அவங்க முட்டாள் தனம்."

முருகவேல் பட்டு கத்திரித்தாற்போல் நச் சென்று பதில் சொல்லவும் எனக்கே யோசனையாகத்தான் இருந்தது. ஒருவேளை என்னைப் போன்றவர்கள் எல்லாம் ஏமாந்த சோணகிரிகள்தானா! மிரட்டவும், சத்தம் போடவும் தெரிந்திருந்தால் தனி மரியாதை கிடைக்குமோ...

வாஸ்தவந்தான்! முருகவேலை அணுகிச் சொல்வதை கூட அவஸ்தையாய் உணர்பவர்கள், 'ஆமாம் சாமி' போடும் ஒரே காரணத்துக்காக, கொஞ்சமும் அனுசரணை இல்லாமல் அடுக்கடுக்காக வேலைகளை என் தலையில் ஏற்றி அழகு பார்க்கிறார்களே! இதை என்னவென்று சொல்வது!

"இதை வுடு மாப்ளே! புதன்கிழமை பொழுதோட பொட்டநேரி போறோம்! எனக்குப் பொண்ணு பாக்க! அப்புறம் ஓ.டி.. அது இதுன்னு ஒப்பாரி வைக்காதே! ஆமா."

முருகவேல் தீர்மானமாகச் சொல்லிவிட்டு சூப்ரண்டெண்டின் அறையை நோக்கிப் போனான். முருகவேல் எனக்கு நண்பன் என்பதோடு, ஒரு வகையில் தூரத்து சொந்தம் கூட. கடந்த இரண்டு வருடமாகப் பெண் தேடியும் இன்னும் அவனுக்கு செட்டாகவில்லை! பெண் பார்க்கப் போகும்போதெல்லாம், என்னையும் தவறாமல் இழுத்துப் போய் விடுவான்! பின்னே, இவனுடைய வீரப்பிரதாபத்தை எல்லாம் யார் அவிழ்த்து விடுவதாம்?

வெட்டி 'பந்தா'வோடு நோகாமல் நோன்பு கும்பிடும் முருகவேலுக்கு என்னைப் போன்ற இணக்கமான, யாரையும் எளிதில் கவர்ந்து விடும் 'எடுபிடி' தேவைப்பட்டதில் ஆச்சர்யமில்லை! முடியாது என்று சொன்னால் எங்கே என்னிடமும் முறைத்துக் கொள்வானோ என்ற பயம் உள்ளூர எனக்கு இருந்ததால் நானும் அவன் பின்னால் 'நாய்க்குட்டி'யானேன். வரும் புதன்கிழமை எப்படியோ!

நான் 'சாம்பிள் ரிப்போர்ட்டை' பவ்யமாக சூப்ரண்டெண்டிடம் நீட்டிய போதுகூட முருகவேல் அவருக்கு எதிரே அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டுதான் இருந்தான் - ரிப்போர்ட் கொஞ்சம் தாமதமாகி விட்டதற்காக அவர் என்னை செல்லமாகக் கடிந்து கொள்ளும்போது, முருகவேல் என்னைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்தான். எனக்கு இந்த முரண்பாடு முகத்தில் அறையாமல் இல்லை! என்ன செய்வது?

புதன்கிழமை. சொல்லிவைத்தாற்போல் முருகவேல் 'புல்லட்'டோடு வந்து விட்டான்! தழையத் தழைய பட்டு வேட்டியும், பளபளப்பாக முழுக்கை சட்டையும், மார்பில் செயினுமாக அவன் வண்டியில் உட்கார்ந்திருக்கும் கம்பீரத்தைப் பார்த்து நான் வாய் பிளந்து விட்டேன் - பின் ஸீட்டில் நான் தொத்திக் கொண்டது நிச்சயமாக திருஷ்டி பரிகாரமாகத்தான் தெரிந்திருக்கும்!

பொட்டநேரி கடை வீதியை ஒட்டிய மேல் பாதையில் வண்டியைத் திருப்பும் முன்பு இளநீர்க் கடையில் இருந்த கூட்டம் முருகவேலைக் கவர்ந்தது. கூட்டம், தகராறு என்றால் முருகவேலுக்கு 'குல்பி' சாப்பிடுவது போல. வழக்கம் போல வண்டியில் இருந்தவாறே என்னை விரட்டி விசாரிக்கச் சொன்னான் - நான் விவரம் சேகரித்துச் சொன்னதும், ஸ்டைலாக வண்டியை 'ஸ்டாண்ட்' செய்து விட்டு கூட்டத்தை அணுகினான். இளநீர் சாப்பிட்ட கணக்கில் குளறுபடி ஏற்பட்டு காசு கொடுப்பதில் கலாட்டா செய்து கொண்டிருந்தவனைப் பார்த்து, "கூடவோ, கொறைச்சலோ காசைக் குடுத்துப் போய்யா. இதுக்காக கடைவீதியை நாறடிச்சுக்கிட்டு..." என்று நியாயம் பேசினான். மேற்படி ஆள் இவனைப் பொருட்படுத்தாமல் பேசிக் கொண்டே போக, முருகவேல் யோசிக்கவில்லை - அவன் பின்னங்கழுத்தில் கைவைத்து நெட்டித் தள்ளினான். அவ்வளவுதான்! கூட்டம் நிசப்தமானது. எதிரும், புதிருமாக வந்து நின்ற வாகனங்களில் இருந்து சரிந்த ஜனங்கள் வேடிக்கைப் பார்க்க, நான் என் வாடிக்கையான கெஞ்சல், கொஞ்சல், இவைகளைப் பயன்படுத்தி, நிலைமையைக் கட்டுக்குள் அடக்கி, முருகவேலை 'பந்தா' கலையாமல் கழட்டிக் கொண்டு வர அரைமணி நேரத்துக்கு மேலாகி விட்டது.

விசிலடித்தபடி வண்டியை விரட்டிய முருகவேல், இதெல்லாம் என்னவோ அவனுடைய புருஷலட்சணம் என்பது போல புலம்பிக் கொண்டு வர, நான் அருவருப்பில்

அமைதியானேன்.

"என்னடா மாப்ளே! மௌனமா வர்றே! என்ன கோவமா!"

"பின்ன.. குளிர்ச்சியாக்கும் – இது தேவையா – யாரையும் பயப்படுத்தி பணிய வைக்கிறது பெரிய விஷயமில்லே!"

முருகவேல் என்னின் சத்தத்தை மீறி பெரி தாகச் சிரித்தான் –

"மாப்ளே – அடுத்தவங்களை நம்ம தோள் மேல கை போட அனுமதிச்சேன்னு வச்சுக்க! அங்குல அங்குலமா முன்னேறி கழுத்தை அமுக்கப் பார்ப்பான்! தோளை தட்டிக்கிட்டு நின்னு பாரு, துண்டை எடுத்து இடுப்பில கட்டிகிட்டு நமக்கு கும்புடு போடுவான்!"

முருகவேலின் வியாக்கியானம் என்னை வெகுவாகக் கவர்ந்தது. "அட, ஆமாம்!" என்று அசைபோட வைத்தது. என் மௌனம் முருகவேலுக்கு நிறைய முனைப்பைக் கொடுத்து விட்ட உற்சாகத்தில் இன்னும் ஒரு படி மேலே போய் வாசலில் காத்திருந்த பெண் வீட்டாரிடம் பெரிதும் அலட்டிக் கொள்ள ஆரம்பித்தான்.

கடைவீதியிலேயே காத்திருந்து யாரும் முறைப்படி வரவேற்று கௌரவப்படுத்த வில்லை என்று வெளிப்படையாகக் கத்தி னான். நான் குறுக்கே புகுந்து அவனையும் ஆசுவாசப்படுத்தி, அடுத்தவர்களிடமும் அன் பாக விளக்கம் சொல்லி, இங்கும் நிலைமையை நிதானப்படுத்த வேண்டியதானது.

முருகவேல் என் காதருகே குனிந்து, "சபாஷ்டா மாப்ளே, இப்படி சப்பைக்கட்டு கட்ட உன்னைத் தவிர யாராலயும் ஆகாது" என்று முணுமுணுத்த போது, இதற்காகப் பெரு மைப்பட்டுக் கொள்வதா இல்லை சிறுமைப் பட்டுப் போவதா என்பதே எனக்குப் புரிய வில்லை.

சம்பிரதாயப்படி பெண் பார்க்கும் பட லம் தொடங்கியது – காப்பி தம்ளரை நீட் டிய மணப்பெண்ணைப் பார்த்ததும் முருக வேல் திறந்தவாய் மூடவில்லை! அழகு என் றால் அப்படி ஒரு அழகு! நளினம்! முகத்தில் அறிவின் முதிர்ச்சி! சத்தியமாக இதைவிட நல்ல பெண் முருகவேலுக்கு அமையும் என்று எனக்குத் தோன்றவில்லை. பொறாமை கூட மனத்தின் ஓரத்தில் லேசாகக் கால் பதித்தது.

பெண் மேச்சேரி ஹைஸ்கூலில் டீச்சராம் – நிறைய கவி அரங்கங்களிலும், பட்டிமன்றங் களிலும் கூட பேசுமாம்! அதற்கென்று ஒரு தனி இமேஜ் இருப்பது தெரிந்தது. இதை எல் லாம் கூட நான்தான் மெனக்கெட்டு ஓடி ஓடி ஆர்வமாக விசாரித்தேனே தவிர, முருகவேல் 'மாப்பிள்ளை பந்தாவை' சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை.

பெண் பிடித்து விட்ட விஷயத்தைக் கூட முருகவேல் சார்பாக நான்தான் சொல்ல வேண்டியதானது. நாங்கள் வெளியே காத் திருக்க, கொஞ்ச நேரம் கழித்து பெண்ணின் தந்தை மெதுவாக வந்தார் – கைகளைக் கூப்பி னார்.

"அப்போ..." என்று இழுத்தார். முருகவேல் என்னைப் பார்த்தான். நான் நிமிஷ நேரம் விழித்து விட்டு, "முகூர்த்தம் எப்பவிக்குன்னு பார்க்க பெரியவங்களை அனுப்பலாமுங் களா?" என்று நாசூக்காக விஷயத்தைக் கிளறி னேன். அவர் பிடிகொடுக்காமல் "சொல்லி அனுப்பறோம் தம்பி" என்றார். முருகவேலுக்கு பட்டென்று மூக்கு விடைத்தது.

"பளிச்னு சொல்லுங்க – அதுதான் எனக் குப் புடிக்கும்." – பெரியவர் தர்மசங்கடமாக முருகவேலை ஏறிட்டார்.

"தம்பி... வருத்தப்படாதீங்க. வெளிப் படையா கேட்கறதினாலே சொல்றேன். வித் தியாசமா நெனைக்கப்படாது. நீங்க வேற இடம் பாத்துக்கிடுங்க."

முருகவேல் முகத்தில் உமிழப்பட்டவனைப் போலத் தாக்குண்டான் – எனக்கே கூட தேகம் நடுங்கியது.

"என்னங்க நீங்க.. இப்படிச் சொல்றீங்க... இது நியாய..."

"பதட்டப்படாதீங்க தம்பி. பொண்ணு இஷ்டத்துக்கு விரோதமா எதுவும் செய்யற பழக்கமில்லீங்க. விவரமான பொண்ணு. பஸ்ஸை விட்டு இறங்கும்போதே கடைவீதி யிலே இளநி கடையில தம்பி பண்ண ஆர்ப் பாட்டத்தைப் பாத்துச்சாம். அதுக்கு இவரைப் புடிக்கல! என்ன பண்றது! ப்ராப்தம் இல்ல!"

"இது நல்லா இல்லீங்க. ஆம்பிளைக்கு அழகு தைரியம்தாங்க. எதையும் எதுத்து நின் னாத்தான் கௌரவமே கிடைக்கும்!" என்று தொடங்கி முருகவேலின் வியாக்கியானத்தை விலாவரியாக நான் சொல்லி முடிக்கவும், பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டு விட் டுப் பெரியவர் சிரித்தார்.

"எதிர்த்து நிக்கறது கௌரவம் இல்லேங் கல! ஆனா எல்லாத்தையும் எதிர்த்து நிக்கறது கேவலம். மணவாழ்க்கையில மட்டுமில்ல; மனுஷ வாழ்க்கையிலேயும் பற்றும் பாசமும் தான் தம்பி பெரிசு!"

என் தோளில் தட்டிய பெரியவர் கூடவே, "உன் ஜாதகத்தை வேணுமானா குடு, பார்ப் போம்" என்றார்.

ஏதோ பேசப் போன என்னைத் தோளில் பற்றி மௌனமாக்கினான் முருகவேல். அதற் குப் பின் வீடு திரும்பும் வரை அவன் பேச வில்லை. சில நாட்களாக வேலைக்கே வரு வதில்லை! ஒருவேளை அவன் மனத்திலிருந்த மிருகம் வேட்டையாடப்பட்டு விட்டதோ?

உள்ளே-வெளியே

எதிர் நீச்சல் போடும் குளம்!

வெளியே:

தெற்காசிய விளையாட்டுகளுக்காக கோடிக்கணக்கான ரூபாயை விழுங்கி விட்டு உருவான வேளச்சேரி நீச்சல் குளத்தைச் சுற்றி ஆளரவமே தென்படவில்லை.

ஒரு பெண்மணி மட்டும் இளநீர் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். சரசு என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அவர் "வியாபாரமா? ஏதோ நடக்குதுங்க. ரெண்டு மாசமாத்தான் செய்யறேன். நீச்சல் குளத்துக்கு யாருங்க வராங்க? தெருவிலே போறவங்கதான் வாங்கிக் குடிக்கிறாங்க" என்றார் நமது வெவ்வேறு கேள்விகளுக்கு.

''பல்லவா பார்த்துச் செல்'' என்று தொடங்கிய எச்சரிக்கை நோட்டீஸ் ஒன்று நீச்சல் குளத்தின் வெளி கேட் ஒன்றின் மீது ஒட்டப்பட்டிருந்தது. பாலாஜி கல்லூரி மாணவர் ஒருவர் பேருந்தில் சிக்கி இறந்ததைத் தொடர்ந்து அவரது சக மாணவர்கள் அச்சிட்ட அஞ்சலி அது!

''வாருங்கள். சிறியவர்களுக்கு 400, பெரியவர்களுக்கு 500. உடல் நலம் பெற, தேர்வில் அதிக மதிப்பெண் வாங்க, உற்சாக வாழ்வு வாழ...''- ஏதோ தாதுலேகிய விளம்பரம் என்று அவசரத்தில் முடிவு கட்டிவிட வேண்டாம். நீச்சல் பயிற்சிக்கான வகுப்புகளில் சேரத்தான் இந்த சாக்பீஸ் வாசகங்கள்.

'அட, சர்வதேசத் தரத்துடன் கூடிய நீச்சல் குளத்தில் உள்ளூர் சிறுவர்களுக்கு நீச்சல் வாய்ப்பா?' மகிழ்ச்சியுடன் உள்ளே நுழைந்தோம்.


உள்ளே:

தெற்காசிய விளையாட்டுக்களின் போது பார்த்தது. பிறகு இப்போதுதான்.

தொடர்ந்து காவல் இருப்பதாலோ என்னவோ, வளாகத்தில் எல்லாப் பொருள்களும் எந்தவித சேதமுமில்லாமல் காணப்பட்டன. பெரும்பாலும் சுத்தமாகவும் இருந்தது (குளத்தில் உள்ள தண்ணீரைத் தவிர!) பார்வையாளர்களுக்கான ஆயிரக்கணக்கான நாற்காலிகளில் பெரும்பாலானவை பாதுகாப்பாக மூடப்பட்டிருந்தன.

லிஃப்டுடன் கூடிய டைவிங் குளத்தில் தண்ணீர் இல்லை (தெற்காசியப் போட்டிகளிலேயே கூட டைவிங் இடம் பெறவில்லை என்பது வேறு விஷயம்.)

ஸாஃப் விளையாட்டுகளுக்குப் பிறகு ஜனவரியில் மாநில மற்றும் தென் மாநிலப் போட்டிகளும் இங்கு நடைபெற்றிருக்கின்றன.



சுமார் ஆறரை அடி ஆழமுள்ள நீச்சல் குளத்தில் எப்படி சிறுவர்களுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்க முடியும்? அபாயகரமான முயற்சியாயிற்றே! மண்டையைக் குடைந்த இந்தக் கேள்வியை அங்கு இருந்த சாலமன் (நீச்சல் குளப் பராமரிப்பாளர்) மற்றும் சந்திரசேகர் (தேசிய அங்கீகாரம் பெற்ற நீச்சல் பயிற்சியாளர்) ஆகியோரிடம் விடை கேட்டோம்.

பயிற்சி வகுப்புகள் நடக்கப் போவது



உடைந்து போன ஒரு மண் பானையின் கழுத்து பூமியில் கிடந்தது. வழிப்போக்கன் ஒருவன் அதைக் கவனிக்காமல் மிதிக்கப் போனான்.

"மிதிக்காதே, மிதிக்காதே; நான் ஒரு பானையின் கழுத்து!'' என்று சத்தம் போட்டது அது.

வழிப் போக்கன் சிரித்தான்.

"இனி உனக்கென்ன வாழ்வு? உன்னை மிதித்தாலென்ன, உடைத்தாலென்ன? நீ இப்பொழுது பானையல்ல; உடைந்து போன அதன் கழுத்து!''

கழுத்து இதனைக் கேட்டுச் சிரித்தது:

"முன்பு நான் பானை; இப்போது கழுத்து; நாளை மீண்டும் களிமண்; பிறகு ஒரு புதிய பானை; நீ...?''

வழிப்போக்கன் யோசித்தான். அதைத் தொட்டுக் கும்பிட்டு விட்டுத் தன் வழியே போனான்.

— "கண்ணதாசனின் குட்டிக் கதைகள்''— நூலிலிருந்து.

—போளூர் எல். பாபு.



"வர,வர ஞாபகமறதி அதிகமாயிருக்கு, டாக்டர்''

''எனக்கே அப்படித்தான் இருக்கு. மெடிக்கல் காலேஜ்ல படிச்சதெல்லாம் மறந்து, மறந்து போயிடுது!''

—டி.என். பாலகிருஷ்ணன்.

முக்கிய நீச்சல் குளத்தில் இல்லையாம். 'வார்ம்-அப்'புக்காகக் கட்டப்பட்டுள்ள அதற்கு இணையான குளத்தில்தான் என்றார்கள். அதில் நீரின் ஆழம் ஆறரையிலிருந்து மூன்றரை அடியாகக் குறைக்கப்பட்டிருந்தது.

நீச்சல் குளத்தின் விளிம்பு வரை நீர் இருந்தால் நீச்சலடிக்கும்போது அதிகப்படி நீர் வெளியே வழிந்து ரீ-சைக்கிள் செய்யப்பட்டு மீண்டும் நீச்சல் குளத்துக்குள் வரும். ஆனால் நீரின் ஆழத்தைக் குறைத்திருப்பதால் நீர் சுத்தமாகாதே?

இதற்காக சக்திவாய்ந்த 'சக்ஷன்' கருவிகள் உள்ளன. பயிற்சியின்போது ஒவ்வொரு மாலையும் இந்தக் கருவியை நீரினுள் இறக்கி அழுக்குகளை வெளியேற்றி விடுவார்களாம். ப்ளீச்சிங் பவுடர் கலக்கவிருக்கிறார்கள்.

சிங்கப்பூர் போன்ற நாடுகளில் செய்வது போல் குளத்து நீரின் ஆழத்தைக் குறைக்காமல், குளத்தின் மட்டத்தையே அலுமினியம் மற்றும் ஃபைபர் தளம் போட்டு உயர்த்தினால் என்ன?

"ஐயோ அதுக்கு சுமார் எட்டு லட்சம் ரூபாயாவது தேவைப்படும்'' என்று பதில் வந்தது.

சர்வதேச விதிகளின்படி 'வார்மிங்-அப்' நீச்சல் குளத்துக்குக் குறைந்தபட்சம் இவ்வளவு ஆழம் இருக்க வேண்டுமென்று சட்டதிட்டம் எதுவுமில்லை. அப்படியிருக்க, முன்யோசனையில்லாமல் அதையும் வெகு ஆழமாக கட்டித் தொலைத்தவர்களை என்ன செய்யலாம்? வேளச்சேரி நீச்சல் குளத்தினருகே எந்த நீர் நிலையும் கிடையாது என்பதால் மெட்ரோ-வாட்டரை லாரிகளில் கொண்டு வந்து நிரப்ப வேண்டிய கட்டாயம் வேறு.

தினமும் காலை 8.15லிருந்து 11.15 வரையும், மாலை 3.15லிருந்து 5.15 வரையும் நீச்சல் பயிற்சி உண்டு. 13 நாள் பயிற்சி. ஒவ்வொரு நாளும் பயிற்சிக் காலம் ஒரு மணி நேரம். சௌகரியமான நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

எதிர்பார்ப்புக்கு மாறாக மிகக் குறைவான பேர்களே இந்தப் பயிற்சிகளில் சேர்ந்திருப்பது தெரிந்தது.

"முழு ஆண்டுப் பரீட்சை நேரம் பாருங்க. அதனால்தான். அடுத்த பேட்ச்சிலே பிக்-அப் ஆயிடும்'' என்றார் சாலமன் நம்பிக்கை இழக்காமல்.

சிறியதும் பெரிதுமாக பலவித சிக்கல்களைக் கடந்து எதிர்நீச்சல் போட்டு வருகிறது வேளச்சேரி ஸ்விம்மிங் பூல்!

-ஜி.எஸ்.எஸ்.

அக்கம்பக்க மாநிலங்கள்

● அவர் ஒரு வி.ஐ.பி.யின் மனைவி. சென்ற வருடம் இறந்து விட்டார். அவருக்கு ஒரு சிலை வைத்து, பிரம்மாண்டமான திறப்பு விழா நடத்தி, மரியாதை செலுத்தி இருக்கிறார் இன்னொரு வி.ஐ.பி. சிலை-பால் தாக்ரேவின் மனைவி மீனாதாக்ரேவுடையது. திறந்து வைத்து வணங்கியவர், மகாராஷ்டிர முதல்வர் ஜோஷி.

● சமீபத்தில் மும்பாய் சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து, நாநூறு பெண்களை போலீஸார் மீட்டு இருக்கிறார்கள். அவர்களை, மகளிர் இல்லங்களுக்கு அனுப்ப கோர்ட் உத்தரவிட்டும் அந்தப் பெண்கள் வேறு கோரிக்கை வைத்தார்கள், மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறைச் செயலாளரிடம். "எங்களுக்கு வேறு வேலை, பிழைப்பு கிடையாது. சிவப்பு விளக்குப் பகுதியில் எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. சந்தோஷமாக இருக்கிறோம். அங்கேயே திருப்பி அனுப்பி விடுங்கள்!"

செயலாளருக்கு மட்டுமா அதிர்ச்சி?

● மும்பாய் போலீஸார் ஒரு நூதன கொள்ளையில் இறங்கி இருக்கிறார்கள். டாக்ஸியில் போய்க்கொண்டே இருப்பது; யாராவது பணக்காரத் தோற்றத்துடன் வேறு டாக்ஸியில் பயணம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் குறுக்கே புகுந்து, நிறுத்தி விடுவார்கள். தம் அடையாள அட்டையைக் காட்டி, 'பரிசோதிக்க வேண்டும்' என்பார்கள். எப்படியும் அந்தப் பணக்காரரிடம் உள்ள பணத்துக்கு சரியான கணக்கு இருக்காது. அவர், இவரை 'சரிக்கட்ட' முயலுவார். பணம் கைமாறியதும் சிக்னல் தரப்பட்டு விடும்.

இதில் விசேஷம் என்னவென்றால் சஸ்பெண்ட் செய்யப்பட்ட போலீஸ்காரர்களும் லீவில் இருப்பவர்களும் கூட இந்தக் கொள்ளையில் இருப்பதுதான்.

இவர்கள் தொல்லை தாங்காமல் டாக்ஸி டிரைவர்களே, மும்பாய் போலீஸ் கமிஷனரிடம் புகார் செய்திருக்கிறார்கள்!

● தபால்காரர்கள் சைக்கிளில் சென்று கஷ்டப்படுவதைத் தவிர்க்க, மும்பாய் தபால் துறை ஒரு புதிய சௌகர்யம் செய்து தந்திருக்கிறது. மும்பாய் ஜி.பி.ஓ.வில் பணிபுரியும் இருநூறு தபால்காரர்களுக்கும் துரிதமாகப் பணியாற்ற மொபெட் தந்திருக்கிறார்கள். மற்ற நகரங்களிலும் பின்பற்றலாமே?

● மகாராஷ்டிர அரசும் மும்பாய்



• சிலை வைத்து வணங்கும் ஜோஷி

கார்ப்பரேஷனும் 'டாய்லட்' விஷயத்தில் உக்கிரமாக மோதிக் கொண்டிருக்கிறார்கள். விஷயம் இதுதான்: மும்பாய் குடிசை வாழ் மக்கள் வசதிக்காக, 200 கோடி செலவில்(உலக வங்கி உதவியுடன்) இருபதாயிரம் கழிப்பறைகள் கட்ட முடிவு செய்தது கார்ப்பரேஷன். மாநில அரசோ, இவர்களுக்கு அடுக்கு

அரசாங்கம் vs மாநகராட்சி!

மாடிக் கட்டடக் குடியிருப்பு திட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு, "இது இருக்கும் போது எதற்குத் தனியே கழிப்பறைகள்?" என்று கேட்கிறது. கார்ப்பரேஷன், "வீடு கட்டித்தரக் காலதாமதமாகும்; கழிப்பறை, அத்தியாவசியம்" என்று சொல்ல, வீடும் இன்றி, டாய்லெட்டும் இல்லாமல் போய்விடுமோ என்று கவலைப் படுகிறார்கள் மும்பாய் குடிசை வாழ் மக்கள்.

● கொசுராக ஒரு பெங்களூர் நியூஸ். பெங்களூரில், 'சிலிகான் வேலி' கம்பெனிகளில் பணிபுரிபவர்களிடையே ஒரு புது ஸ்டைல் பரவி வருகிறது. பெயர்களுக்குப் பின்னால் ஜாதிப் பெயர்களை இணைத்துக் கொள்வது போல, இவர்கள் தம் கம்பெனிப் பெயர்களைப் போட்டுக் கொள்கிறார்கள். நளினி டைட்டன், சுந்தர் விப்ரோ, தேவ் பாண்டே நிட்..... இதுபோல!

-கௌதம்

பரவசப்படுத்திய பாபா தரிசனம்!



மெய்சிலிர்த்த அனுபவங்கள் :

ஒருமுறை நானும் என் மனைவியும் அலுவலகம் முடிந்து ஸ்கூட்டரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். திடீரென்று அத்தனை வாகனங்களும் போலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டன. அவர்கள் தடுப்பதற்குள் எங்கள் ஸ்கூட்டர் முன்னால் சென்று விட்டதால் எங்களை விட்டு விட்டனர். குழப்பத்தோடு நாங்கள் சென்று கொண்டிருந்தபோது, எங்களின் இடப்புறமிருந்து சில போலீஸ்காரர்கள் பைக்கில் வர, அவர்கள் பின்னால் ஒரு கார் வந்தது. நாங்களும் அந்தக் காரின் கூடவே சென்று கொண்டிருந்தோம். அந்தக் காருக்குள் இருப்பதுதான் யார்? காருக்கு மிக அருகில் ஸ்கூட்டரைச் செலுத்தியபடி உள்ளே பார்த்தபோது, அவரும் எங்களைப் பார்த்தார். இந்தப் பார்வைச் சந்திப்பில் அப்படியே மெய் சிலிர்த்துப் போனோம். ஆம்; காருக்குள் இருந்தவர் பகவான் சத்யசாயிபாபா அவர்கள்தாம்! இப்படியொரு தரிசனம் கிடைக்குமென்று நாங்கள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை! பரவசம் அடங்க வெகுநேரமாயிற்று.

– ஆர். ரவிக்குமார், சென்னை – 91.

ராட்சச இசையிலும் ஒரு சிலிர்ப்பு!

எம்.ஜி.ஆர். நோய்வாய்ப்பட்டிருந்த சமயம். அவர் குணமடைய அனைத்து மக்களும் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த நேரம். திடீரென்று மதுரையிலிருந்த நண்பர் ஒருவர், "எம்.ஜி.ஆர். அவர்கள் நலம்பெறுவதற்காக 101 தவில் பிரார்த்தனை. உடனே புறப்பட்டு வரவும்" என்று அவசர அழைப்பு அனுப்பியிருந்தார். ஒரு தவில் ஓசையைக் கேட்பதற்கே இரு காதுகள் போதாது என்கிற நிலையில், ஒரே சமயத்தில் 101 தவில்கள் வாசிக்கப்பட்டால் என்ன ஆவது? யோசித்தபடியே புறப்பட்டுச் சென்றேன். குன்னக்குடி, வலையப்பட்டி, ஜெய்சங்கர் (நாதஸ்வரம்) என்று பல இசை விற்பன்னர்களும் வந்திருந்ததால் கூட்டத்திற்கும் குறைவில்லை!

முதலில் தனித்தனி ஆவர்த்தனமாக ஆலாபனை. ஒவ்வொருவரும் தனித் திறமை காட்டி வியக்க வைத்தனர். தலைமைவகித்த வலையப்பட்டி தம் பங்குக்கு ஒரு கலக்குக் கலக்க, மற்றவர்களும் வலையப்பட்டியைப் பின்பற்றி வாசிக்க... கடைசியில் எதிர்பார்த்த அந்த நேரமும் வந்தது... ஒன்று இரண்டாக, இரண்டு பத்தாக.... ஐம்பதாக... நூறாக.. நூற்றி ஒன்றாகத் தவில்கள் இசைத்த போது காதுகளுக்குள் இசை மழை! மழையென்று சொல்ல முடியாது – இடி மின்னலுடன் வானமே பொத்துக் கொண்டு ஊற்றியது! காதுகளுக்குள் நுழைந்த அந்த ராட்சச இசை மழையில் சிலிர்த்துக் கொண்ட மேனி, இயல்பு நிலைக்குத் திரும்ப வெகு நேரமானது. இதோ... பத்தாண்டுகள் கழித்து அந்த நிகழ்ச்சியை நினைக்கும்போதும் மெய்சிலிர்த்துப் போகிறது.

– இ.மா. சரவணன், திருச்சி – 21.

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.

முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.

ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

வாழ்க வளமுடன்! **PERFECT** வளர்க எங்களுடன்!

BENEFIT FUND LIMITED

In the business of providing Nidhi to the Needy

H.O.: 50, HALLS ROAD, *(Near Children's Hospital)*
EGMORE, MADRAS - 600 008. ✆ : 82 50 296

சிறப்பம்சங்கள்

- வருமானவரி மற்றும் முதலீடு சம்பந்தமான இலவச ஆலோசனை.
- சென்னையில் உள்ள அசையா சொத்துக்களின் பேரில் கடன் வசதி (புறநகர் உட்பட)
- வைப்புத் தொகை மற்றும் தங்க நகைகளின் பேரில் கடன் வசதி (மிக எளிய முறையில்)
- முழுவதும் கணிப்பொறி வசதியுடன் இயங்கும் அலுவலகம்.
- கவர்ச்சிகரமான வட்டிவிகிதம்

இயக்குநர் குழு

Dr. K. சுந்தரம்	:	நிதி மற்றும் வருமானவரி ஆலோசகர்
B.Sc., F.C.A., A.I.C.W.A., B.L., Ph.D.,	:	இயக்குநர் - P.B. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (இந்தியா) லிமிடெட்.
Dr. P.M. பழனி, M.D.	:	தலைவர், - ஸ்ரீ புரசைவாக்கம் பெர்மனென்ட் பண்ட் லிமிடெட்.
	:	இயக்குநர் - புரசைவாக்கம் சந்தா சங்க நிதி லிமிடெட்.
Dr. R. விவேகானந்தன்	:	தலைவர் - பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்.
B.Com., M.B.A.,	:	இயக்குநர் - S.I.C. ஹையர் பர்ச்சேஸ் & லீசிங் லிமிடெட்
S. முரளி B.Com., F.C.A.,	:	தணிக்கையாளர்
கோமதிசுந்தரம், B.Sc.,	:	இயக்குநர் - பார்க்டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்.
K. சத்திய நாராயணா	:	தொழில்
R. லக்ஷ்மணசுவாமி, B.A.,	:	இயக்குநர் – S.I.C. ஹையர் பர்ச்சேஸ் & லீசிங் லிமிடெட்

கிளைகள்

புரசைவாக்கம்	:	69, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (விவேக் & கோ எதிரில்) சென்னை-7. போன் : 64 14 903
பிராட்வே	:	202 பிராட்வே (பண்ணைடி அருகில்) சென்னை – 108. போன்: 52 33 099
அண்ணா நகர்	:	W-110 3வது அவன்யு (ரவுண்டானா அருகில்) சென்னை – 40 போன் – 62 85 387
தி.நகர்	:	22, ரங்கநாதன் தெரு, 2வது மாடியில் சென்னை – 17

Transaction with members only

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

MAFATLAL

AMG

SCHOOL UNIFORMS

தோற்றத்தை உயர்த்திடும்
சீருடை விஞ்ஞானம் - மபத்லால்



மபத்லால்
பள்ளிச் சீருடைகள்
சுருங்காதவை,
நிறம் மங்காதவை,
எந்த நிறத்திலும்,
எந்த வடிவத்திலும்
கிடைக்கப்
பெறுபவை.
ஒவ்வொரு
பள்ளியின்
தேவையையும்
பூர்த்தி
செய்பவை.

இலவசம்

ஸ்கூல் பேக்
(மதிப்பு ரூ. 120/-)

ரூ. 550 மதிப்புக்கு மபத்லால்
பள்ளிச் சீருடைகளை வாங்கும் போது இலவசம்.
இச்சலுகை 96 ஏப்ரல் 1 முதல் குறிப்பிட்ட காலம் வரை
தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரியில் மட்டுமே.

HIGHLY DURABLE
MAFATLAL
SCHOOL UNIFORMS
MOST ECONOMICAL

மார்க்கெட்டிங் டிவிஷன் :
மபத்லால் எஸ் ஏ இன்டெக்ஸ் லிமிடெட்
195-D, மேட்டுப்பாளையம் ரோடு, G.N. மில்ஸ் P.O., கோயமுத்தூர் - 641 029, தமிழ்நாடு.
போன் : 843001, 843002 ஃபேக்ஸ் : 91-422-843003
Bankers : The Federal Bank Ltd.

தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரியில் 1500-க்கும் மேற்பட்ட
மபத்லால் பேபிலி ஷாப்புகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற டீலர்கள் உள்ளனர்.

மபத்லால்
குடும்பத்தின் தேர்வு